21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

BANQUET & EVENT CENTER
IN GTA SQUARE MALL
• Birthday Party
• Special Events
• Upto 50 People
• Reasonable Price
Contact: 416.640.3535

நதி 21 | பாலம் 15 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2011

# போர்க்காலக் குற்றம் சனல் 4

சிறிலங்கா அரசின் இனப்படுகொலையை உலகிற்கு வெளிக்கொணர்ந்து சிறிலங்கா அரசை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்ற குறிக்கோளை யோனதன் மில்லர் சனல் 4 (Channel 4) செய்தி நிறுவனத்துடன் சேர்ந்து தற்போது கையில் எடுத்துள்ளார். அதில் அவர் படிப்படியாக முன்னேறி வருவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.



யோனதன் மில்லர் (Jonathan Miller) மேற்குலகில் பிரபல்யமான ஊடகமான இங்கிலாந்தின் சனல் 4 செய்தி நிறுவனத்தின் வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான ஊடகவியலாளர். இவர் பல நாடுகளில் நடைபெறும் உள்நாட்டு கலவரங்கள், பல இயற்கை அனர்த்தங்கள் என்பவற்றை Congo, இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்குச் சென்று விபரமாக தொகுத்து அளித்தவர். இவரது விவரண செய்திப்படங்களிற்கு பல விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர் 2003 இல் இருந்து சனல் 4 செய்தி நிறுவனத்தில் பணியாற்றுகிறார். அதற்கு முன்னர் BBC செய்தி நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசியாவிற்கான ஊடகவியலாளராக பணியாற்றியவர்.

கடந்த யூலை 27, 2011 சனல் 4 செய்தி நிறுவனம் வெளியிட்ட சிறிலங்காவின் "போர்க்கால குற்றம்" என்ற விவரண செய்திப் படத்தில் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகளின் பேட்டி வெளியாகியிருந்தது. அதில் ஒரு இராணுவ அதிகாரி கூறும்போது இலங்கை அதிபர் இராஜபக்சாவால் உயிரிற்கு உத்தரவாதம் அளித்து சரண் அடையுமாறு கூறப்பட்ட தமிழ் போராளிகளை சுட்டுக்கொல்லுமாறு, பாதுகாப்பு செயலாளரும் இலங்கை அதிபரின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்சா, பிரிகேடியர் சவேந்திர சில்வாவிற்கு உத்தரவிட்டார் என்று கூறினார்.

மற்றைய இராணுவ அதிகாரி பிரிகேடியர் சவேந்திர சில்வாவால் தலைமை தாங்கி வழிநடத்தப்பட்ட 58ஆம் பிரிவு இராணுவ அணியில் போர் முனையில் இறுதிப்போரின் போது அதிகாரியாக பணியாற்றியவர். அவர் முதற்தடவையாக சனல் 4 செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளிக்கும் போது பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய இராஜபக்சா, பிரிகேடியர் சவேந்திர சில்வாவிற்கு "எந்த வழியை பாவித்து என்றாலும் எல்லோரையும் முடித்துவிடும் படி" கட்டளையிட்டிருந்தார் என்று கூறினார். இந்தச் செய்தி இராணுவ வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட கொலைக் கான அனுமதிப்பத்திரம் (Licence to kill) ஆக இருந்தது. அவர் மேலும் தெரிவிக்கையில் தனது கண் எதிரிலேயே இலங்கை இராணுவம் ஆயுதம் ஏந்தியிராத பெண்களையும் பிள்ளைகளையும் சுட்டுக்கொன்றது என்றார்.

இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தால் இப்போர் வெற்றி கொள்ளப்பட்டு போராளிகள் முற்றாக அழிக்கப்பட்டார்கள். ஆனால் இப்போதுதான் முதன்முறையாக இலங்கை இராணுவ அதிகாரியால் இவ்வாறு ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது. இவ் இராணுவ அதிகாரிகளை சனல் 4 செய்தி நிறுவனத்தின் ஒரு ஊடகவியலாளர் இலங்கையில் இரகசிய மான ஓர் இடத்தில் பேட்டி கண்டார்.

அவர்களில் ஒருவர் பேட்டியளிக்கையில் சிறிலங்கா இராணுவம் பொதுமக்களை தேடிச்சென்று கொன்றது. அவர்கள் பொதுமக்களை தாறுமாறாக சுட்டார்கள், குத்திக்கொலை செய்தார்கள், பெண்களை கற்பழித்தார்கள், பெண்களின் மார்பகங்களை வெட்டி எறிந்தார்கள், நாக்குகளை வெட்டினார்கள். இவற்றை எல்லாம் எனது கண்களால் கண்டேன் என்றார். சனல் 4 நிருபர் நீங்கள் சிறிலங்கா இராணுவம் பொதுமக்களை சுட்டுக் கொன்றதை நேரடியாக பார்த்தீர்களா? என்று கேட்டார். அதற்கு பதிலளித்த இராணுவ அதிகாரி தான் சிறிலங்கா இராணுவப் பொதுமக்களை சுட்டுக் கொன்றதை நேரடியாக எனது கண்கள் மூலம் பார்த்தேன் என்றார். அவ் இராணுவ அதிகாரி கண்ணீர் தனது முகத்தில் வழிந்தோட அளித்த பேட்டியில் தான்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Great Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# போர்க்காலக்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பெண்களின் நிர்வாண உடல்களை தலைகள் இல்லாமலும், மற்றும் சில உறுப்புக்கள் இல்லாமலும் எல்லா இடங்களிலும் சிதறிக்கிடப்பதை பார்த்தேன் என்றார். இவற்றை விட அப்பாவி சிறுவர்கள் பெருமளவு கொலை செய்யப்பட்டு கிடப்பதையும் இன்றும் பலர் இரத்த வெள்ளத்தில் கிடப்பதையும் கண்டேன் என்றார்.

இவர்களது பேட்டியை தொடர்ந்து தற்போது இராணுவ சேவையில் இருந்து இளைப்பாறி மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டு சிறிலங்காவின் ஐக்கிய நாடுகள் சபைக்கான உதவித்தூதராக நியூயோர்க் நகரில் பணியாற்றிவரும் சவேந்திர சில்வாவை பேட்டிகாண சனல் 4 பலமுறை முயன்றும் பலனளிக்கவில்லை. இதைத் தொடர்ந்து அவர் வேலை செய்யும் நியூயோர்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிரடியாகச் சென்ற சனல் 4 நிருபர் யோனதன் மில்லர் உம் அவரது படப்பிடிப்பாளர் குழுவும் அவரை வேலைத்தளத்திற்கு செல்ல முன்னர் வழிமறித்து கேள்விகளைக் கேட்டனர்.

நீங்கள் “போர்க்கால குற்றம்” செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளீர்கள் என்றார் நிருபர். அதற்கு பதிலளித்த சவேந்திர சில்வா அப்படி என்னை குற்றம் சாட்டுபவர்கள் விடுதலைப் புலிகளும் அவர்களை ஆதரிப்பவர்களும் தான் என்றார். நிருபரின் அடுத்த கேள்வியான உங்களுக்கு கீழ் வேலை செய்த சிறிலங்கா இராணுவ அதிகாரி சொல்கிறார் கோத்தபாய சொல்லித்தான் நீங்களும் சரண் அடைய வந்தவர்களை கொலை செய்தீர்கள் என்று, அப்படித்தான் உண்மையாக நடந்ததா? எனக்கு கீழ் வேலை செய்த உயர் அதிகாரி ஒருவர் அவ்வாறு கூறியிருந்தால் உங்களால் அவரின் பெயரை கூறமுடியுமா? என்று சவேந்திர சில்வா திருப்பிக் கேட்டார். அவரின் பெயரை சனல் 4 செய்தி நிறுவனம் வெளிவிட மாட்டாது என்று நிருபர் கூறினார். அப்படியாயின் நீங்கள் அவரிடம்தான் போய் விளக்கம் கேட்க வேண்டும். ஏன் எனில் அவ்வாறு ஒன்றும் நடைபெறவில்லை என்றார் சவேந்திர சில்வா. உங்களது இராணுவ அதிகாரி, உங்களது இராணுவம் பொதுமக்களையும், சிறுவர்களையும் கொலை செய்தும் பெண்களை கற்பழித்ததாகவும் குற்றம் சாட்டுகிறதே என்று நிருபர் கேட்டார். அதற்கு பதிலளித்த சவேந்திர சில்வா அவ்வாறு கூறுவது சனல் 4 அதுவும் நீ மட்டும் தான் அவ்வாறு கூறுகின்றாய் வேறு ஒருவரும் அவ்வாறு கூறவில்லை. திரும்பத் திரும்ப யோனதன் மில்லரை பார்த்து நீ மட்டும் தான் அவ்வாறு கூறுகின்றாய் என்று கூறினார். அதற்கு பதிலளித்த நிருபர் தான் அவ்வாறு கூறவில்லை உங்களுக்கு கீழ் பணிபுரிந்த இராணுவ அதிகாரியே அவ்வாறு கூறினார் என்பதுடன் பேட்டி முடிவடைந்தது.

போரின் இறுதி நாட்களின் 130,000 தமிழ் பொதுமக்கள் இலங்கை தீவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள மிகவும் சிறிய ஒரு இடத்தில் அகப்பட்டு இருந்தார்கள். இலங்கை அரசாங்கமோ ஒரு பொதுமகனும் கொல்லப்படவில்லை என்று கூறுகின்றது. ஆனால் ஐக்கிய நாடுகள் சபை தற்போது 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்கிறது.

யோனதன் மில்லர் தனது “இலங்கையின் உள்நாட்டுபோர்” என்ற சிறப்பு அறிக்கையில் 26 வருடகாலம் நடைபெற்ற இந்த கொடுமரமான உள்நாட்டு கலகத்தில் 28ஆயிரம் போராளிகள் மற்றும் 100,000 பேரும் கொல்லப்பட்டுள்ளதாவும் 320,000 பேர் இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்த போரில் மோசமான போர்க்கால குற்றம் இழைக்கப்பட்டள்ளதாகவும் (Serious War Crimes) மனித சமுதாயத்திற்கு எதிரான குற்றம் கூட நடந்திருக்கலாம் (Possibly Crimes Aganist Humanity) எனவும் கூறுகிறார்.

எழுதுகோல் வாளை விட பலம் வாய்ந்தது."The pen is mightier than the sword" என்பது ஆங்கில எழுத்தாளர் Edward Bulwer - Lytton 1837 இல் எழுதிய வாக்கியம். தற்காலத்தில் ஊடகத்தின் வளர்ச்சி கணினி, தொலைக்காட்சி என பல விதமாக முன்னேறியிருப்பதால் ஊடகச்செய்தி அணு ஆயுதத்தை விடவும் பலம் வாய்ந்தது எனக் கூறலாம். அதுவும் மேற்குலக பிரதான ஊடகம் ஒன்று நினைத்தால் அதனால் இவ் உலகில் எந்த அரசாங்கத்தையும் ஆட்டம் காணச் செய்ய முடியும்.

# பழைமைவாதக்கட்சி வேட்பாளர் இலங்கை அதிபரிடம் தூது



ஸ்காபரோ றூஜ் ரிவர் தொகுதியில் பழமைவாதக்கட்சியின் சார்பில், ராதிகா சிற்சபேசனுக்கு எதிராக போட்டியிட்ட Marlene Gallyot அடுத்தமாதம் இலங்கைக்கு சென்று இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சாவை சந்திக்கவுள்ளதாக கூறியுள்ளார். தான் இலங்கை அதிபரை சந்திப்பதன் மூலம் தான் எவ்வாறு தமிழ் மக்களுக்கு உதவலாம் என அறியப்போவதாக அவர் கூறினார்.

இந்தியாவில் பிறந்த Marlene, 23 வருடங்களுக்கு முன்னர் கனடாவிற்கு வந்தவர். குடிவரவு சட்டத்துறையில் கல்வி கற்ற இவர் தற்போது மார்க்கம் நகரசபையில் பணியாற்றுகிறார். இவர் தமிழ்மொழியில் பேசவல்லவர். தன்னை

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

## வாசகர் எண்ணம்

யூலை 15, 2011 விளம்பரம் வழமை போலவே சுவாரசியமான விடயங்களை தனது பாணியில் கொண்டுவந்தது. சுவையான விடயங்களில் சிலவற்றை எண்ணம் பகுதியிற் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் போல் உள்ளது. முதலில் வைத்திய கலாநிதி லம்போதரன் அவர்களின் உலக முடிவுநாள் 2012? அபாரம்.! உலக முடிவு நாள் 2012 பற்றிச் சில கட்டுரைகள் தமிழிலும் நாங்கள் வாசித்துள்ளோம். நானும் இது பற்றி விளம்பரத்திலும் எழுதியிருந்தேன். பொது வாகவே அவை எல்லாம் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞானத்தன மான கட்டுரைகள். ஆனால் டாக்டர் லம்போதரன் அவர்களின் கட்டுரையோ மெய்ஞ்ஞான விடயங்களைக் கூறுகின்ற அருமையான கட்டுரை. ஆன்மீக விடயங்களை இந்நாளின் விஞ்ஞான (அறிவியல்) முலாமிட்டு இனிமையாகத் தந்துள்ளார். (உடலுக்குத் தேவையான கசப்பு மருந்துகளுக்கு இனிப்புப் பூச்சிட்டுத் தருவது போல). அவரது ஆரம்பப் பகுதியே அதி அற்புதமாக உள்ளது. எப்போது தொடர்ச்சியை வாசிக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கிறேன். உண்மையில் இருக்கிறோம் எனத்தான் எழுத வேண்டும். ஏனெனில் இது போன்ற கருத்தினைப் பலர் கொண்டுள்ளார்கள். அடுத்த இதழை ஆவலாக எதிர்பார்க்கின்றோம்.

விளம்பரத்திற்கும், டாக்டர் லம்போதரனுக்கும் நன்றியுடன் வாழ்த்துக்கள்.

அடுத்து சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதனின் நேரமில்லை. நேரமில்லை எனக் கூறாது, நேரமெடுத்து எழுதிய அழகிய, மிக யதார்த்தமான அக்கட்டுரையை நேரமில்லை என நானும் கூறாது முழுமையாகக் வாசித்து முடித்தேன். ஒருதடவை இரண்டு தடவைகள் அல்ல, மூன்று தடவைகள் வாசித்தேன். தனக்கே இயல்பான நகைச்சுவையை இழையோட விட்டு, மக்களைச் சிந்திக்கத் தூண்டும் விதமாக இருந்த அவரின் கட்டுரையை வாசித்த போது மனதிற்கு இதமாக இருந்தது. நேரமில்லை எனக் கூறாது, இந்த எண்ணங்கள் பகுதியில் இதனை எழுதுவதற்குக் கூட, இக்கட்டுரை என்னை உற்சாகப்படுத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது. நண்பரே நன்றி!

கணியன் பூங்குன்றனார், மிகத் தெளிவான இறுக்கமான கட்டுரை. சலிப்புத் தராத வண்ணம், நல்ல அழகான முறையில், தொடர்ச்சித் தன்மையாகப் பூங்குன்றனார் விபரத்தை தந்திருந்தார். மனதிற்கு நிறை வைத் தந்தது. நா.க. சிவராமலிங்கம் ஐயா அவர்கள், வாழ்வு பற்றி எளிமையாக இக்கட்டுரை ஊடாகக் கூறியிருப்பதும் இதற்குக் காரணமோ தெரியவில்லை. நன்றி!

குறிப்பிட இன்னமும் பல. வானரனின் சினிமாவும் சிவத்தம்பியும், வேங்கை விமர்சனம் என எல்லாமுமே நன்றாக அமைந்துள்ளன. விளம்பரம் நிறுவனத்தி னரை உற்சாகப்படுத்துகிறேன்.

அன்புடன் கனி.

### விளம்பரம் ஆசிரியருக்கு,

வணக்கம்,

அகணியின் நினைவாற்றல் 13ல் உணவுவகைகள் எப்படி நினைவாற்றலைத் தூண்ட வல்லமை கொண்டுள்ளது என்பதை விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தர். அதுபோல், நினைவாற்றலைக் குறைக்கவல்ல கோப்பி, மதுபானம், புகையிலை போன்றவற்றையும் விபரித்து இருந்தார். பழங்கள், காய்கறி வகைகள், தானியங்கள் நினைவாற்றலை அதிகரிக்க அதிக பங்கை வகித்துவருவதை மிகத் தெளிவாக எழுதியுள்ளார். இத்தொடர் கட்டுரையைத் தொடர்ந்து பிரசுரித்து வரும் விளம்பரத்துக்கும், அகணியவர்களுக்கும்

நன்றி.
பத்மநாதன் தம்பையா

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

| | |
|---|---|
| **பதிப்பாளர்:** | ராஜா மகேந்திரன் |
| **பத்திரிகை ஆசிரியர்:** | சத்தியா மகேந்திரன் |
| **ஊடகப்பொறுப்பாளர்:** | விஜே பாலன் |
| **தட்டச்சு:** | கலா |
| **அலுவலக முகாமையாளர்:** | நிலானி |
| **பதிப்பு:** | *Can Media Publishing Inc.* |

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# இலங்கையின் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில்...

# தமிழ் மக்கள் கண்துடைப்பு அபிவிருத்திக்கு வேட்டு!

# அதிகாரப் பகிர்வின் மூலமான அபிவிருத்திக்கு பச்சை விளக்கு!

**இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்**

இலங்கையில் நடந்து முடிந்துள்ள 65 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 20 சபைகளையும், தென்பகுதி மாவட்டங்களில் ஆளும் கட்சியாகிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 45 சபைகளையும் கைப்பற்றியிருக்கின்றன. ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஜேவிபி ஆகிய முக்கிய எதிர்க்கட்சிகளினால் எந்த ஒரு சபையையும் கைப்பற்ற முடியாமல் போய்விட்டது.

இந்தத் தேர்தல் முடிவுகள் குறிப்பாக வடமாகாணத்தின் தேர்தல் முடிவுகள் பலருக்கும் எதிர்பாராத ஒன்றாகவே அமைந்திருக்கின்றன. அதேவேளையில் வடக்குகிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியிருப்பது அரசாங்க தரப்பினருக்கு எரிச்சலையும் சீற்றத்தையுமே ஏற்படுத்தியிருக்கின்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும்கூட, தமிழ் மக்கள் இந்த அளவிற்குத் தேர்தலில் வாக்களிப்பார்களா என்பதில் நிச்சயமற்றவர்களாக சந்தேகம் கொண்டவர்களாகவே இருந்தனர். அதேவேளை, தமிழ் மக்கள் கணிசமான அளவில் ஆளும் கூட்டுக் கட்சிகளுக்கு வாக்களிப்பார்கள் என்பதில் அரசாங்கத் தரப்பினர் உறுதியாக இருந்தனர்.

நடைபெற்றது என்னவோ உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்தான். ஆனால் ஒரு பொதுத் தேர்தலுக்கு அளிக்கப்படுகின்ற முக்கியத்துவத்தையும்விட அதிகமான முக்கியத்துவம் அரசாங்கத்தினால் இந்தத் தேர்தலுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தத் தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியை தாங்கள் (அரசாங்கம்) அடைந்துவிட வேண்டும் என்பதே இதற்கான பிரதான காரணமாகும்.

இதற்காக அரசாங்கம் அங்கு பணத்தையும் பொருள் பண்டங்களையும் தண்ணீராக ஓடவிட்டிருந்தது. அது மட்டுமல்லாமல் அச்சுறுத்தல் என்ற ஆயுதமும் இங்கு தாராளமாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்தத் தேர்தலின் மூலமாகத் தமிழ் மக்கள் அரசாங்கத்தின் பக்கமே இருக்கின்றார்கள் என்பதைக் காட்டுவதற்கான உள் நோக்கத்தை அராசங்கம் கொண்டிருந்தது. அதுமட்டுமல்லாமல், அரசாங்கம் செய்தவைகளும், செய்பவைகளும் சரி யானதே, அதற்கு தமிழ் மக்களுடைய பூரணமான ஆதரவு இருக்கின்றது என்பதைக் காட்டுவதும் அராசங்கத்தின் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

இதற்காக, அபிவிருத்தி என்ற மாயையைக் காட்டி, இந்தத் தேர்தலில் மக்களின் மனங்களைக் கவர்ந்துவிடலாம் என்பதில் அரசாங்கம் தீவிரமாக இருந்தது. இதற்காகவே, இருபதுக்கும் மேற்பட்ட அமைச்சர்கள் அடங்கிய குழுவை, அரசாங்கம், யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப் பகுதிக்கும் அனுப்பி, அங்கு பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை தேர்தல் பிரசார காலத்தில் மேற்கொள்ளச் செய்திருந்தது.



இதற்கு முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வருமாகிய நாமல் ராஜபக்ச வன்னிப்பிரதேசத்தில் நிலை கொண்டு மறைமுக தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இது போதாதென்று சர்வ வல்லமை படைத்தவராகிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரருமாகிய பசில் ராஜபக்சவும் கூடிய நேரத்தை வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் செலவிட்டு மக்களின் மனங்களைக் கவர்வதற்கான முயற்சிகளில் மூழ்கியிருந்தார். இவர்களுக்குப் பக்கபலமாகவோ என்னவோதான் அமைச்சர் குழாமையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வடபகுதிக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அதுவும் போதாதென்று, வரலாற்றிலேயே முதற் தடவையாக நிறைவேற்று அதிகாரம் பெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வடக்கிற்கு விஜயம் செய்து மூன்று தினங்கள் அங்கு தங்கியிருந்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற போர்க்குற்றச் செயற்பாடுகள் குறித்து சர்வதேச அரங்கில் ஏற்பட்டுள்ள அதிர்வலைகளினால் அரசாங்கம் ஆடிப்போயிருக்கின்றது. இறுதி நேர யுத்தச் செயற்பாடுகள் தொடர்பாக வெளிப்படைத் தன்மை ஒன்றைக் காட்டுவதற்கான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும், ஐநாவும் வலியுறுத்தி வருகின்றன. இதனை உலக நாடுகள் பலவும் இப்போது பின்பற்றத் தொடங்கியிருக்கின்றன. இதனால் இலங்கை அரசாங்கம் ஒரு மோசமான சர்வதேச மட்டத்திலான நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கின்றது.

ஆனால், இத்தகைய ஒரு விசாரணை தேவையில்லை. அத்தகைய விசாரணை நடத்தப்பட வேண்டியதில்லை என அராசங்கம் திட்டவட்டமாக மறுத்துரைத்து வருகின்றது.

'இராணுவத்தினர் ஒரு கையில் மனிதாபிமானத்தையும் மறு கையில் துப்பாக்கியையும் ஏந்திய வண்ணம், பயங்கரவாதத்திற்கு எதிராக ஒரு மனிதாபிமான நடவடிக்கையையே மேற்கொண்டிருந்தார்கள். அங்கு பயங்கரவாதிகளே கொல்லப்பட்டார்கள், பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை. பொதுமக்களை விடுதலைப்புலிகளே கொன்றார்கள்' என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்.

ஆகவே இங்கு மனிதாபிமானமற்ற முறையில் இராணுவத்தினர் நடந்துகொள்ளாத காரணத்தினால் இறுதி நேர யுத்தச் செயற்பாடுகள் குறித்த விசாரணைகள் எதுவுமே தேவையில்லை. அத்துடன் இறுதி நேர யுத்தத்தின்போது என்ன நடந்தது என்பதுபற்றி அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு தொடர்ச்சியான ஒரு விசாரணையை மேற்கொண்டிருக்கின்றது. அதுவே போதுமானது என்று அரசாங்கம் வலியுறுத்தி கூறுகின்றது.

இறுதிநேர யுத்தச் செயற்பாடுகள் தொடர்பான விசாரணைகள் அவசியமில்லை என்ற தனது நிலைப்பாட்டிற்கு வலுவான ஆதரவைத் திரட்டுவதற்குரிய ஒரு சிறப்பான சந்தர்ப்பமாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசாங்கம் பயன்படுத்தத் துணிந்திருந்தது.

இந்த நிலையில் உள்ளூரில் போரில் சிக்கியிருந்தவர்களும், யுத்தத்தின் கண்கண்ட சாட்சிகளாகவும் இருக்கின்ற மக்கள் அரசாங்கத்தையே இந்தத் தேர்தலில் ஆதரித்திருக்கின்றார்கள், அவர்கள் அரசாங்கத்தின் பக்கமே இருக்கின்றார்கள் என்ற தோற்றத்தைக் காட்ட வேண்டும் என அரசாங்கம் விரும்பியது. இவ்வாறு காட்டுவதன் மூலம் சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள மோசமான ஒரு நெருக்கடி நிலைமையைச் சமாளித்துவிடலாம் என்பது

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# இந்தியாவில் முன்பு மக்கள் ஏன் புனிதத் தலங்களுக்குச் சென்று உயிர்விட விரும்பினார்கள்?



சத்குரு வாசுதேவ்

சத்குரு: முன்பெல்லாம் ஓரளவு விழிப்புணர்வு உள்ளவர்கள், தங்கள் இறுதிக்காலத்தில் குடும்பத்தை விட்டு விலகி ஆன்மீக ரீதியாக சக்தி வாய்ந்த ஒரு புனிதத்தலத்திற்குச் சென்று சாகும்வரை அங்கேயே தங்கிக் கொள்வார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் குடும்பத்தினர் மத்தியில் மரணமடைய விரும்பவில்லை. பற்றற்ற ஒரு நிலையில் மரணமடையவே விரும்பினார்கள். இந்த உடல், அதன் மீதான பற்று மற்றும் போராட்டங்கள் போன்ற எந்தத் தொடர்பும் இல்லாத நிலையில் மரணமடைய நினைத்தார்கள். ஏனெனில் குடும்பத்தின் சூழலில் இறப்பதென்பது மரணத்திற்கான ஒரு மகத்தான வழி அல்ல.

கொஞ்சம் அன்பு இருக்க வேண்டியதுதான்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

ஆனால் அதனுடன் நிறைய பற்றும் சேர்ந்து விடுகிறது. உங்கள் வாழ்வின் கடைசி வினாடியில் உங்கள் மகனையோ மகளையோ, கணவனையோ, மனைவியையோ பார்த்தால் வெறும் அன்பு மட்டும் வராது. இன்னும் பல விடயங்கள் தோன்றும். அவர்களுடைய முகங்கள் இந்த வாழ்வின் பல விடயங்களை உங்களுக்கு நினைவூட்டுகின்றன. அது அன்போடு நின்று விடுவதில்லை. ஏனென்றால் உறவுகள் என்பவை அன்பைச் சார்ந்தவை மட்டும் அல்ல. அதில் வேறு பல விடயங்கள் இருக்கின்றன. அவையனைத்தும் ஒவ்வொன்றாக வரும்.

எனவே மரணத்தைத் தொடும்போது குடும்ப சூழ்நிலையில் இருக்கவேண்டாம் என்று இந்தியாவில் எப்போதும் போதிக்கப்படுகிறது. எனவேதான் இந்தக் கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு குறிப்பிட்ட வயதைத் தாண்டியவுடன் குடும்பத்தை விட்டு விலகி பிரயாணத்தில் உள்ள பற்பல இடர்களையும் தாங்கி காசி போன்ற தலங்களுக்குச் சென்று அங்கேயே சாகும்வரை தங்கி உயிர்விட்டார்கள்.

# பழைமைவாத...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

சந்திக்க ஒத்துக்கொண்ட இலங்கை அதிபரிடம் தமிழ் மக்களுக்கு இலங்கையில் மேலதிக உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்க உள்ளதாகவும், கனடாவை தனது தூதுவராலயத்தின் அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறக்க விடுமாறு கேட்க உள்ளதாகவும் கூறினார்.

தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதாவை தனது சினேகிதி என கூறும் Marlene இலங்கைக்கு போகும் வழியில் தமிழ்நாட்டில் செல்வி ஜெயலலிதாவை சந்தித்து பேச உள்ளதாகவும் கூறினார். இலங்கைக்கு போக முன்னர் தான் கனேடிய அமைச்சர்களான Peter Kent (சுற்றுபுறச் சூழல் அமைச்சர்), John Baird (வெளிவிவகார அமைச்சர்) மற்றும் Jason Kenney (குடிவரவு அமைச்சர்) ஆகியோரை இம்மாதம் சந்திக்க உள்ளதாக கூறினார். கனேடிய அமைச்சின் அதிகாரி ஒருவர் Marlene இன் பயணம் தனிப்பட்ட பயணம் என்றும் அவர் கனேடிய அரசின் சார்பில் பயணிக்கவில்லை என்றும் கூறினார்.

புதிய ஜனநாயகக் கட்சி நிக்கோல் ரேமலை (Nycole Turmel) இடைக்காலத் தலைவராகத் தேர்ந்தெடுத் துள்ளார்கள். இவரை ஜக் லேற்றன் சிபார்சு செய்திருந்தார். இதனால் இவர் ஏகமனதாக புதிய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் கடந்த ஜூலை 27, 11 இல் இடைக்காலத்தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் உபதலைவர்களாக Libby Dabies உம் Thomas Mukair உம் தொடர்ந்து இருப்பார்கள்.

1942 இல் பிறந்த நிக்கோல் நாடாளுமன்ற உறுப்பினராக மே 2011 இல் நடைபெற்ற தேர்தலிலேயே முதன்முதலில் தெரிவு செய்யப்பட்டார். இவர் கியூபெக் மாகாணத்தின் Hull-Aylmer தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். இவர் கனடா Employment Centre இல் பணியாற்றியவர். Public Services Alliance என்ற அரச ஊழியர்களின் தொழிற்சங்கத்தின் தலைமைப்பதவியை ஏற்ற முதலாவது பெண்ணும் இவராவார்.

## நிக்கோல் ரேமல் - புதிய ஜனநாயகக் கட்சியின் இடைக்காலத்தலைவர்

புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக் லேய்ரன் ஜூலை 25, 2011 இல் தனக்கு புற்று நோய் மீண்டும் வந்துவிட்டதாகவும் தான் தற்காலிகமாக கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீங்குவதாகவும் அறிவித்தார். அவர் தற்போது Princess Margret வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் நாடாளுமன்றம் செப்ரெம்பர் 19இல் தொடங்கும் போது தன்னால் மீண்டும் வரமுடியுமென திடமாக நம்புவதாகக் கூறினார்.



இவர் 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆறு வருடங்களாக இந்த அரச தொழிற்சங்கத்தின் தலைவராக இருந்தவர்.

# இலங்கையின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தான் அரசாங்கத்தின் இந்தத் தேர்தலுக்கான வியூகமாகும்.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர்பான பிரசாரங்களும் சர்வதேச ரீதியிலான போக்குகளும் உடனடியாக நேரடியான தாக்கங்களை ஏற்படுத்தாவிட்டாலும், நாளடைவில் அதன் விளைவுகள் மோசமானதாக மாறலாம் என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கின்றது. அரசாங்கத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அல்லது பலருக்கு எதிராகப் போர்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களை சர்வதேச நீதிமன்றத்திலோ அல்லது வேறு ஏதேனும் ஒரு நீதிமன்றத்திலோ நிறுத்த முடியுமா என்பது குறித்து விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

அது சாத்தியமா இல்லையா என்பது ஒரு புறமிருக்க, சர்வதேச மனிதாபிமான சட்டவிதிகளை மீறி இலங்கை அரசாங்கமும், அதன் ஆயுதப் படைகளும் நடந்துகொண்டார்கள் என்ற பொதுவான ‘சர்வதேச மட்டத்திலான நிலைப்பாடு, இலங்கை அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்கெனவே கொண்டு வந்திருக்கின்றது. இதனால் சர்வதேசத்தின் அரசியல், பொருளாதார, மனிதாபிமானம், மனித உரிமைகள் போன்ற நிலைப்பாடுகளில் எந்த வேளையிலும் மிகவும் சிக்கலான ஒரு நிலைமையை இலங்கை அரசு சந்திக்க நேரிடலாம். இது அந்தச் சூழலையும் விடயத்தையும் பொருத்து மிகவும் பாதகமாக அமைந்துவிடக் கூடும். எனவே இது விடயத்தில் அரசாங்கம் விழிப்புடன் செயற்பட வேண்டிய தேவையை உணர்ந்திருக்கின்றது. இதனால்தான் வடக்கில் இடம்பெற்ற இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு அளவுக்கு மிஞ்சிய அரசியல் சாயம் பூசி அதற்கு அதிக முக்கியத்துவத்தை அளித்திருந்தது.

சர்வதேச ரீதியில் மட்டுமல்லாமல் உள்நாட்டிலும், ஜனாதிபதியும் அவரைச் சார்ந்தவர்களும் தனிக்காட்டு ராஜாவாகத் திகழ்வதற்கு இந்தத் தேர்தலின் மூலம் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

இனப்பிரச்சினை தொடர்பாக எழுந்த விவகாரங்களினாலேயே இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் அரசியல் ரீதியான விசேட கவனயீர்ப்பு ஏற்பட்டிருந்தது. இந்த இனப்பிரச்சினை விவகாரத்தை மிகவும் சாதுரியமாகவும், இராஜதந்திர ரீதியிலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பயங்கரவாத விடயமாக உருமாற்றி, தமிழர் தரப்பின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்தின் உயிர்நாடியாக விளங்கிய ஆயுதப் போராட்டத்தைக் கிள்ளி எறிந்துவிட்டார்.

இலங்கையில் இருந்து பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டார், இல்லாமல் செய்துவிட்டார் என்பதற்காக உள்நாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒரு வீர புருஷனாக, வீரம் நிறைந்த ஒரு கதாநாயகனாகக் கருதப்படுகின்றார். இந்தப் பிரதிமையை சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தி, அதனை நிரந்தரமாக நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காக சர்வதேச ரீதியிலான பிரசாரங்களும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

யுத்தம் முடிந்து இரண்டு வருடங்களாகிய நிலையிலும், யுத்த வெற்றியை நினைவு கூர்ந்து அதன் சிறப்பை வெளிப்படுத்துவதற்கான வெற்றி விழாக்களைக் கொண்டாடுகின்ற போக்கு இன்னும் மாறவில்லை. இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் நாட்டின் தென்பகுதியில் உள்ள பொதுமக்கள் மத்தியில் சரிவே இல்லாத ஓர் அரசியல் செல்வாக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கட்டியெழுப்பியிருக்கின்றார். ஆனால் அத்தகைய ஒரு சூழ்நிலையை வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் முஸ்லிம்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

# "ஓட்டை அடைக்கும் ஒபமாவும் குடியைக் கெடுக்கும் குடியரசுவாதிகளும்"

உலகின் தற்போதைய பலம் மிகுந்த நாடு அமெரிக்கா. பல நாடுகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், பிரச்சினைக்கும் காரணமாகவும் அமெரிக்கா இருந்துள்ளது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற அமைப்புக்கள் அனைத்தையும் தங்கள் கைக்குள் வைத்துள்ளது. பல நாடுகளின் உள்நாட்டு பிரச்சினைகளை மேலும் குழப்ப பணத்தை வாரி இறைத்துள்ளது. அப்படிப்பட்ட அமெரிக்காவிற்கு இன்று பயங்கர கடனில் நாடே மூழ்கும் நிலை.

ஆவணி இரண்டாம் நாள் இதற்குள் கடனை அடைப்பதற்கான காரணிகள் முன்வைக்கப் பட வேண்டும். இதனை சர்வதேச நாணய நிதியமும் வலியுறுத்தியுள்ளது. ஒபமாவிற்கும் றிப்பப்ளிக்கன் Speaker John Boehner ற்கும் பனிப் போர் மூண்டுள்ளது. ஒருவர் முன் வைக்கும் தீர்வுகளை மற்றவர் நிரா-கரிக்கின்றார். ஆவணி இரண்டில் தீர்வு காணப்படாவிடில் என்ன நடக்கும். ஊடகங்கள் கூறுவது போல் அமெரிக்கா ஒன்றும் கடலில் காணமால் போய் விடாது. அமெரிக்கா தனது வல்லரசு இடத்தை இழக்குமா? அதுவும் இல்லை. மற்ற பல முக்கிய நாடுகள் அமெரிக்காவின் நிலையிலேயே உள்ளது. அப்ப என்னதான் நடக்கும்.

**- ரதன் -**

சமூக கொடுப்பனவு காசோலைகளில் ஒபமா கையொப்பமிட தாமதமாகும். இதனால் பாதிக்கப்படப் போவது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள். தங்களது அன்றாட உணவுக்கு திண்டாட்டம். வாடகை போன்ற பல பிரச்சினைகளை இவர்கள் சந்திப்பார்கள்.

வட்டி வீதம் அதிகரிக்கும். இது மீண்டும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரையும், மத்திய தர மக்களையும் வங்குரோத்து நிலைக்கு தள்ளும். பலர் வீட்டு கடன் கட்ட முடியாமல் வீட்டை வங்கியிடமிழப்பர். வங்கியும் வீட்டை விற்க வேண்டும். அதற்கு மக்கள் தயாராக விடின் வங்கி மீண்டும் அரசாங்கத்தை நாடும். இல்லையேல் பல பணக்கார முதலைகள் இவ் வீடுகளை குறைந்த விலைக்கு வாங்குவர். 'அரசாங்க ஊழியர் வேலை இழப்பார்கள்' 'அமெரிக்க வங்கிகளில் முதலீடு செய்தோர் தமது பணத்தை மீளப் பெறுவார்கள்.' அமெரிக்க நிதிப் பொருட்களின் தரமிறக்கப்படும்.

**'டொலரின் பெறுமதி குறையும்'**




கடனின் ஆரம்பம் எங்கு? இதனை ஆய்வு செய்வதற்கு முன்பு வெகு அண்மைக் காலங்களில் இக்கடன் அதிகரிப்பிற்கான காரணங்களை பார்க்கலாம். Bear Stearns என்ற முதலீட்டு வங்கிக்கு 29.5 பில்லியன் டொலர்களை அரசு வாங்கியுள்ளது. இந்த நிறுவனம் விட்ட தவறுகளுக்காக அமெரிக்க அரசு கொடுத்த விலையே இது. இதைத் தவிர Bank of Americaவிற்கு 97.2 பில்லியனையும், மோட்டார் கார் நிறுவனங்களிற்கு 97.4 பில்லியனையும் American International Group என்ற காப்புறுதி நிறுவனத்திற்கு 112 பில்லியன்களையும் City Group க்கு 235 பில்லியனையும், GEக்கு 139 பில்லியனையும் இந்நிறுவனங்களை காப்பாற்றுவதற்காக கொடுத்துள்ளது. இந்நிறுவனங்கள் இப் பணத்தை பெற்றபோது வழங்கிய உறுதி களை காப்பாற்றவில்லை. இந்நிறுவனங்கள் பல இலட்சம் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளது. இவர்களுக்கான தற்போதைய சமூக கொடுப்பனவும் அரசிடமே உள்ளது. வீட்டுக்கடனை அடைக்க முடியாதவர்களுக்காக வங்கிகளுக்கு மேலும் 300 பில்லியனை வழங்கியுள்ளது. Troubled Asset Relief Program – TARPFF 700 பில்லியனும் வழங்கப்பட்டுள்ளது. இருந்தும் என்ன பயன்? எதுவும் நடக்கவில்லை. இவற்றை விட ஈராக் போருக்கான செலவு, இதில் காயமடைந்த, இறந்தவர்களுக்கான தொகை, லிபியப் போரில் அமெரிக்காவின் பங்கு போன்றனவற்றின் கணக்குகள் தெளிவாக முன்வைக்கப்படவில்லை. கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஊடகங்கள் ஈராக் போரில் பங்குபற்றிய வீரர்கள் வீடற்றவர் களாகவும், வேலையற்றும் உள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளன. இது வியட்நாம் போரின் பின்னரும் ஏற்பட்டது.

ஒபாமாவின் கனவான தேசியமயமாக்கப்பட்ட மருத்துவ சேவை என்பது கனவாகிப் போய்விட்டது. முன்னாள் அமெரிக்க இராணுவ தலைமை அதிகாரியும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான Dwight D. Eisenhower ன் ஆட்சிக் காலத்தில் சமூக கொடுப்பனவுகளை விட வேறு எந்த அரச உதவியும் மக்களுக்கு கிடைக்கவில்லை. இவரது குடும்பம் ஜேர்மனியில் இருந்து அமெரிக்கா வந்தது. இவர் அமெரிக்காவில் பிறந்தார். இவரது காலத்தில் அமெரிக்க கடன்கள் குறைக்கப்பட்டு சோவியத் யூனியனுக்கு எதிராக புதிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. இது போன்ற ஆட்சியையே இன்று அமெரிக்க ஆய்வாளர்கள் ஒபமாவை வலியுறுத்து கின்றார்கள். இக்கடனுக்கு காரணமானவர் கள் Wall Street Companies. இவர்கள் இக்கடனை அடைப்பதற்கு என்ன பங்கு வகிக்கப் போகின்றார்கள். இதனைப் பற்றி எதுவுமே இந்த ஆய்வாளர்கள் கூறவில்லை. ஒபமா முன்வைக்கும் அதிக வரிகளால் பாதிக்கப்படப்போபவர்கள் இவர்களே. இதனால் இவர்கள் இந்த வரி அதிகரிப்பை எதிர்க்கின்றார்கள்.

Debt Ceiling என்ற பதம் அடிக்கடி ஊடகங்களில் அடிபடுகின்றது. கடன் எல்லை தற்பொழுது $14.3 Trillion ஆகவுள்ளது. இதனை கொங்கிரசே தீர்மானிக்கின்றது. தற்சமயம் இவ்வெல்லையை சுமார் 2.4 ரில்லியனால் அதிகரிக்க றிப்பப்ளிக்கனும் டெமோகிரற்ஸம் கருத்தளவில் ஒத்துக் கொள்கின்றன. மற்றைய விடயங்களில் இரு கட்சிகளும் போட்டி போடுகின்றன.

ஒவ்வொரு தனி மனிதனது கடன் வாங்கும்-கொடுக்கும் திறனை ஆய்வு செய்து புள்ளிகள் வழங்குவதை ஆங்கிலத்தில் Credit Rating எனக் கூறுவார்கள். Equifax, Transunion Canada போன்ற நிறுவனங்கள் தனி நபர்களின் Credit Rating ஐ வெளியிடுகின்றன. அதே போன்று நாடுகளின் Credit Rating ஐ ஆய்வு செய்யும் நிறுவனங்கள் உள்ளன. உலகின் மிக முக்கிய மூன்று நிறுவனங்களின் இரண்டு அமெரிக்காவில் உள்ளது. Standard & Poor's (S&P), Moody's ஆகியவையே அவை. மூன்றாவது Fitch Group. இது லண்டனை தலைமையகமாகக் கொண்டுள்ளது. AAA Rating என்பது தரத்தில் அதாவது மிகச் சிறந்த நாடுகளைக் குறிக்கும். இந்த புள்ளியை, அதாவது தரத்தைப் பெற்றுள்ள நாடுகள் மிகச் சிலவே. அவை Australia, Austria, Canada, Denmark, Finland, France, Germany, Hong Kong, Netherlands, Norway, Singapore, Sweden, Switzerland, United Kingdom, U.S.

(India – BBB-, Sri Lanka – B+)

அமெரிக்காவின் கடனானது மொத்த தேசிய உற்பத்தியின் 96.3 வீதம் என சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. மிக மோசமான 12 நாடுகளுள் அமெரிக்காவும் ஒன்று என சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்கா இப்பிரச்சினையை தீர்க்காவிடின் தரமிறக்கப்படும் என்பதே பலரது எதிர்பார்ப்பு. ஆனால் பல பொருளியல் வல்லுனர்கள் இதனை மறுக்கின்றனர். அமெரிக்கா தனது தரத்தையும் இடத்தையும் இழக்காது. அமெரிக்காவில் நடைபெறுவது ஒரு அரசியல் போட்டியே. எது எப்படியிருப்பினும் அமெரிக்கா தனது பொருளாதார பிரச்சினை-களை உடனடியாக தீர்க்காவிட்டால் மிக விரைவில் பல பிரச்சினைகளை சந்திக்கும். வேலையற்றோர் வீதம் ஒன்பதைத் தாண்டிவிட்டது. தங்களது அரசியலை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு மக்களைப் பற்றி சிந்திப்பது நல்லது. இது அமெரிக்க அரசியல்வாதிகளுக்கு ஒரு புதிய சவாலே.

## *No-Way* இல் நோர்வே

உலகின் அமைதியான நாடுகளுள் ஒன்று நோர்வே. உலக சமாதானத்துக்காக குரல் கொடுக்கும் நாடுகளுள் ஒன்று. அமெரிக்காவின் ஊது குழல் என்ற பெயரும் நோர்வேக்குண்டு. தமிழ் மக்கள் கணிசமான அளவில் வாழும் நாடுகளுள் நோர்வேயும் ஒன்று. தமிழ் மக்கள் மாத்திரமல்லாது பல நாட்டைச் சேர்ந்த மக்களும் வாழும் நாடு. ஆடி 22ம் நாள் ஏற்பட்ட தாக்குதலில் 91 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் இத் தாக்குதல் முஸ்லீம் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டது என்ற கருத்தே எழுந்தது. பின்னர் 'ஐரோப்பிய விடுதலை இயக்கம்' என்ற அமைப்பின் Anders Behring Breivik என்பவரால் நடத்தப்பட்டது. இவர்மீது நடை-பெற்ற விசாரணையின் போது ஊடகங்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.718.3909**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# இந்தியா- இங்கிலாந்து டெஸ்ட் துளிகள்

# விளையாட்டுத் தகவல்கள் 311

லார்ட்ஸில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 196 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது. இதில் நிகழ்த்தப்பட்ட சாதனை விவரங்கள்:

இந்தியாவுக்கு எதிராக 100-வது டெஸ்ட் போட்டியில் விளையாடிய இங்கிலாந்து அணி, தனது 35-வது வெற்றியைப் பதிவு செய்தது. இந்தியாவுக்கு எதிராக இங்கிலாந்து 19 தோல்விகளை சந்தித்துள்ளது. 46 ஆட்டங்கள் டிராவில் முடிந்துள்ளன. இங்கிலாந்தின் ஆண்டர்சன், இந்தியாவுக்கு எதிராக இரண்டாவது முறையாக 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சர்வதேச அளவில் 11-வது முறையாக இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். சொந்த மண்ணில் 150 விக்கெட்டுகளை வீழ்த்தினார் ஆண்டர்சன். 36-வது போட்டியில் அவர் இந்த சாதனையை எட்டியுள்ளார். டெஸ்ட் போட்டியில் 6-வது முறையாக சச்சினை வீழ்த்தினார் ஆண்டர்சன். சுரேஷ் ரெய்னா டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக தனது முதல் அரைசதத்தைப் பதிவு செய்தார். இங்கிலாந்தின் பீட்டர்சன் டெஸ்ட் போட்டியில் 7-வது முறையாகவும், இந்தியாவுக்கு எதிராக இரண்டாவது முறையாகவும் ஆட்டநாயகன் விருதை வென்றார். லட்சுமண், லார்ட்ஸில் இரண்டாவது முறையாக அரை சதமடித்தார். இதன்மூலம் இங்கிலாந்துக்கு எதிராக 5 அரைசதத்தையும், சர்வேதச அளவில் 53-வது அரைசதத்தையும் பதிவு செய்தார். லார்ஸ்லில் 9 இன்னிங்ஸில் விளையாடியுள்ள சச்சின், இதுவரை ஒரு அரைசதம்கூட அடிக்கவில்லை. அவர் இங்கு மொத்தம் 195 ரன்கள் மட்டுமே எடுத்துள்ளார். ஸ்டிராஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி இதுவரை 36 போட்டிகளில் விளையாடி 18 வெற்றி, 5 தோல்வி, 13 டிராவைப் பதிவு செய்துள்ளது. லார்ஸ்லில் இங்கிலாந்து அணி 121 போட்டிகளில் விளையாடியுள்ளது. அதில் 47 வெற்றி, 27 தோல்வி, 47 டிராவைப் பதிவு செய்துள்ளது. இந்திய அணி லார்ட்ஸில் 16 போட்டிகளில் விளையாடியுள்ளது. அதில் ஒரு போட்டியில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது. 11 தோல்விகளையும், 4 டிராவையும் பதிவு செய்துள்ளது. ஸ்டூவர்ட் பிராட், இந்தியாவுக்கு எதிராக 7 விக்கெட்டுகளை வீழ்த்திய தன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது சிறப்பான பந்துவீச்சைப் பதிவு செய்தார்.

## 196 ரன்களில் இந்தியா தோல்வி

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 196 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. 458 ரன்களை வெற்றி இலக்காகக் கொண்டு 2-வது இன்னிங்ஸ் ஆடிய இந்திய அணி 261 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இந்த டெஸ்டில் வெற்றி பெற்றதன் மூலம் 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் ரெய்னா, லட்சுமண், திராவிட் ஆகியோர் மட்டும் ஓரளவுக்கு தாக்குப் பிடித்து ஆடினர். மற்ற வீரர்களால் இங்கிலாந்தின் பந்து வீச்சில் நிலைத்து நின்று ஆட முடியவில்லை. லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 1 விக்கெட் இழப்புக்கு 80 ரன்கள் என்ற 4-வது நாள் ஸ்கோருடன் இந்திய அணி திங்கள்கிழமை பேட்டிங்கை தொடங்கியது. பீட்டர்சன் ஆட்ட நாயகன்: இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸில் 202 ரன்கள் எடுத்த கெவின் பீட்டர்சன் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.இரு அணிகளுக்கு இடையிலான அடுத்த டெஸ்ட், டிரென்ட் பிரிட்ஜில் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது. வீரர்கள் காயமடைந்ததால் தோனி ஜாகீர்கான், கம்பீர் ஆகியோர் காயமடைந்ததாலும், காய்ச்சலால் சச்சின் சரியாக விளையாட முடியாததாலும் தோல்வியடைந்து விட்டதாக இந்திய அணி கேப்டன் தோனி தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கூறியது: முதல் இன்னிங்ஸிலேயே ஜாகீர்கான் காயமடைந்து வெளியேறியது பெரிய பின்னடைவு. தொடர்ந்து கம்பீர் காயமடைந்தார். சச்சின் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். இதனால் இரண்டாவது இன்னிங்ஸில் பேட்டிங் வரிசையையே மாற்ற வேண்டியதாயிற்று. இன்னும் 3 டெஸ்ட் போட்டிகள் உள்ளன, அதில் வெல்வோம் என்றார் தோனி. 'சிறப்பான ஆட்டத்துக்கு கிடைத்த வெற்றி' எங்கள் அணியின் சிறப்பான ஆட்டத்துக்கு கிடைத்த வெற்றி இது. பேட்டிங், பந்து வீச்சு என அனைத்திலும் எங்கள் அணி சிறப்பாக செயல்பட்டது. இந்திய அணி பலம் வாய்ந்தது. அவர்களையே வெற்றி பெற்ற எங்கள் வீரர்களை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். அடுத்து வரும் போட்டிகளிலும் வென்று தொடரைக் கைப்பற்றுவோம் என்றார் இங்கிலாந்து கேப்டன் ஆண்ட்ரு ஸ்டிராஸ்.

## உலக கோப்பை கால்பந்து போட்டி: ஜப்பான் அணி சாம்பியன்

உலககோப்பை மகளிர் கால்பந்து இறுதி ஆட்டத்தில் ஜப்பான் - அமெரிக்கா அணிகள் மோதின. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தன. இதையடுத்து கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டது. இதில் இரு அணிகளும் மீண்டும் தலா ஒரு கோல் அடித்ததால் 2-2 என்ற நிலையில் ஆட்டம் முடிந்தது. இதையடுத்து பெனால்டிஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் 3-1 என்ற கணக்கில் ஜப்பான் சாம்பியன் பட்டம் வென்றது. இது ஜப்பானுக்கு முதல் பட்டமாகும்.

## கோப்பா அமெரிக்கா கால்பந்து:

கோப்பா அமெரிக்கா கால்பந்து அரையிறுதியில் பெனால்ட்டி சூட் அவுட் முறையில் வெனிசுலா அணியை பராகுவே அணி 5- 3 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி இறுதியில் உருகுவேயைச் சந்திக்கிறது. ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல்களை அடிக்க முடியவில்லை. பராகுவே அணி, பிரேசில் அணியை காலிறுதியில் பெனால்டியில் வீழ்த்தியது. அதே போல லத்தீன் அமெரிக்கக் கால்பந்தின் மற்றொரு ஜெயண்ட் ஆன அர்ஜென்டினா அணியை உருகுவே அணி காலிறுதியில் வீழ்த்தி வீட்டுக்கு அனுப்பியது. இந்த இரு அணிகளும் இறுதிப்போட்டியில் மோதுகிறது.

## கோப்பா அமெரிக்கா கோப்பை: உருகுவே 15 வது முறை சாம்பியன்

அர்ஜென்டினாவில் நடைபெற்ற கோப்பா அமெரிக்கா கால்பந்து தொடரின் இறுதி ஆட்டத்தில் பராகுவே அணியை 3- 0 என்று வீழ்த்தி உருகுவே அணி 15 வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது. இரண்டு கோல்களை டீகோ பர்லான் அடிக்க 1 கோலை சுவாரேஸ் அடித்து வெற்றி பெறச் செய்தனர். பிரேசில், அர்ஜென்டினா போன்ற ஜாம்பவான் அணிகளைப் பின்னுக்குத் தள்ளி உலகக் கோப்பை அரையிறுதி வரை வந்த உருகுவே அணி இப்போது கோப்பா அமெரிக்க சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது. சுவாரேஸ் 12 வது நிமிடத்தில் கோல் அடிக்க, பர்லான் 42 வது நிமிடத்திலும் பிறகு கடைசி நிமிடத்திலும் கோல்களை அடித்தார். பிரேசில் அணி கோப்பா அமெரிக்கா சாம்பியன் பட்டங்களை கடந்த 5 முறையில் 4 முறை வென்று மொத்தம் 8 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. அர்ஜென்டினா அணி 14 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. இப்போது உருகுவே அணி அதனை முறியடித்து 15 வது முறையாக வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோபா கால்பந்து போட்டியில் பெரு அணி சாதனை

அர்ஜென்டினாவில் நடந்த கோபா அமெரிக்கா கால்பந்து போட்டியில் பெரு அணி 3வது இடம்பிடித்தது. அந்த அணி வெனிசுலாவை 4-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. கோபா போட்டியில் பெற்ற வெற்றிகள் தமது அணிக்கு புதிய நம்பிக்கையை தந்து இருப்பதாக கோல் கீப்பர் ரவுல் பெர்னான்டஸ் கூறியுள்ளார்.

28 ஆண்டுகளுக்கு பின்னர் பெரு அணி இந்த கோபா வெற்றி மேடை பகுதிக்கு வந்துள்ளது. கோபா போட்டியில் சாதனையுடன் நாடு திரும்பி உள்ள பெரு வீரர்களை மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர். இந்த வெற்றிக்கு காரணமாக இருந்த வீரர்களுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். அணி பயிற்சியாளர் செர்கியோ மார்கிரெய்ன் வழிகாட்டுதலும் வீரர்களின் ஒருங்கிணைப்பும் காரணம் என அவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். வெனிசுலாவிற்கு எதிராக ஆடிய ஆட்டத்தில் பெரு வீரரான பாலோ கியூரோ தொடர்ந்து 3 கோல் அடித்து ஹாட்ரிக் சாதனை நிகழ்த்தினார். அவரது அந்த சாதனை ஆட்டத்தின் போக்கை பெரிதும் மாற்றியது என்று கோல் கீப்பர் ரவுல் பெர்னானன்டஸ் கூறினார். மேலும் 2014ஆம் ஆண்டு பிரேசில் உலக கோப்பை போட்டிக்கான தகுதி யாளர்களை பெற்று இருக்கிறோம் என்றார்.

## கால்பந்து: ரூனி ஹாட்ரிக்

வெய்னி ரூனி அடித்த ஹாட்ரிக் கோலால் மான்செஸ்டர் யுனைடெட் அணி 7-0 கோல் கணக்கில் அமெரிக்காவின் சியாட்டில் சவுண்டர்ஸ் அணியை தோற்கடித்தது. இந்த ஆட்டம் நட்பு ரீதியிலான ஆட்டம் தான் இருந்தாலும் அடுத்தடுத்து ரூனி அடித்த 3 கோல்கள் அமெரிக்க ரசிகர்களை மட்டுமல்ல எதிரணி வீரர்களையும் திக்குமுக்காடச் செய்தது. பிரிமியர் லீக் கால்பந்து போட்டி தொடங்க இன்னும் 3 வாரம் உள்ள நிலையில், மான்செஸ்டர் யுனைடெட் அணி அமெரிக்காவில் பயிற்சி ஆட்டங்களை ஆடுகிறது. அந்த அணி சிகாகோ, நியூ ஜெர்சி, வாஷிங்டன் நகரங்களுக்கும் பயணிக்க உள்ளது. பெர்குசனின் மான்செஸ்டர் யுனைடெட் ஆட்டத்தை மைதானத்தில் இருந்த 67 ஆயிரம் ரசிகர்கள் பாராட்டினர். அந்த ரசிகர்களை ஏமாற்றாத வகையில் ஆட்டத்தின் 2 வது பாதியில் களம் இறங்கிய வெய்னி ரூனி 18 நிமிட நேரத்தில் 3 கோல்கள் அடித்தார்.

## லிவர்பூல் - ஆர்சனல் ஆட்டம் மோசம்: மார்க் லாரன்சன் விளாசல்

லிவர்பூல் அணியும், ஆர்சனல் அணியும் உரிய ஆட்டத்திறனுடன் இல்லை. இந்த அணிகள் வரவிருக்கும் பார்கிளேஸ் பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில் வலது இடத்திற்கு தான் மோத வேண்டும் என முன்னாள் வீரர் மார்க் லாரன்சன் விமர்சிக்கிறார்.

லாரன்சன், லிவர் அணியின் தற்காப்பு வீரராக ஆடியவர் ஆவார். லீக் போட்டியில் முன்னிலை வகிக்கும் 3 அணிகளாக மான்செஸ்டர் யுனைடெட், மான்செஸ்டர் சிட்டி, செல்சா ஆகிய அணிகள் உள்ளன. எனவே 4 வது இடத்தை பெறுவதில் லிவர்பூல், ஆர்சனல் அணிகள் யோசிக்க வேண்டும். ஆர்சனல் அணியில் வலுவான மத்திய பின்கள வீரர்கள் இல்லை. அந்த அணிக்கு இன்னும் உரியத் தலைவர் கிடைக்கவில்லை, ஆர்சனல் அணிக்கு அனுபவம் வாய்ந்த கோல்கீப்பர் தேவை என்றும் 54 வயது லாரன்சன் தெரிவித்தார்.

ஆர்சனல் அணி வடக்கு லண்டனில் உள்ள கிலிப்க்கும் லிவர்பூலின் சிவப்பு சட்டை அணியில் ஸ்டீவர்ட் டெலனிங், சார்லி ஆடம், ஜோர்டன் ஹென்டர்சன் புதிதாக இடம் பிடித்து உள்ளனர். இருந்தாலும் லிவர்பூல் சவால் எழுப்பும் அணியாக இல்லை என லாரன்சன் தெரிவித்தார்.



எஸ். கணேஷ்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

# அடமானம்

கனடாவில் ஆதனம் வாங்குதல், விற்றல் என்பது முக்கியமான நடைமுறைத் தேவையான நிகழ்வு. கனடா முழுவதும் ஏறக்குறைய 100,000 வீட்டுமுகவர்கள், சட்ட பூர்வமாக ஆதனம் விற்று வாங்க உரிமை பெற்றுள்ளார்கள். இவர்கள் பகுதி நேரமாக அல்லது முழுநேரமாக தொழில் புரிபவராக இருக்கமுடியும். ஆதனம் வாங்குபவர்களில் மிகக்கூடியவர்கள் அடமானக்கடன் பெற்றே ஆதனத்தை உரிமையாக்கி

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 346**

கொள்கின்றார்கள். இவர்களில் அனேகர் ஆதனத்தின் பெறுமதியின் 20% இற்கு குறைவான முதலீடு செய்து வாங்குகின்றார்கள். 20% இற்கு குறைவான முதலீடு செய்யும்போது, அடமானக்கடன் கொடுக்கும் நிறுவனத்தின் நிதியை பாதுகாப்பதற்காக காப்புறுதி பெறப்படுதல் வேண்டும். இந்தக் காப்புறுதி ஆதனம் பெறுபவரே செலுத்துதல் வேண்டும். காப்புறுதியின் பெறுமதி முதலீட்டின் பெறுமானத்தில் தங்கியுள்ளது. இன்றைய நிலவரப்படி 5% இற்கு குறைவாக முதலீடு (?) செய்து ஆதனம் வாங்கமுடியாது. 5% இற்கும் 20% இடையிலான பெறுமதியைப் பொறுத்து அடமானக்காப்புறுதியின் பெறுமானம் மாறுபடும். 5% முதலீடு செய்யும்போது இந்தப் பெறுமதி 2.75% ஆகக் காணப்படும். முதலீடு அதிகரிக்க இப்பெறுமதி குறைந்து 20% முதலீடு செய்யும்போது இந்தக் காப்புறுதியின் பெறுமதி பூச்சியமாகும்.

கனடாவில் மூன்று நிறுவனங்கள் அடமானக்கடனிற்கு காப்புறுதி வழங்கி வருகின்றன. இவற்றில் முக்கியமானதும் கனடிய மத்திய அரசினால் நிர்வாகிப்பதுமான CMHC (Canada Mortgage and Housing corporation), Genworth MI Canada Inc. மற்றும் Canada Guranty Mortgage Insuracne ஆகும். இந்த மூன்று நிறுவனங்களில் பின்னாலான இரண்டும் தனிப்பட்டவர்களால் உரிமை கொண்டது.

2010 ஆம் ஆண்டில் மட்டும் CMHC நிறுவனம் 643,991 ஆதனங்களிற்கு காப்புறுதி செய்துள்ளது. இந்தப் பெறுமதி எதிர்பார்த்த அளவை விட குறைந்ததாகக் காணப்படுகின்றது. ஆனால் CMHC இன் வருடாந்த வருமானம் அல்லது ஆதாயம் அதிகரித்தே உள்ளது. 2010ஆம் ஆண்டு மட்டும் $1.77 பில்லியன் அளவு பணம் ஆதாயம் அடைந்துள்ளது.

ஆதனத்தின் விலை அதிகரிப்பால் பெறப்பட்ட காப்புறுதியின் பெறுமதி அதிகரிப்பே இந்த ஆதாய அதிகரிப்பிற்கு காரணமாகும். மேலும் குறிப்பாக கடன்கொடுத்த நிறுவனங்களின் இழப்பு குறைந்தால் CMHC வழங்க வேண்டிய காப்புறுதியின் அளவு குறைந்துள்ளது. குறைந்தளவு காப்புறுதி பெற்றதற்கு மேலதிக காரணத்தையும் கொள்ளலாம். விற்கப்பட்ட ஆதனங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட இறக்கம் மற்றும் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட ஆதனத்தின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் காரணமாகலாம்.

2010ஆம் ஆண்டில் CMHC காப்புறுதி நிறுவனம் $106.1 பில்லியனின் பெறுமதிக்கு காப்புறுதி கொடுத்துள்ளதுடன், 2011 ஆம் ஆண்டு இக் காப்புறுதி $120.8 பில்லியனாக அதிகரிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## அடமானக்கடன் வட்டி வீதம்

வழமைபோல் செவ்வாய்கிழமை யூலை 19, 2011 கனடிய மத்தியவங்கி, வட்டிவீதத்தை நிர்ணயிப்பதற்காக தமது சகாக்களுடன் மத்திய வங்கி ஆளுனர் ஒன்று கூடினர். ஆனால் எதிர்பார்த்தது போல் வட்டிவீதத்தில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால்



எதிர்காலத்தில் குறிப்பாக வருடமுடிவிற்குள் வட்டிவீதம் அதிகரிக்கப்படலாம் எனவும் கூறியுள்ளார். கடந்த 10 மாதங்களாக வட்டிவீதம் மாற்றப்படவில்லை. 1% என்ற நிலையிலேயே காணப்படுகின்றது. முதன்மை வட்டிவீதம் 3% ஆகக் காணப்படுகின்றது. இந்நிலைமை மிக விரைவில் மாற்றப்படலாம் என மத்திய வங்கி ஆளுனர் Mark Canny அச்சப்படுத்தியுள்ளார்.


HomeLife/GTA

Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969

145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666



Raja Mahendran, P. Eng.

(Broker/Owner)

CONDO. FOR SALE



SHEPPARD & MCCOWAN

2 Bedroom + 1 parking condo for sale.

Asking Price $154,900.

HOUSE FOR SALE

JUST NORTH OF NEWMARKET

5 Acre land + home.

Raised bungalow. Walk-out bsmt , renovated 3 washrooms

CONDO. FOR SALE



WARDEN & FINCH

3 Bedroom condo fer sale. Asking price $139,900

FOR LEASE



FINCH & MIDDLEFIELD

1000 sq.ft. 2nd floor, 3rd floor, main floor

Next to Embassy Restaurant.

$15 Gross Rent.

CONDO FOR SALE

MCCOWAN & ELLESMERE

Brand new 1 bedroom + den. (Den can be bedroom). condo for sale.Walking distance to Scarborough Town Centre. Spectacular view. 2 Minutes to hwy 401. Asking $249,900

STORE FOR LEASE

KENNEDY & EGLINTON

Yogas Plaza

Retail Store For Lease.

1000 sq.ft

Suitable For Various Kind Of Uses, Close To Kennedy Subway Station.

COMMERCIAL CONDO. SALE OR LEASE

MARKHAM & STEELES

Builders blow-out sale

Red colour building.

Price starts from $250,000

FOR LEASE



FINCH & MIDDLEFIELD

Main Floor Unit In GTA Square Shopping Mall.

Renovated unit.

# இலங்கையின்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

மக்கள் மத்தியில் அரசாங்கத்தினால் இன்னும் ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் அதற்கான முயற்சியை அரசாங்கம் கைவிட்டுவிடவில்லை நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை அரசாங்கம் தனது இந்த முயற்சிக்கான சிறந்த களமாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

வன்னிப்பிரதேசத்திலும் சரி, யாழ் குடாநாட்டிலும்சரி, அரசாங்கக் கட்சிகளே தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் முன்னுரிமை பெற்றிருந்தன. எதிர்க்கட்சிகள் பல இடங்களுக்குச் செல்வதற்கு மறைமுகமாகத் தடை போடப்பட்டிருந்தது. வன்னிப்பிரதேசத்திலும், தீவகம் உட்பட வேறு சில இடங்களிலும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் உள்ளே செல்வதற்கு அனுமதி பாதுகாப்பு தரப்பினரால் மறுக்கப்பட்டது. இதற்குரிய காரணம் அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் அரசாங்கக் கட்சிகளே இந்தப் பிரதேசங்களில் வெற்றிபெற வேண்டும் என்பதே இந்த நடவடிக்கையின் உள்நோக்கமாக இருந்தது.

இந்தத் தடைகளுக்கு அப்பால் பல இடங்களில் வேட்பாளர்களும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களாகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் மிக மோசமான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப் பட்டிருந்தார்கள். அசிங்கமான முறையில் வேட்பாளர்களும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆதரவாளர்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள். நாயின் தலையை வெட்டி வீட்டு வாசலில் தொங்க வைத்தும், அதன் முண்டத்தை வாசலில் எறிந்தும், கழிவுகளை வீடுகளுக்கு முன்னால் போட்டும் இந்த அச்சுறுத்தல்கள் கேவலமான முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளுக் கிடையில் போட்டிகளும் வன்முறைகளும், அச்சுறுத்தல்களும் ஏற்படுவது சாதாரண நிகழ்வாகும். ஆனால் யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் யுத்தகாலத்தைப் போல, யுத்தம் நடைபெறுகின்ற பிரதேசத்தைப் போன்று இராணுவம் எங்கும் நிலைநிறுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் அவர்களின் ஆதரவோடு இந்த அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றனவே என அங்கலாய்க்கத்தக்க வகையில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தன.

இவற்றில் அதி முக்கியமானதாக அளவெட்டி சம்பவத்தைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மட்டுமல்லாமல், நாட்டில் உள்ள முக்கிய எதிர்க்கட்சிகள் மற்றும் முக்கிய அமைப்புக்களும் சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவித்திருந்தன.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பிரசார கூட்டம் அளவெட்டியில் நடைபெற்றபோது, பகிரங்கமாகவே இராணுவம் அந்தக் கூட்டத்தில் தலையிட்டு அடாவடித்தனங்களைச் செய்ததாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நேரடியாகவே குற்றம் சுமத்தியிருந்தது. கபே என்றழைக்கப்படுகின்ற தேர்தல் கண்காணிப்பு குழுவும் இதனை உறுதி செய்திருந்தது.



இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி நேரடியாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களிடம் வருத்தம் தெரிவித்திருந்தார். மூன்று பொலிஸ் குழுக்கள் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிவி க்கப்பட்டது. இராணுவத்தினர் நேரடியாக இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்தனரா என்பதைக் கண்டறிவதற்கான இராணுவத்தின ரின் விசாரணைகளும் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் விசாரணையின் முடிவுகள் குறித்து எந்த அறிவித்தல்களும் வெளியிடப்படவில்லை.

கூட்டம் நடைபெற்றபோது கூட்டத்தினுள்ளே புகுந்து கொட்டான்களினால் தாக்கியவர் களைக் கண்டால் அடையாளம் காட்ட முடியும் என்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பி னர் தெரிவித்திருந்தனர். ஆயினும் இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக சந்தேகத்தின் பேரில்கூட எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்த அச்சுறுத்தலினால் மக்கள் மனம் வெறுப்படைந்திருந்தார்கள். தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மட்டுமன்றி, ஐக்கிய தேசிய கட்சி, ஜேவிபி உள்ளிட்ட கட்சிகளும் ஒரு நேர்மையான நீதியான முறையில் தேர்தல் நடைபெற மாட்டாது என்ற திட்டவட்டமான முடிவுக்கு வந்திருந்தார்கள்.

அதேவேளை, வன்னிப்பிரதேசத்தில் வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் அரசாங்க சார்பு கட்சியின் சின்னமாகிய வெற்றிலைச் சின்னத்திற்கே வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாகப் பொதுமக்கள் பலரும் முறையிட்டிருந்தார்கள். இராணுவம் நேரடியாக அரசாங்கத்திற்கு சார்பாக தேர்தல் சட்டவிதிகளுக்கு முரணான வகையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி நீதியான முறையில் தேர்தல் நடைபெறுமா என்பதில் தாங்கள் நம்பிக்கை இழந்து விட்டதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பியிருந்தனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் ஒருபடி மேலே சென்று இந்தத் தேர்தலை ரத்து செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

தேர்தல் நியாயமான முறையில் நடைபெ- றமாட்டாது என்ற எதிர்க்கட்சிகளின் சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்துவது போல, வாக்களிப்பு தினத்திற்கு முந்திய தினம் இரவு 9.30 மணி முதல் அதிகாலை 4 மணிவரையிலும் வன்னிப்பிரதேசத்தின் பல இடங்களில் கறுப்புத் துணியினால் முகங்களை மறைத்துக் கொண்டு பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்றவர்கள் அவர்களின் வாக்காளர் அட்டைகளை அச்சுறுத்தி அபகரித்துச் சென்றிருந்தார்கள்.

அதேவேளை, பளை நகரில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆதரவாளர் ஒருவருடைய தனியார் கல்வி நிலையமும் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. இதனால் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்களிப்பு தினமாகிய 23 ஆம் திகதி சனிக்கிழமை பதட்டம் சூழ்ந்த ஒரு தின- மாகப் புலர்ந்தது. அச்சமும் அடுத்து என்ன நடக்குமோ என்ற பீதியும் காணப்பட்டது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் களும், முக்கிய தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும்கூட அன்றைய பொழுது எப்படி கழியப்போகின்றதோ, மக்கள் ஒழுங்காக வாக்களிப்பார்களா மாட்டார்களா என்ற கவலைக்குள் ஆழ்ந்திருந்தார்கள்.

இத்தகைய ஒரு சூழலில்தான் மக்கள் துணிகரமாகத் தமது வாக்குகளை அன்று அளித்திருந்தார்கள். வாக்களிக்க வேண்டும் என்ற திடசங்கற்பம் அவர்களிடம் அன்று மிகவும் தெளிவாக இருந்தது. அடுத்தது யாருக்கு வாக்களிக்க வேண்டும், யாரை நிராகரிக்க வேண்டும் என்பதிலும் அவர்கள் தீர்க்கமாக முடிவெடுத்திருந்தார்கள். இதனை தேர்தல் முடிவுகள் மிகவும் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றன என்றால் மிகையாகாது.

இந்தத் தேர்தலில் ஆரம்பத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கும் மற்றும் ஐக்கிய தேசிய கட்சி, ஜேவிபி போன்ற அரசியல் கட்சிகளுக்கும் அவற்றின் வேட்பாளர்களுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தது போலவே பொதுமக்க ளும் நிர்ப்பந்தங்களுக்கு ஆளாக்கப்பட்டிருந் தார்கள். ஆயுதமேந்திய, சீருடை அணிந்த இராணுவத்தினர் வன்னிப்பிரதேசத்தில் பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று அரசாங்கக் கூட்டுக்கட்சிகளுக்கு வெற்றிலைச் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார்கள். பல இடங்களில் கிராம முக்கியஸ்தர்களை முக்கியமான சந்திப்பு எனக் கூறி இராணுவ முகாம்களுக்கு அழைத்துச் சென்று சாராயத்துடன் கூடிய விருந்து படைத்து, வெற்றிலைச் சின்னத்திற்கே அனைவரும் வாக்களிக்க வேண்டும் என இராணுவ ரீதியில் அன்பாகக் கேட்டுக்கொண்டார்கள்.

விதவைகளுக்கு நிவாரணம் என ஒரு கிலோ அரிசி பழுதாகிப்போன கருவாடு என்பவற்றையும், பல இடங்களில் சைக்கிள்கள், தையல் இயந்திரங்கள் என பெறுமதிமிக்க அன்பளிப்புக்கள் என்பன வழங்கப்பட்டன. யாழ். குடாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கலந்து கொண்ட கூட்டங்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்போவதாக ஆசை காட்டி அழைத்துச் சென்று, கூட்டம் முடிந்ததும் எதையுமே கொடுக்காமல் அனுப்பி வைத்தார்கள். இந்த நிர்ப்பந்தங்களினால் வடக்கில் பொதுமக்கள் அரசாங்கத்தின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் அச்சத்துடன் கூடிய வெறுப்பும் எரிச்சலும் அடைந்திருந்தார்கள்.

இந்த நிலையில், இறுதி நேரத்தில் வெள்ளிக்கிழமை இரவு முகத்தை கறுப்புத் துணியினால் கட்டி மறைத்துக் கொண்டு ஆயுத முனையில் வாக்காளர் அட்டைகளை அபகரித்தபோது, வாக்காளர்கள் நேரடியாக அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருந்தார்கள். இது, பெரும்பான்மையான வன்னிப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555


Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative
Direct: 416-276-1225
Sell your home faster
and more money
When you list your home with Mike, you receive
these Guarantees
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full colour prints ads every week until it is sold
Our Team of Specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it *
RE/MAX
N Of Coldstream & W Of Wilson
$299,900
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Brimley Dr/Orton Park
$349,000
3+2 Bed Rooms, 2 W Rooms
Ceramic/Hard floors
Morningside / Finch
$365,000
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Brimley/Steeles
$389,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
10th Line/ Hoover Park Drive
$429,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Nightstar & Morningside
$439,900
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
E.9th/S.Hwy 7
$459,000
3+2 Bed Rooms, 2 W Rooms
Ceramic/Hard floors
Mccowan /Denison
$479,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Middlefield /Denison
$485,000
4_+2 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
Hoover Park/10th Line
$489,000
3+1 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
10th Line/Mantle
$512,900
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Markham/Bur Oak
$549,000
3 Bed Rooms, 2 W Rooms
Ceramic/Hard floors
Riza/Bernbridge
$569,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Riverwalk/9th Line
$599,000
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
9th Line/14th Ave
$649,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
9th Line/14th Ave
$679,900
4+2 Bed Rooms 4 W Rooms
Ceramic/Hard floors
9th Line/ 14th Ave
$690,000
5 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
Brimley Dr/Orton Park
$349,000
3+2 Bed Rooms, 2 W Rooms
Ceramic/Hard floors
14th / 9th Line
$639,000
4 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
Hwy 50/Nashville Rd
ESSO
$349,000
Gas Station
வாழ்க்கை சுவர்க்கமானது
இனிய இல்லமென்றில்
KZ Graffic- 647-200-5833
PH1-7800Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800 Fax: 905-470-7770
Email: esrinathan@trebnet.com
RE/MAX
Realtron Realty Inc, Brokerage
Each office independently owned and operated
I can also assist you Mortgage Financing,
Home Inspection, Real Estate Lawyer

# இரு அமெரிக்கர்களை பாதுகாக்க போய் வீதியில் தன்னுயிரை பறிகொடுத்த தமிழன்!

## கனடிய தகவல் தொடர் 153

கடந்த யூலை 09. 2011 அந்த மாலை 6.15 நேரம் அந்தக்கொடூரமான சம்பவம் அமெரிக்காவில் மிக்சிக்கன் மாநில வீதியில் நடந்தது. பாரிய ரக் வண்டியின் பொறுப்பான ஒரு சாரதியாக பொருட்களை ஏற்றிக்கொண்டு கனடாவினை நோக்கி அந்தத்தமிழன் தமது ரக் வண்டியினை செலுத்திக்கொண்டு வந்து கொண்டிருந்த நேரம். தமது வண்டிக்கு முன்பகுதியின் இடது பக்கத்தில் ஒருவரோடு ஒருவர் போட்டிபோட்டுக்கொண்டு வேகமாக வந்து இடறுப்பட்ட காரை ஓட்டி வந்த இளம் பெண் தமது ரக் வண்டியின் முன்பு நசிந்து மடியாது காப்பாற்றுவதற்காக அந்தக் கணப்பொழுதில் வலது பக்கமாக சற்று திருப்ப அது விபத்தில் முடிந்து அவரின் உயிர் அந்த இடத்தில் பறிபோனது. பல வருடங்களின் முன்பு எனது காப்புறுதி தொழிலில் முதன் முதல் சந்தித்த அவரோடு இருந்த உறவு! இறுதிவரை இனிமையாகவே என் வாழ்வில் தொடர்ந்தது!

அவர் ஒரு கடின உழைப்பாளி! பொறுப்புள்ள குடும்ப தலைவர்! நியாயத்திற்கு பணிந்து போகும் பண்புகள் நிறைந்தவர்.

என் நினைவுகளில் மௌனமான துயரமாக அவரது நிழல்கள் சுழன்று கொண்டேயுள்ளது. ஏனையோரின் பாதுகாப்பில் தம்முயிரை பறிகொடுத்த இந்தச்சம்பவத்தில் ஒரு கிராமிய கதை நினைவுக்கு வருகின்றது. இரு முயல்கள் ஒன்றினை ஒன்று விளையாட்டாக துரத்தப் போய் யானையின் காலின் கீழ் நசிய பார்க்கும் அந்த கண் இமைக்கும் பொழுதில் யானையினை செலுத்தி வந்த யானை பாகன் அய்யகோ முயல்கள் தாம் செலுத்தும் யானையின் காலின் கீழ் நசிந்தது சாக போகின்றதே என்று அக்கணம் ஏற்பட்ட பதற்றத்தில் விலகி கொடுக்க போய் யானையினையும் மோதப்பண்ணி தம்முயிரையும் பறிகொடுத்த பாகனின் நிலைமையே இன்று இந்தத்தமிழனுக்கும் ஏற்பட்டது.

அமெரிக்கா, கனடாவில் உள்ள பல ஆங்கில ஊடகங்கள் இந்த சம்பவத்தினை பரபரப்பான செய்தியாக வெளியிட்டிருந்தார் கள். மிக்சிக்கன் மாநில பொலிசார் பல நேரடி சாட்சியங்கள் உட்பட விபத்தினை ஏற்படுத்தியவர்கள் தமது தவறினை ஏற்றுக்கொண்ட வாக்குமூலத்தினையும் அடிப்படையாக வைத்து அம்மாநிலத்தின் பிரபல்யமான ஆங்கில தினசரி ஒன்றில் பின்வருமாறு செய்திக் கட்டுரையினை வெளியிட்டிருந்தனர்.

### *Racing Teens Caused Fatal Kroger Crash*

### விபத்தின் உயிர் பலிக்கு காரணமான இளசுகளின் பந்தய கார் ஓட்டம்

.....Mr. Thayalan Vinacithamby, 44yrs, of Brampton, Ontario, Canada, worked for the Canadian Trucking firm of 'Indocan Logistics Inc' He was married and had one daughter, said Pam Mann, an office manager for Indocan.



"You could not ask for a better person, Mann said, "He was always smiling he was just a down to earth gentleman who didn't deserve this. My heart goes out to his family." The fire resulting from the crash burned the rig right down to the metal frame, investigators said. It did not cause significant damage to the grocery store.

நன்றி : 'Daily Tribune' யூலை 12. 2011

பிரபல்யமான இவ் ஆங்கில தினசரியில் வெளிவந்த புலனாய்வு கட்டுரையின் சுருக்கமான தமிழ் மொழி பெயர்ப்பு பின்வருமாறு.

"ஒரு பிறந்த தின கொண்டாட்டம் ஒன்றினை நோக்கி நண்பர் ஒருவரின் காரோடு பந்தய ஓட்டத்தில் ஈடுபட்டவர் பொருட்களை ஏற்றிவந்த ரக் ஒன்றுடன் மோதி விபத்தினை ஏற்படுத்தி கொண்டார்.

அந்தக் கணத்தில் Ms. அலெக்ஸ்ஸஸ் மிற்செல் என்ற 19 வயது இளம் பெண்ணின் வாழ்வு தப்பியது. கனடாவிலிருந்து போன திரு. தயாளன் விநாசித்தம்பி என்ற ரக்வண்டி சாரதியின் வாழ்க்கை கொடூரமாக அழிந்தது.

அமெரிக்கா, மிக்சிக்கன் மாநில பொலிஸ் உத்தியோகத்தர் திரு. ரூபர் புரோன்ஸ் ஹெலின் (Trooper Bronse Gavin) என்பவரது புலனாய்வு அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

திரு. தயாளன் விநாசித்தம்பி ஓட்டிச் சென்ற பாரிய ரக்வண்டி வலது பக்க ஒழுங்கையில் சாதாரண வேகத்தில் அமைதியாக போய் கொண்டிருந்தது. ரக் வண்டிக்கு பின்னால் மூன்றாவது ஒழுங்கையில் அதிவேகமாக பந்தய வேகத்தில் அந்த இளம் பெண் தமது 'ரொயோற்றா ஹம்ரி' வாகனம் ஓட்டி வர அதே வயதுடைய அவரது ஆண் சினேகிதன் ஒருவர் அதிவேகமாக பின்னால் இன்னொரு வாகனத்தில் விளையாட்டாக துரத்த, அவரை முந்தியடித்துக்கொண்டு போக விடக்கூடாது என்ற நோக்கில் நடு ஒழுங்கைக்கு மாறி தொடர்ந்து வலது பக்க ஒழுங்கைக்குள் ரக் வண்டிக்கு முன்னால் தடுமாறி இடற கட்டுப்பாடில்லாத இந்த சிறு வாகனம் தமது பாரிய ரக்வண்டியினுள் நசிபட போகின்றதோ என்ற எதிர்பாராத பதட்டத்தில் ரக்வண்டி சாரதி சிறிது வலது பக்கம் திருப்ப அது வீதியோரமாக இருந்த சிறு பதிவில் பாய்ந்து ஒரு கடை கட்டிடத்தினுள் ஒரு பகுதியில் மோதி சிதறியது.

55 மைல்/மணி (கனடாவில் 88 கி.மீ /மணித்தியாலம் என்பதற்கு பதிலாக அமெரிக்காவில் மைல்/மணித்தியாலம் என மதிப்பிடப்படுவது வழமையாகும்) என்ற ஆக கூடுதலாக ஓட்ட அனுமதிக்கும் இந்த விபத்து நடந்த வீதியில் 90 மைல்/மணி தொடக்கம் 100 மைல் / மணி வேகத்தில் இவ் இரு கார்களும் ஒன்றுடன் ஒன்று துரத்தி வந்தது. இறுதியில் அந்த இளம் பெண்ணின் வாகனத்தினை விளையாட்டாக துரத்தி சென்ற அந்த இளைஞன் இருவருமே அந்த இடத்தில் நின்று உடனடி பொலிசாரை அழைத்து வாக்கு மூலம் வழங்கி தங்கள் தவறினை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

அந்த இடங்கள் யாவும் பல மணி நேரங்கள் ஸ்தம்பித்து ஓட்டப்பந்தயத்தில் வாகனம் செலுத்தி ஒரு நிரபராதியின் மரணத்திற்கு காரணமான இருவர் மீதும் கிரமினல் குற்றப்பதிவில் வழக்கு தொடரப்படலாம் என ஆலோசிக்கப்படுகின்றது என தெரிவித்தார்.

கிரிமினல் குற்ற சாட்டில் நீதிமன்றத்தில் நிறுத்தும் போது வழமையான தண்டணைகளுடன் சில மாதங்களேனும் சிறைத்தண்டனை எதிர் கொள்வது இவர்களுக்கு தவிர்க்க முடியாததாக போகலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சரி! இந்த துயர சம்பவத்தினை தொடர்ந்து கனடாவில், குறிப்பாக நாம் வசிக்கும் ஒன்ராரியோ மாகாணத்தில் சிறைத் தண்டனை வரை இழுத்து செல்லும் வாகனமோட்டும் தவறுகள் எவை? என்பதனை பார்ப்போம்.

1. கவலையீனமான வாகனம் செலுத்துதல் (Careless Driving)
2. மதுபோதையில் வாகனம் செலுத்துதல் (Impaired Driving)
3. பந்தய வேகத்தில் அதிவேகமாக வாகனம் செலுத்துதல் (Racing)

அதி வேகமாக திறில் வாகன ஓட்டங்கள் மேற்கொள்பவர்களுக்கு கைவிலங்கு போட்டு அழைத்துச் சென்று கிரமினல் குற்றசாட்டுகளுக்கு கைவிலங்கு போட்டு கிரிமினல் குற்றசாட்டுகளுக்கு உள்ளாவதுடன் பின்வரும் தண்டனைகளை ஒன்ராரியோ மாகாணத்தில் எதிர்கொள்ள வேண்டிவரும்.

• வாகனம் அந்த இடத்தில் வைத்து பறிமுதல் செய்யப்படும். மீண்டும் ஏழு நாட்களுக்கு பின்பு வாகனத்தினை திரும்ப பெறும் போது அதற்குரிய செலவுகளை வழங்கியே மீள பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

• உடனடியாக ஏழு நாட்டுகளுக்கு சாரதி அனுமதிபத்திரம் ரத்து செய்யப்படும். ஏழு நாட்களுக்கு பின்பு திரும்ப பெற ஒரு பண செலவு (License re statement fee) ஏற்படும்.

தொடர்ந்து நீதிமன்ற விசாரணைகளுக்கு அலைந்து திரிவதுடன் அங்கு குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் போது

• பணத்தண்டனை $2000 - $10,000 டொலர் வரை ஏற்படலாம்.
• மேலதிகமாக ஆறுபுள்ளி மதிப்பீட்டு இழப்புகளை எதிர்கொள்ள வேண்டும்.
• இரு வருடங்கள் லைசென்ஸ் பறிமுதல் ஆகும். இதே குற்றம் இரண்டாம் முறை ஏற்படுத்தினால் பத்து வருடங்களுக்கு லைசென்ஸ் பறிமுதல் ஆகும்.
• ஆறுமாதம் வரை சிறைத்தண்டனையும் வழங்கலாம். மேலே குறிப்பிட்ட தண்டனைகளை அனுபவித்து மீண்டும் ஒழுங்காக சட்டங்களை மதித்து வாகனம் செலுத்துவோம் என ஆரம்பித்தாலும் வாகனக் காப்புறுதி விலை என்பது உச்ச விலையாகவே இருக்கும். இப்படி பிரச்சனைகளையும் பாதிப்புக்களையும் எதிர்கொண்ட நம்மவர்களின் கதைகள் பல சொல்லலாம். இறுதியில் எங்களை நாங்களே கேட்க வேண்டிய ஒரு கேள்வி! இது தேவைதானா?



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# வேண்டாம் மனஅழுத்தம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

## *AVOID TENTION*

இன்றைய பரபரப்பான உலகில் பலரும் அடிக்கடி பேசுவது "ஐயோ ரொம்ப ரென்சனாக இருக்குது" என்பதுதான். இத்தகைய பதட்டமும் படபடப்பும் அதிகரிக்கும்போது மன அழுத்தம் (Stress) உருவாகின்றது. இவ்வாறு அதிகரிக்கும் மன அழுத்தம் எதிர்விளைவுகளான மன உளைச்சலையும் சோர்வையும் உண்டாக்குகின்றது.

### மன அழுத்தத்தால் ஏற்படும் தீமைகள்

மன அழுத்தம் நமது உடலிலும் மனப்போக்கிலும் பல மாறுதல்களை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு உருவாகும் மாற்றங்கள் நாளடைவில் பல நோய்களை உண்டாக்கிவிடக்கூடும். எனவே மன அழுத்தம் உருவாவதை அறிந்து அதற்குரிய பரிகாரங்களைச் செய்யவேண்டும். அல்லாதுவிடின் நாளடைவில் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவ-தால் வேறு பிற நோய்களுக்கும் ஆளாக வேண்டி வரும். மனஅழுத்தம் அதிகரிக்கையில் நமது சிந்தனை, பிறருடன் பேசும், பழகும் விதம் எல்லாமே மாறிவிடுகின்றது. இதன் காரணமாக வேலை செய்யும் இடத்திலும் வீட்டிலும் சச்சரவுகள் ஏற்பட்டு நிம்மதி குறைவு ஏற்படுவது இயல்புதான். இவ்வாறான நிலை தொடரும்போது சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம் போன்ற பல நோய்கள் ஏற்பட்டு அதனால் வயிற்றுப் பொருமல் உருவாகி நாளடைவில் மன நோயும் ஏற்பட வாய்ப்புண்டு.

### மன அழுத்ததின் அறிகுறிகள்

(1) கோபம், பதட்டம், படபடப்பு
(2) வேகமாக மூச்சுவிடுதல், இதயத்துடிப்பு அதிகரித்தல்
(3) உள்ளங்கை, உள்ளங்கால் என்பனவற்றில் அதிகமான வியர்வை உருவாகுதல்
(4) மலச்சிக்கல், தலைவலி, முதுகுவலி, கழுத்துவலி, இடுப்பில் தசைப்பிடிப்பு ஏற்படுதல்
(5) சிறு சிறு விஷயங்களினால் கூட எரிச்சலடைவது
(6) தேவையற்ற விஷயங்களினால் வீணாக கவலையடைதல். எதையோ இழந்துவிட்டது போல உணர்தல்.
(7) எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டுபிடித்தல்

### மன அழுத்தம் வராமல் தடுக்க



(1) ஓரிடத்தில் அமர்ந்து அமைதியுடன் சிறிது நேரம் தியானப் பயிற்சி (Meditation) செய்து கொள்வது உடலுக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுக்கும். மன அழுத்தத்தைக் குறைக்கும் இதற்குரிய சிறந்த மருந்து தியானம் தான்.
(2) அமைதியான சூழலில் நல்ல நண்பர்களுடன் சேர்ந்து எதையும் மனம்விட்டுப் பேசவெண்டும். அதோடு வழிபாட்டுத் தலங்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போன்றவற்றிற்குச் சென்றுவரவேண்டும். இதனால் மன நிம்மதி ஏற்படுகின்றது.
(3) உணவு முறையில் சில மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பித்தத்தை அதிகரிக்கச் செய்யும் உணவு வகைகளைத் தவிர்க்கவும், தேங்காய் பால் போன்வற்றை அளவோடு உணடு வந்தால் உடல் சோர்வினால் உருவாகும் மன அழுத்தம் நீங்கும்.
(4) எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவுகளைக் தவிர்ப்பதுடன் கீரைவகைகளை அதிகம் சேர்க்க வேண்டும்.
(5) தினமும் குறைந்தது 6 மணிநேரமாவது தூங்கவேண்டும்.

### மன அழுத்தமும் யோகாவின் முக்கியத்துவமும்

மன அழுத்தத்தை போக்குவதற்கு யோகாசன பயிற்சிதான் முதன்மையான மருந்தாக விளங்குகின்றது. மனதில் ஏற்படும் மாறுபாடான எண்ண அலைகள்தான் மன அழுத்தத்தின் மூல காரணம். இதைத்தான் (Devtional Disorders) என்பார்கள். இதை நீக்க யோகாவில் சில விஷேட பயிற்சி முறைகள் உள்ளன. இதனால் தலைப்பகுதிக்கு போதிய இரத்தம் வந்தடைகின்றது. மேலும் அப்பகுதியிலுள்ள நரம்புகள் நன்கு இழுக்கப்பட்டு செம்மைப்படுத்தப்படுகின்றது. அத்துடன் தோள்பட்டைப் பகுதியிலுள்ள இறுக்கம் குறைகின்றது. இதன் காரணமாக மூளையின் தொழில்பாடுகள் சீரடைகின்றன. இதனை எண்ண மாற்று சிகச்சை (Thought Changing Treatment) என்பர்.

இதனை ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் ஆரம்பத்தில் முறைப்படி பழகவேண்டும். தொடர்ந்து தினமும் பயிற்சியளித்தால் இதனை இரு வாரங்களினால் குணப்படுத்தமுடியும்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm



ஒண்டாரியோவில் நீரிழிவுநோயுடன்

வாழும் வயது வந்தவர்களுக்கான ஒரு முக்கிய அறிவிப்பு

நீரிழிவுநோயுடன் வாழ்வது சுலபமில்லை, ஆனால் தினசரி அதை நிர்வகிப்பது என்றால் உண்மையில் உங்களை நன்றாகப் பராமரித்துக் கொள்வது என்று பொருள்.

நீரிழிவுநோய் உள்ளவர்கள் முறையாக செய்து கொள்ளவேண்டிய மூன்று முக்கிய சோதனைகள் உள்ளன. அவை:

- **HbA1C இரத்த குளூக்கோஸ் கட்டுப்பாட்டுச் சோதனை**, நோயாளிகள் இதை குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை செய்து கொள்ள வேண்டும்
- **LDL-C கொலஸ்டிரால் சோதனை**, நோயாளிகள் இதை வருடத்திற்கு ஒருமுறை செய்து கொள்ள வேண்டும்
- **விழித்திரை கண் பரிசோதனை**, நோயாளிகள் இதை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை செய்து கொள்ள வேண்டும்

இந்த மூன்று சோதனைகளையும் நீங்கள் கடைசியாக எப்பொழுது செய்து கொண்டீர்கள் என்பதை உங்கள் முதன்மைப் பராமரிப்பாளருக்குத் (தாதிகள் தலைமையில் இயங்கும் ஒரு கிளினிக்கைச் சேர்ந்த பொதுமருத்துவர் அல்லது தாதி) தெரிவிக்க உதவும் பொருட்டு, இந்த நீரிழிவுநோய் சோதனை அறிக்கை உருவாக்கப்பட்டது.

நீரிழிவுநோய் உள்ளவர்கள் முறையாக சோதனைகளை செய்து கொண்டால், அவர்களால் தங்கள் நீரிழிவுநோயை இன்னும் சிறப்பாக நிர்வகிக்க முடிகிறது என்பதுடன், சிக்கல்களையும் தவிர்க்க முடிகிறது. உங்களுக்கு ஒரு HbA1C சோதனை, LDL-C சோதனை அல்லது விழித்திரை கண் பரிசோதனை ஆகியவற்றுக்கான தருணம் கடந்து விட்டதா என்பதை உங்களுக்கும், உங்கள் முதன்மைப் பராமரிப்பாளருக்கும் நினைவூட்டுவதன் மூலம் இந்த நீரிழிவுநோய் சோதனை அறிக்கை உங்கள் நீரிழிவுநோய்ப் பராமரிப்பை இன்னும் சிறப்பாக நிர்வகிக்க உதவும் என்பதுடன், உங்கள் நீரிழிவுநோய்ப் பராமரிப்பு பற்றி உங்கள் முதன்மைப் பராமரிப்பாளருடன் நீங்கள் பேசவும் இது உங்களை ஊக்கப்படுத்தும்.

உங்கள் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்

நீரிழிவுநோய் சோதனை அறிக்கையை உருவாக்க வேண்டி, உங்கள் முதன்மைப் பராமரிப்பாளர், உங்கள் தனிப்பட்ட உடல்நலத் தகவல்களான உங்கள் பெயர், அடையாள (OHIP) எண், மற்றும் பிறந்த தேதி உள்ளிட்டவைகளை ஆரோக்கியம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு அமைச்சகத்துடன் (MOHLTC) பகிர்ந்து கொள்ளக்கூடும். உங்களுக்கு நீரிழிவுநோய் இருக்கிறதா என்பதையும் அவர் உறுதிப்படுத்துவார். பதிலுக்கு, இந்த மூன்று சோதனைகள் ஒவ்வொன்றும் செய்யப்பட்ட சமீபத்திய தேதிகளை MOHLTC பகிர்ந்து கொள்ளும். உங்கள் இரகசியத்தன்மை முக்கியம் என்பதுடன், இந்த அறிக்கையில் உங்களைப் பற்றிய தகவல்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பது கட்டாயமில்லை.

உங்கள் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்று முடிவுசெய்தல்

உங்களைப் பற்றிய தகவல்களை உங்கள் முதன்மைப் பராமரிப்பாளர் MOHLTCக்குத் தெரிவிக்க வேண்டாம் என்றும், உங்கள் பராமரிப்பாளரின் நீரிழிவுநோய் சோதனை அறிக்கைகளில் நீங்கள் சேர்க்கப்பட வேண்டாம் என்றும் நீங்கள் முடிவெடுக்கலாம். உங்கள் ஒப்புதலை நீங்கள் அளிக்காமல் இருந்தாலோ அல்லது விலக்கிக் கொண்டாலோ, உங்கள் உடல்நலப் பராமரிப்பாளருடனான உங்கள் உறவுமுறையை இது எந்த விதத்திலும் பாதிக்காது என்பதுடன், அவர் உங்களுக்குத் தொடர்ந்து பராமரிப்பு அளிப்பார்.

உங்களைப் பற்றிய தகவல்களை உங்கள் முதன்மைப் பராமரிப்பாளர் MOHLTC க்குத் தெரிவிக்க வேண்டாம் என்பதற்கும், MOHLTC உங்கள் முதன்மைப் பராமரிப்பாளருக்கு அனுப்பும் நீரிழிவுநோய் சோதனை அறிக்கைகளில் நீங்கள் சேர்க்கப்பட வேண்டாம் என்பதற்குமான உங்கள் ஒப்புதலை நீங்கள் அளிக்காமல் இருக்கவோ அல்லது விலக்கிக் கொள்ளவோ விரும்பினால், **1-800-291-1405 (TTY: 1-800-387-5559)** என்ற எண்ணை அழைக்கவும். நீரிழிவுநோய் சோதனை அறிக்கைகளில் உங்கள் தகவல்கள் சேர்க்கப்பட வேண்டாம் என்பதற்கான உங்கள் ஒப்புதலை நீங்கள் ஏற்கனவே அளிக்காமல் இருந்திருந்தாலோ அல்லது விலக்கிக் கொண்டிருந்தாலோ, மீண்டும் அளிக்காமல் இருக்கவோ அல்லது விலக்கிக் கொள்ளவோ வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் ஒப்புதலை மீண்டும் அளிக்க விரும்பினால், மேலே உள்ள எண்ணை அழைத்துச் சொல்லவும்.

ஒண்டாரியோவில், தனிப்பட்ட உடல்நலத் தகவல்கள் பாதுகாப்புச் சட்டம், 2004 (PHIPA) என்பது, MOHLTC மற்றும் முதன்மைப் பராமரிப்பாளர்கள் உள்ளிட்ட உடல்நலத் தகவல்கள் பராமரிப்பாளர்களால் சேகரிப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, வைத்துக் கொள்ளப்பட்டு, வெளியிடப்படும் தனிப்பட்ட உடல்நலத் தகவல்களின் நிர்வாகம் குறித்த ஒரு சட்டம் ஆகும். நீரிழிவுநோய் சோதனை அறிக்கைக்காக உங்கள் தனிப்பட்ட உடல்நலத் தகவல்கள் சேகரிக்கப்படுவது, பயன்படுத்தப்படுவது, மற்றும் வெளியிடப்படுவது ஆகியவை பற்றி மேலும் விவரங்கள் அறிய விரும்பினால், மேலே உள்ள எண்களை அழைக்கவும். நீரிழிவுநோய் பற்றி மேலும் தகவல்கள் அறிய, பின்வரும் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: **ontario.ca/diabetes**.

ஒண்டாரியோ அரசாங்கம் இதற்கான செலவை ஏற்கிற

Ontario

# ஒன்ராறியோ மாநிலத் தேர்தல்

லிபரல் கட்சியின் தேர்தல் அறிக்கையா? எப்போ? அடக்க விறிஸ் என்பார்களே அது என்ன என்பது தெரியுமோ? பூவிறிஸ் என நிலத்தில் வைத்துக் கொழுத்திவிட சும்மா நட்சத்திரங்கள் மாதிரி சீறிச்கொண்டு செல்லும் வாணம். பறக்காது இருந்த இடத்திலேயே சீறும். அடக்க விறிஸ் என்பது இடையிடையே சிறிது நேரம் விட்டுச் சீறும். ஒன்ராறியோவின் லிபரல் கட்சி இப்போ அடக்க விறிஸ் போலத்தான் செயற்படுகிறது. ஒக்ரோபர் 6ந் தேதி தேர்தல் வருகிறது. அதில் ஆட்சியைக் கைப்பற்ற என்ன செய்வது என்பது டால்ரன் மக்குவின்ரியின் பிரச்சினை. மூன்றாவது முறையாகவும் ஆட்சியைக் கைப்பற்றிச் சாதனை படைக்க வேண்டும் என கனவு காண்கிறார். இது காலம் வரை அப்படி மூன்று முறைகள் தொடர்ச்சியாக எவருமே முதல்வராக இருந்ததில்லை என்பது அவருக்குத் தெரிந்த உண்மை.

ஏனைய இரு கட்சிகளும் தமது தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டுவிட்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டு நிற்கின்றபோது டால்ரன் மக்குவின்ரியோ என்றால், ஆடியில் வருமென்றார், ஆவணியில் வரும் என்றார். இப்போ செப்ரம்பர் மாதத்தில் தான் வெளியிடப் போவதாகத் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். ஆனால் அடக்க விறிஸ் மாதிரி தேர்தல் அறிக்கையில் வரவுள்ள வற்றினை ஒன்றொன்றாக இடையிடையே சொல்லித்திரிகிறார். இப்படியாக அடுத்த இரண்டு மாதங்களும் தேர்தல் அறிக்கையில் உள்ளவற்றினை இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சொல்லப் போகிறாராம் ஆனால் எல்லாவற்றினையும் மொத்தமாக செப்ரம்பர் 6ந் தேதி தான் வெளியிடுவாராம். 2007 ம் ஆண்டுத் தேர்தலுக்கான அறிக்கையை செப்ரம்பர் 6 ந் தேதிதான் மக்குவின்ரி வெளியிட்டாராம். அப்போது அமோக வெற்றிபெற்று முழுமையான பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடிந்தது. அந்த நம்பிக்கையில் தான் இம்முறையும் அதே பாணியைக் கைப்பிடிக்கிறாரோ?

• பாடசாலை மாணவர்களினது வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதம் ஆகியவற்றினது தரத்தினை உயர்த்துவதற்கு லிபரல் கட்சி ஆட்சி செய்த எட்டு ஆண்டுகளும் எடுத்த முயற்சி பாராட்டப்பட வேண்டியது என்பதை மறுப்பதற்கில்லை. லிபரல் கட்சி அரசு பாலர் பிரிவு மாணவர்களுக்கு செய்த முழுநேரப்பாடசாலை ஒழுங்குகளால் பலகுடும்பங்களுக்கு பிள்ளை பராமரிப்புத் தொகை ஏறக்குறைய $6,500 சேமமாகிறது.

• நாம் ஆட்சிக்கு வந்தால் மறியல் சாலையில் உள்ள குற்றவாளிகளைக் கொண்டு வந்து பூங்காக்களில் நிறுத்தப் போவதாகச் சொல்லவும் மாட்டோம் (கொன்சர்வேற்றிக் கட்சி), மற்றும் அனைத்துலக பெற்றோல் மற்றும் எண்ணை விலையினைக் கட்டுப் படுத்துவோம் எனக் கூறவும் மாட்டோம் (NDP) என்கிறார் டால்ரன் மக்குவின்ரி. இது அடக்க விறிஸ்சின் முதல் சீறல். நாம் வலியுறுத்துவது சிறந்த பாடசாலைகள், சிறந்த உடநலப் பாதுகாப்பு மற்றும் சீரான பொருளாதாரம் என ஏனைய இரு கட்சிகளினது வாக்குறுதிகளை நக்கலடித்துள்ளார்.

• இதன் காரணமாக சுகாதார அமைச்சர் டெப் மத்தியூஸ் இன்னும் இரண்டு தேர்தலுக்குப் பின்னர் கட்டி எழுப்பப் போகும் வைத்தியசாலைகள் (வோகன்னில் வைத்திய சாலை நிறுவ $800 மில்லியன்) பற்றிக் கூறி தங்களை ஆட்சிக்கு வைத்தால் தான் அது சாத்தியமாகும் என்கிறார்.



• கருத்துக் கணிப்பு தொடர்ந்து முதலிடத்திலே புதிய கொன்சர்வேற்றிவ் கட்சியினைத்தான் வைத்துள்ளது. டால்ரன் மக்குவின்ரி இரண்டாவது இடத்தில் இருந்தாலும் அவருக்கும் NDP யினுக்கு மிடையே அதிகம் இடைவெளி யில்லை. எனவே டால்ரன் மக்குவின்ரியினது பிரதான எதிரியாக NDP யினையே கருதுகிறார் போலும். அவர் கூடுதலாக தனது உரைக-ளில் NDP யினையே தாக்குவது தெரிகிறது. கொன்சர்வேற்றிவ் கட்சியினர் கடைசி நேரத்திலும் லிபரல் பக்கம் சாயமாட்டார்கள். ஆகவே கொன்சர்வேற்றிவ் கட்சியை ஆட்சியில் அமர்த்துதற்கு விரும்பாத NDPயினரின் வாக்குகளை தன்பக்கமாக ஈர்க்கலாம் என்ற நப்பாசை. NDPயினுடைய தேர்தல் அறிக்கையில் சுற்றுச் சூழல் பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை என்கிறார்.

• கருச் சிதைப்புக்கு நிதி உதவி செய்வதை நிறுத்த வேண்டும் என ஒருகாலத்தில் மனு ஒன்றில் ஒப்பமிட்டுத் தன் எதிர்ப்பை புலப்படுத்தியது உண்மைதான் என்றாலும் தனது கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றால் அதனைக் கண்டு கொள்ளப்போவதில்லை என கொன்சர்வேற்றிவ் கட்சியின் தலைவர் ஹூடாக் கூறியுள்ளார். கொன்சர்வேற்றிவ் கட்சி கொள்கை அளவினிலே கருச் சிதைப்பிற்கு எதிரான கட்சி. எனவேதான் ஹூடாக் தனது தொகுதி மக்கள் அரசாங்கத்திற்கு கருச் சிதைப்புக்கு நிதி உதவி அளிக்கப்படாது என்று அனுப்பிய மனுவில் ஒப்பமிட்டார்.

லிபரல் கட்சியினர் தொன்று தொட்டே கருச் சிதைப்பிற்கு சாதகமாய் அது குறிப்பிட்ட பெண்ணைச் சார்ந்தது. அக்கரு தேவை யில்லை என அவர் கருதுவாராயின் அதனைச் சிதைப்பதற்கு அப்பெண்மணிக்கு உரிமை உள்ளது என வாதிட்டு வந்துள்ளது. இதே கருத்தினைத் தான் NDP கட்சியும் சொல்லி வருகிறது. ஆகவே அந்த இருகட்சியினருக்கும் மெல்லுதற்கு ஏதோ கிடைத்தது போல் உள்ளது. ஒரு இடத்தில் நின்று கருச் சிதைப்புக்கு அரசு உதவி வழங்கப்படாது என முழக்கமிட்டு அவர்களுடன் சேர்ந்து அரசாங்கத்திற்கு மனு ஒன்றினில் ஒப்பமிட்டு அனுப்பி விட்டு வேறோர் இடத்தில் போய் அதைப் பெரிது படுத்தப்படாது எனக் கூறுவது சுத்த போலித் தனம் என்கிறார்கள். ஏற்க வேண்டியதுதான்!

•ஒன்றாறியோ மாநிலத்தில் இனங்காணப்பட்ட பாலியல் குற்றவாளிகள் தொகை 14,000. அவர்களில் ஒரு சாரார் சிறையில், இன்னொரு பகுதியினர் எமது சமூகத்தில் ஊடாடிக் கொண்டு திரிகிறார்கள். இவர்களிடமிருந்து எமது இளைய தலைமுறையினரைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என மூன்று கட்சிகளும் எடுத்துக் கூறிய போதும், தடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் கொன்சர்வேற்றிவ் கட்சி தீவிரம் காட்டுவதை உணர முடிகிறது. லிபரல் கட்சி இப்பாலியல் குற்றவாளிகளுக்கான தொடர்ப்பு ஒன்றினைத் தயாரித்து வைத்துள்ளதோடு சரி. கொன்சர்வேற்றிவ் கட்சி தாம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றால் இந்தப் 14,000 குற்றவாளிகளையும் எந்த நேரம் எங்கே உள்ளார்கள் என்று அறிந்து கொள்ளக் கூடிய முறையில் GPS (Global Positioning System) அவர்களுடைய கணுக்காலில் இதற்கான கருவியைப் பொருத்தி வைக்கவுள்ளதாகக் கூறுகிறார்கள். இப்படி கருவிகளை உபயோகிப்பதாயிருந்தால் இன்னும் ஆய்வு செய்ய வேண்டி உள்ளது என்கிறது NDP. ஆனால் கனடாவில் மூன்று மாநிலங்களிலும் அமெரிக்கவில் 40 மாகாணங்களிலும் இத்தகைய கருவி பொருத்து முறை நடைமுறையில் உள்ளது என்பதை அவர்கள் தெரியாமல் இல்லை. இப்போது உள்ள குற்றவாளிகளுக்கு இக்கருவி பொருத்துவதற்கு மாத்திரம் $5,00000 தேவையாகும். இன்னும் நுணுக்கமான கருவி பாவிப்பதாயின் செலவு இரண்டு மடங்காகும் என்கிறது லிபரல் கட்சி.

• ஒன்றாறியோவின் மூன்று பிரதான கட்சிகளைப் பார்ப்போ மாயின் NDP ஒன்றிற்கு மாத்திரமே மத்திய அரசின் தாய்க்



பொ. கனகசபாபதி

தொடர்ச்சி 33ஆம் பக்கம்


mhc

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# பசி - நன்றிக்குரிய ஒன்று

## ஓடும் நீர் உறைவதில்லை 126

அன்பார்ந்த வாசகர்களுக்கு: இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள விடயம் பற்றிய உங்கள் சுய பார்வை இப்பகுதியில் இடம்பெற விரும்பினால் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதி kgmaster54@hotmail.com எனும் மின் அஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

பசி கொடுமையானது. பசி வந்தால் ஒருவரது மனோநிலையில் மாறுபட்ட இயல்புகள் தோன்றும். இந்த இயல்புகள் ஒரு மனிதனது அடிப்படைப் பண்புகளில் அக்கறை செலுத்துவதை நிறுத்திவிடும். எப்படியாவது பசியைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக பசியைத் தவிர வேறு எதையும் இழக்கத் தயங்கமாட்டோம். இவற்றுடன் பசி வந்தால் வேறு என்னென்ன நிகழும் என்பதும் நாம் எல்லோரும் அறிந்த விடயம் தான். இருந்தாலும் ஒரு முறை அவற்றை மீள் பார்வை செய்வோம். பசி வந்தால் தன்மானம் பறந்துவிடும். தனது குலம் மறைந்துவிடும். கல்வி கரைந்துவிடும். வாக்குறுதிகள் வலிமை இழந்துவிடும். அறிவுடைமை அரைக் காசுக்குக் கூடப் பெறுமதி அற்றதாவிடும். தானம் செய்வது தவறுதலாகவேனும் தலைக்குள் எட்டாது. இறையன்பின் தேடுதலுக்கு இடமளிக்காது.

திருவினையாக்கும் முயற்சி கூட தெரு வினைக்கு வித்திடும். அன்பு, பண்பு, அரவணைப்பு அனைத்தும் அகன்றுவிடும். இனிய வார்த்தைகள் எங்கோ தொலைந்து விடும். இவையனைத்தும் பசி மிகவும் கொடுமையானது என வலியுறுத்தும் விடயங்கள். ஆனால் இது பசியின் ஒரு பகுதிதான். அப்படியானால் பசியின் மறுபகுதி எது?

**KG Master-kgmaster@rogers.com**

பசியின் மறுபகுதி என்னவென்று பார்ப்பதற்கு முன்னர் பசியின் இந்தப்பக்கத்தைச் சிறிது விரிவாகப் பார்ப்போம். இதுவரையில் கூறப்பட்ட விடயங்கள் வயிற்றுப் பசியை அடிப்படையாக வைத்துக் கூறப்பட்டாலும் அதற்கு அப்பாலும் ஒரு பார்வையைச் செலுத்த முடியும். பசி இல்லாமல் தேடுதல் இல்லை. தேடாத ஒன்று கிடைக்காது. எனவே தேடுதலுக்கு ஒரு தேவை அவசியமாகின்றது. அது ஆர்வமாக (Desire) இருந்தால் தடைகளுக்குச் சவால் கொடுக்க முயலும் போது மனதில் தளர்ச்சி ஏற்படும். பசியாக இருந்தால் மட்டுமே இலக்கை அடையமுடியும். ஏனெனில் பசியானது வாழ்வா அல்லது சாவா என்பதை அடிப்படையாகக் கொண்டது. இரண்டில் ஒன்றுதான் பசியின் தெரிவாக அமையும். இருப்பினும் இறப்பதை எவரும் விரும்பாததால் எதை விட்டுக் கொடுத்தாவது பசியைத் தீர்ப்பதன் மூலம் வாழத் துடிக்கின்றோம். எனவே பசி தேடுதலுக்கான அடிப்படை.

பசி என்றவுடன் நாம் வயிற்றுப் பசியைத் தான் முன்வைக்கிறோம். அதற்கான காரணம் வயிற்றுப் பசியின் அனுபவம் எல்லோருக்கும் ஏற்பட்டிருப்பதுதான். ஆனால் வயிற்றுப் பசி அல்லாத பல பசிகளும் இந்த விட்டுக்கொடுப்புக்களை வேண்டி நிற்கின்றன என்பது தான் உண்மை. காதல் பசி, இது மிகவும் விசித்திரமான பசி. வயிற்றுப் பசிக்காக நாம் பறக்க விடும் விடயங்களுக்கு மேலாகப் பல விடயங்களை நாம் இழக்கத் துணிந்து விடுகிறோம். சொந்த பந்தங்களையும், சொத்துப் பத்துக்களையும் கூட இழப்பதற்கு முயற்சிக்கின்றோம். இந்தப் பசியின் இன்னுமொரு விசித்திரம் என்னவென்றால் இருவருக்கு ஒரே நேரத்தில் அதே பசி ஏற்படுவதுதான். அதாவது, இவர்தான் எனது வாழ்க்கைத் துணை என்ற தெரிவுக்கான பசி. அது உறுதிப்படுத்தப்பட்டதும் இந்தப் பசிக்கு இடையூறாக எதுவுமே உள் வாங்கப்படுவதில்லை.

அறிவுப் பசி, பல கண்டுபிடிப்புக்களின் தந்தை. வித்தியாசமானது. ஒரு தேடுதலை நோக்கிய பசி. இதற்கும் சில இழப்புக்கள் தவிர்க்கமுடியாததாகின்றன. இந்தப் பசியின் தன்மை அவரால் மட்டுமே உணரக்கூடியது. ஏதோ ஒன்று இருப்பதை உள்ளுணர்வு சொல்லும். ஆனால் அதற்கான பாதையை அவர்தான் வகுக்கவேண்டும். அறிவுப் பசியின் தன்மையைப் பொறுத்து பறக்கவிட வேண்டிய, இழக்கப்பட வேண்டிய விடயங்கள் அமைந்துவிடுகின்றன. அடுத்தது இதயப் பசி. இது அன்பை நாடிய தேடுதல். இன்னுமொரு பசி ஆன்மீகப் பசி. இது இறையுணர்வைத் தேடும் பசி. இவ்வாறு பசிகள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒருவிதம். அவற்றுக்கான விலைகளும் வேறுபட்டவை.

இப்போது பசியின் உண்மைத் தன்மை என்ன என்பதைப் பார்ப்போம். பசியின் உண்மைத் தன்மை ஒன்றின் முழுமையை உணரவைத்தல் மட்டுமே. இடையறாத



தேடுதலுக்கு அடிப்படையாக அமையும் பசியானது அது அடையப் பெற்றதும் அதனது முழுமையை அனுபவிக்க, உணர, ஆனந்தப்பட வழி வகுத்துவிடுகின்றது. உதாரணமாக, வயிற்றுப் பசிக்கு உள்ளான ஒருவருக்குக் கிடைக்கும் உணவு, அது எதுவாக இருந்தாலும் அதை முழுமையாக ஏற்பது மட்டுமல்ல அந்த உணவை உண்ணும்போதும் அளவு கடந்த ஆனந்தமும், திருப்தியும் ஏற்படுகின்றது.

இவ்வாறேதான் காதல், அறிவு, அன்பு, ஆன்மீகம் சார்ந்த பசியும் அதை அடையும் போது அதன் முழுமையை அனுபவிக்க வாய்ப்பளிக்கின்றது.

### ஆம் வாசகர்களே,

பசி என்பது தேடுதலுக்கான அடிப்படை மட்டுமல்ல அத்தேடுதலில் கிடைப்பதன் முழுமையை உணர்வதற்குமானது. அது மட்டுமல்ல, பசி என்பது நேர்த்தியான தேடுதலுக்கான அடிப்படை. நேர்த்தியற்ற தேடுதலுக்குப் பெயர் 'வெறி'. பண வெறி, சொத்து வெறி, புகழ் வெறி என்பன சில உதாரணங்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படைத் தேவை பசி. பசியுடன் தேடுவோம். தேடுவது கிடைக்கும். கிடைத்ததும் அதன் முழுமையை நிச்சயமாக நாங்கள் அனுபவிக்க முடியும். அப்போது பசிக்கு நாம் நன்றி கூறித்தான் ஆகவேண்டும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

அமைதியின் குரல் - Words of Peace
அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி
1-877-707-3221 / தமிழில் - 416.431.5000
- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்
On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221
On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

## "ஓட்டை அடைக்கும்...

08 ஆம் பக்கத்தொடர்ச்சி

அனுமதிக்கப்படவில்லை. Knights Templar ன் கோட்பாட்டில் ஊறியவர்கள் நடத்தும் அமைப்பே 'ஐரோப்பிய விடுதலை இயக்கம்'. The Poor Fellow-Soldiers of Christ and of the Temple of Solomon எனப்படும் அமைப்பே Knights Templar இன் பெயரால் அழைக்கப்படு கின்றது. 1129ல் ஆரம்பிக்கப்பட்டு சமூக, பொருளாதார காரணிகளை தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றாக திகழ்ந்தது. 1312ல் பிலிப் அரசன் கொடுத்த அழுத்தம் காரணமாக போப் ஐந்தாம் கிளமன்ட் ஆல் நீக்கப்பட்டது. Charitable ventures, bodies within lay Catholicism and within Freemasonry போன்ற அமைப்புக்களின் பெயரில் இவர்கள் இயங்குகின்றார்கள்.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு ஒரு நாள் முன்பு 1518 பக்கங்கள் கொண்ட Manifesto வெளியிடப்பட்டது. இதில் உள்ள கருத்துக்கள் இன-மத வாத கருத்துக்களை கொண்டுள்ளன. இதனை வெளியிட ஒரு களமாக ஊடகங்கள் பயன்படுத்தப்படக் கூடாது என்ற காரணத்தினாலேயே ஊடகங்களை நீதி மன்றத்தில் அனுமதிக்கவில்லை. இணையத்தளங்கள் முந்திக் கொண்டு இதனை வெளியிட்டு விட்டன. இந்த அறிக்கை முக்கியமாக முஸ்லீம்களுக்கு எதிரான கருத்துக்களை கொண்டுள்ளன. இந்தியாவில் இருந்து முஸ்லீம்கள் வெளியேற வேண்டும் என்ற கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது. அறிக்கையில் 103 பக்கங்கள் இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சனதன தர்ம மார்க்க அமைப்பிற்கு ஆதரவாக கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது. பாரதீய ஜனதாக் கட்சி, விஸ்வ இந்து அமைப்பு, ரக்ஸய சம்பவுக் அமைப்பு, பாரத வித்யா பரீசாத் போன்ற அமைப்புக்களின் பெயரும் இவற்றின் இணையத்தளங்களின் பெயர்களும் வெளியிடப்பட்டுள்ளன.

மார்க்சிய கலாச்சாரம் வீழ்த்தப்பட வேண்டும் என்பது இவர்களது கருத்து. மேற்கு நாடுகள் மார்க்சிய கலாச்சாரத்தை பின்பற்றுகின்றன. இதனால் தான் இவர்கள் பல நாட்டு மக்களை உள்ளடக்கிய மக்களை தங்களது நாடுகளில் வாழ விடுகின்றனர். ஐரோப்பிய கலாச்சாரத்துக்கு மாறான பல கலாச்சாரங்கள் மேற்கில் தோன்றியுள்ளன என்பது இவர்களது கருத்து. ஐரோப்பிய நாடு ஐரோப்பியர்களுக்குரியது. மற்ற இனத்தவர்கள் வெளியேற்றப்பட வேண்டும். குறிப்பாக முஸ்லீம்களுக்கு எதிராக பல கருத்துக்கள் கூறப்பட் டுள்ளன. இதன் அடிப்படையிலேயே இந்தியாவில் இருந்தும் முஸ்லீம்கள் வெளியேற வேண்டும் என்ற கருத்து வெளியிடப்பட்டுள்ளது. தங்களது முஸ்லீம் எதிர்ப்பை வலுப்படுத்த இந்தியாவை உதாரணத்துக்கு காட்டியுள்ளார்கள். இது ஒரு வகையில் தங்களது அமைப்பு முஸ்லீம்களுக்கு மாத்திரம் எதிரி என காட்ட முற்பட்டாலும், உண்மையில் இவர்கள் மாற்று கலாச்சார மக்களுக்கு எதிரானவர்கள். Breivik தனக்கு பல முஸ்லீம் நண்பர்கள் உள்ளார்கள் என கூறுவது ஒன்றும் புதிரான விடயமல்ல. இது நான் முஸ்லீம் மதத்துக்கு எதிரானவன், மக்களுக்கு எதிரியல்ல என்பது போன்றது. இலங்கையில் மகிந்த வைக்கும் சிங்களம் மட்டும் போன்று இவ் அமைப்பும் ஐரோப்பாவில் பல் கலாச்சார மக்கள் தங்கள் கலாச்சாரத்தையும் மதத்தையும் பின்பற்ற வேண்டும் எனவும் கூறியுள்ளார்கள். இதுவும் ஒரு வகையில் இனவாதக் கருத்து. பின்பற்று இல்லையேல் வெளியேறு என்பதே.

ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியும் தொடரும் பொருளாதாரப் போரும் வெள்ளையருக்கு அதிக வேலை வாய்ப்பின்மையை ஏற்படுத்தியுள்ளது என்பது ஒரு கருத்து. இதற்கு காரணம் பல் கலாச்சார மக்கள் மேற்கு நாடுகளில் அதிகம் வாழ்கின்றார்கள். இவர்களால் எமது வேலை வாய்ப்பு பறிபோகின்றது என நினைக்கின்றார்கள். இதற்கு இனவாதிகளும் துணை போகின்றார்கள். இதன் வெளிப்பாடு இவ்வாறான கொலைகள் நடைபெற ஏதுவாகின்றன. கடந்த காலங்களில் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் இவ்வாறான கொலைகள் நடைபெற்றுள்ளன. பொருளா தார வீழ்ச்சிக்கான உண்மையான காரணங்கள் மக்கள் முன் தெளிவாக முன்வைக்கப்படாத பட்சத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெறத்தான் செய்யும். இக்கொலைக-ளின் பின்னணியில் ஊக்குவிப்பாளர்களாக மேற்கு நாடுகளின் முக்கிய அமைப்புக்கள் திரைமறைவில் இருக்கத்தான் செய்கின்றார்கள். யூத அமைப்புக்கள் மீதும், தீவிர வலதுசாரி அமைப்புக்கள் மீதும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## இலங்கையின்...

08 ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரதேசத்து மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையே ஏற்படுத்தியிருந்தது.

எனினும் தேர்தல் தினத்தன்று மக்கள் மிகவும் துணிச்சலாகவும், தீர்க்கமான முடிவோடும் தமது வாக்குகளை அளித்திருந்தார்கள். வாக்காளர் அட்டைகள் இல்லாதவர்கள் தங்களை வாக்களிக்காமல் தடுப்பதற்காகவே வாக்காளர் அட்டைகளை முகமூடி மனிதர்கள் அபகரித்துச் சென்றார்கள் என்பதை நன்றாக உணர்ந்து துணிவுடன் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களித்தார்கள்.

எனவே இந்தத் தேர்தல் நியாயமாகவும் குழப்பங்களின்றியும் நடக்குமா என்பதில் சந்தேகம் கொண்டு தமிழ்த்தலைவர்கள் குழம்பிப் போயிருந்தார்கள் என்றே சொல்ல வேண்டும். இதன் காரணமாகவே இந்தத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் தேர்தல் ஆணையாளரிடம் கடிதம் மூலமாகக் கோரிக்கை விடுத்திருந்தனர். இருந்த போதிலும் மக்கள் மிகவும் தெளிவாகவும் தீர்க்கமான முடிவுடனும் இருந்து தமது வாக்குகளைச் சரியான முறையில் அளித்தார்கள்.

இந்தத் தேர்தலின் மூலம், இணக்க அரசியல் என்பது, அபத்தமானது. அதிகாரப் பரவலாக்கல், அரசியல் உரிமைகள் என்பவற்றில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமில்லை என்பதைத் தெளிவாக மக்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். இது மட்டுமன்றி வெறும் கண்துடைப்பு அபிவிருத்திகள் எமக்குத் தேவையில்லை. அதிகாரப் பகிர்வின் மூலமான அபிவிருத்தியையே தாங்கள் விரும்புவதாகவும் இந்தத் தேர்தலின் மூலம் உணர்த்தியிருக்கின்றார்கள்.


# உலக மகா இந்துக்கள் ஸ்தாபனத்தாரின் சேவைகள்

- இந்துமத சம்மந்தமான அனைத்துசேவைகளுக்கும் அவரவர் சம்பிரதாயங்களுக்கேற்ப ஒழுங்கு செய்துகொடுக்கப்படுவதுடன் அது சம்மந்தமான அறிவுரைகளும் வழங்கப்படும்.
- Those who are having problem in getting social assistance ,ODSP or any other benefits, are welcome to contact us for immediate service.;
- வேலைசெய்யமுடியாதவர்களுக்கு ஆயட்கால நிரந்தர உதவிப்பணம் பெற்றுக்கொடுப்பதுடன் அரசசார்பற்ற ஸ்தாபனங்களினால் கொடுக்கப்படும் உதவிகளும் எடுத்துக்கொடுக்கப்படும்
- Volunteers are needed in Ectobicoke and Scarbrough areas. Those who are working as full time volunteers will be eligible for various benefits.
- வாகன சம்மந்தமான பிரச்சனைகள் நேருமிடத்து நீதிமன்றம் போகாமலே அவற்றில் இருந்து விடுவித்துக்கொள்வது சம்மந்தமான சட்ட ஆலோசகர்கள் ஒடுங்குசெய்து கொடுக்கப்படும்.

**வேலவன்**
தொடர்புகட்கு: 416 992 7882 / 416 551 4952

*4 Vange Cre*
*Etobicoke, ON M9V 3N7*


திரு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அறங்காவல் குழுக்கூட்டம் வருகிற ஆடி மாதம் 22ம் திகதி 4மணியளவில் 4 வான்ஞ் தெருவில் உள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது. புதினெட்டுப்பேர் கொண்ட இந்த அறங்காவல் குழுதெரிவின் பின்னரே ஆலயசம்பந்தமான விஷங்களும் செய்திகளும் வெளிவரவுள்ளன.

# நினைவாற்றல் - MEMORY - 14



அன்பான வாசகர்களே!

நினைவாற்றல் இன்றி மனிதன் உயிர்வாழ்வது முடியாத காரியம். நினைவாற்றல் குறைபாட்டுடன் வாழ்வது மிகவும் கடினமான விடயம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழியையும் நாம் நினைவில் நிறுத்திக் கொள்வோம். ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்கள் ஒரு மனிதனின் உடல் நலத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றது. மூளையின் தொழிற்பாட்டிற்கு ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளும் பொழுது நினைவாற்றல் வலு முன்னேற்றம் பெறுகின்றது. பல ஆய்வுகளின் முடிவுகளை உற்று நோக்கும் பொழுது குறுகிய காலத்திலேயே பொருத்தமான உணவுகளை உட்கொள்ளுபவர்களிடம் நினைவாற்றலும், மூளையின் தொழிற்பாடும் முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காணமுடிகின்றது. நினைவாற்றல் குறைபாடு அல்லது கோளாறு உள்ளவர்கள் உரிய மருத்துவ ஆலோசனையைப் பெறுவதுடன் அவர்களின் உணவிலும் அதிக கவனம் எடுக்கும் பொழுது முயற்சிக்கேற்ற பலன் கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சிறுபராயம் முதல் உடல் நலத்திற்கு ஏற்ற உணவுப் பழக்கங்களை வழக்கப்படுத்துவதோடு மூளைக்கு ஆரோக்கியமானதும், நினைவாற்றல் வலுவினை அதிகரிக்கச் செய்ய உதவும் உணவுகளையும் பழக்கி வருதல் மிகவும் முக்கியமானது என்ற கருத்தைப் பெற்றோர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். இளைஞர்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைக் கைக்கொள்வதில் அதிக சிரத்தை எடுக்க வேண்டும். நடுநிலை வயதினர் முழுமூச்சாக தமது உணவுக் கட்டுப்பாட்டிலும், ஆரோக்கியமான உணவிலும் அதிக கவனம் எடுப்பதன் மூலம் நிச்சயமாக வயது முதிர்வதால் நினைவாற்றலில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கலாம். குறைந்த பட்சம் பிரச்சினைகளைத் தள்ளிப் போடலாம். முதியவர்கள் மனம் தளராது பொருத்தமான உணவுகளின் மூலமும், இந்தக் கட்டுரையில் குறிப்பிட்ட பல பயிற்சிகளுடனும் நினைவாற்றல் கொண்டவர்களாக வாழ்ந்து கொள்ளலாம் என்பதற்குப் பல ஆய்வுகள் சான்று பகிர்கின்றன. வயது முதிர்ச்சி அடைந்தால் மீட்சி இல்லை என்ற நிலை பொய்யானது என்று அண்மைக்கால ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

நினைவாற்றல் வலுவினை அதிகரிக்கச் செய்வதற்கும், நினைவாற்றல் குறைபாட்டினை முற்றாகத் தடுப்பதற்கும் உரிய நடவடிக்கையாக எவ்வாறான உணவினை உட்கொள்ளலாம் என்பது பற்றி கடந்த இதழில் ஆய்வு செய்யத் தொடங்கியிருந்தோம். இவ்விடயம் பற்றி மேலும் பல தகவல்களைப் பரிமாறிக்கொள்ள விரும்புகின்றேன். தாதுப்பொருட்களில் மக்னீசியம் (Magnesium) நரம்பில் தூண்டுதலைக் (Impulse) காவிச்செல்வதில் பங்குகொள்கின்றது. எமது உடலில் உள்ள மக்னீசியத்தின் அளவு மிகவும் குறையுமேயானால், நரம்புத்தளர்ச்சி உண்டாகும். மன அழுத்தமும் உண்டாகும். மக்னீசியம் மூளையில் கிப்போகம்பஸ் (Hippocampus) உறுப்பில் உள்ள முக்கியமான வாங்கியைக் (Receptor)



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# நினைவாற்றல்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

கட்டுப்படுத்துவதின் மூலம் கல்வி கற்றலுக்கும், நினைவாற்றலுக்கும் உதவுகின்றது. நியுரோபிளாஸ்ரிசிற்றி (Neuroplasticity) எனப்படும் மூளையின் இளகுத்தன்மையைப் பராமரிப்பதில் எமது உடலில் உள்ள மக்னீசியத்தின் அளவு ஒரு காரணியாக உள்ளது. சிவப்பு அரிசி, விதைகள், காய்கறிகள், தானியம், ஓட்ஸ் (Oats), பச்சை இலை உணவுகள் ஆகியவற்றில் இருந்து உடலுக்குத் தேவையான மக்னீசியத்தைப் பெற்றுக் கொள்ளலாம். நியுரோரான்ஸ்மீற்றேர்ஸ் என்ற இரசாயனப்பதார்த்தம் உருவாக இரும்பு ஒரு துணைக்காரணியாக உள்ளது. இரும்புச் சத்து குறையுமானால் நினைவாற்றலைப் பாதிக்கும். கல்வி கற்றலுக்கும் நினைவாற்றலுக்கும் வேண்டிய சில இரசாயனப் பதார்த்தங்களை உருவாக்கவும் இரும்புச்சத்து தேவை. ஆனால் இரும்புச் சத்து ஒரு குறிக்கப்பட்ட எல்லைக்குள் இருக்க வேண்டியது அவசியமாகின்றது. பல பெண்களுக்கு ஏற்படும் இரும்புச்சத்து குறைபாட்டில் உரிய மருத்துவ ஆலோசனையுடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஒரு விடயத்தை உற்றுக் கவனிப்பதிலும் இரும்புச்சத்து பங்களிக்கின்றது. பொற்றாசியம் உடலின் ஆரோக்கியத்திற்கு அவசியமானது. மூளை நரம்புகள், கலங்களின் தொழிற்பாட்டில் பொற்றாசியம் முக்கியமானது. வயது வந்த ஒருவருக்கு சராசரியாக 3200 மில்லிகிராம் தொடக்கம் 4100 மில்லிகிராம் வரை தேவைப்படுகின்றது. சில மருந்துகளின் பக்கவிளைவாகவும் உடலில் பொற்றாசியம் குறைபாடு ஏற்படுகின்றது. உடலில் உள்ள பொற்றாசியத்தின் அளவு மிகவும் குறைவடைந்தால் நினைவாற்றல்



குறைபாடுகளும் ஏற்படலாம். உடலில் உள்ள 95 வீதமான பொற்றாசியம் கலங்களில் சேமிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உடலில் சேரும் சோடியம் நரம்புக் கடத்தலிலும் ஏனைய தாதுப்பொருட்கள் இரத்தத்தில் கரைவதற்கு உதவி செய்வதன் மூலமும் நினைவாற்றலுக்கு உதவுகின்றது. சோடியத்தின் அளவு எல்லைக்குள் இருப்பது அவசியம். வயது வந்த ஒருவருக்கு குறைந்த பட்சம் நாளொன்றுக்கு 500 மில்லிகிராம் சோடியம் தேவையாகும். சோடியத்தின் அளவு நாளொன்றுக்கு 2400 மில்லிகிராமை விட அதிகமாவது நல்லதல்ல. நாம் உட்கொள்ளும் மேசைஉப்பின் மூலமே அதிகளவு சோடியம் உடலுக்குக் கிடைக்கின்றது. நாம் உட்கொள்ளும் மேசை உப்பில் 40 வீதம் சோடியம் உள்ளது. எனவே 6 கிராம் மேசை உப்பு ஒரு நாளில் உட்கொள்ளலாம். அப்பிள், பியேர்ஸ் போன்ற பழங்களிலும் காய்ந்த விதைகளிலும் காணப்படும் போரனும் (Boron), பாண், கடல் மீன் போன்றவற்றில் காணப்படும் நாகமும் (Zinc) நினைவாற்றலுக்கு உதவுகின்றன. 2010 ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு ஆய்வுத்தகவலில் தாவரங்களில் காணப்படும் லூற்றீயோலின் (Luteloin) என்ற இரசாயனப்பதார்த்தம் உள்ள கரட், மிளகு, செலரி (Celery), ஒலிவ் ஓயில், பெப்பமின்ற் (Perppermint), ரோஸ்மேரி (Rosemary) போன்றவை வயது முதிர்ச்சியால் ஏற்படும் நினைவாற்றல் பிரச்சினைகளைக் குறைக்க வல்லவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உடலில் சேரும் அதிகளவான கொழுப்புச்சத்து நினைவாற்றல் பிரச்சினைகளுக்கு ஒரு காரணம் என 2008ம் ஆண்டில் வெளியான ஒரு ஆய்வுத்தகவல் கூறுகின்றது.

ஆய்வுகளின் மூலம் பழச்சாறு, அல்லது காய்கறிச்சாறு நினைவாற்றல் வலுவைக் கூட்ட உதவுகின்றது. வெவ்வேறு வகையான பழங்கள் அல்லது காய்கறிகளை கலந்து விதம் விதமான பழச்சாற்றினை தயாரித்து உட்கொள்வதன் மூலம் போதியளவு விட்டமின்கள், தாதுப்பொருட்கள் உடலில் சேர்கின்றன. செயற்கைப் பொருட்களான விட்டமின் குளிசைகளும், மிகைநிரப்பிகளும் (Supplements) உட்கொள்ள முடியுமானாலும் இயற்கைப் பொருட்களான பழங்கள், காய்கறிகள் மூலம் பெறுதலே சிறந்ததாகும். குறைந்தபட்சம் 10 விதமான விட்டமின் பி (B) வகைகள் புதிய நியுரோரான்ஸ் மீற்றேர்ஸ் உருவாவதில் பங்கேற்பதாகக் கூறப்படுகின்றது. உதாரணமாக விட்டமின் பி1 (B1) அளவு குறையும்பொழுது சிந்தித்தல், கவனித்தல் ஆகிய தொழிற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. சாதாரணமாக மூளை குளுக்கோசை சக்திக்கான மூலவளம் ஆகப் பயன்படுத்தும். மேலும் ஒக்சிசனின் உதவியுடன் விட்டமின் பி (B)யும், தாதுப்பொருட்களும் குளுக்கோசுடன் தாக்கமுற்று நீரையும், காபனீரொக்சைட், மற்றும் சக்தி ஆகியவை வெளியேறும். நியுரன்கள் எனப்படும் கலன்கள் பேணப்படுவதற்கும் விட்டமின் பி (B) அவசியம். மூளையின் அறிவுத்திறனைக் கூட்டுவதற்கு போலிக் அசிட் (Folic acid), செலெனியம் (Selenium) என்பவை அவசியம். கடும் பச்சையான காய்கறிகளில் போலிக் அசிட் இருப்பதாக முன்பு ஆராய்ந்திருக்கின்றோம். செலெனியம் அதிகமாக முழுத்தானிய பாண்கள், விதைகள், இறைச்சி வகைகள் ஆகிய உணவுப்பொருட்களில் இருக்கும். எமது மூளைக்குத் தேவையான உணவுகள் என்ன என்பதை நாமெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும். நாளாந்தம் இவ்வாறான உணவுகளை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எமது மூளையின் தொழிற்பாடு நாம் உண்ணும் உணவிற்கேற்ப மாறுபடும். எமது மூளையானது ஒரு இரசாயனத் தொழிற்சாலை போன்றது. நாம் உண்ணும் உணவுகளில் உள்ள பதார்த்தங்களின் மூலமும், தன்னிச்சையாகவும் பல இரசாயனப்பதார்த்தங்கள் தோன்றுகின்றன. இவை மூளையின் தொழிற்பாட்டில் பெரும் பங்கை வகிக்கின்றன. அளவுக்கு மிஞ்சிய மதுபானம், கோப்பி, புகைத்தல் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும். 6 அவுன்சு கோப்பியில் 100 மில்லிகிராம் கவ்வீன் (Caffeine) பதார்த்தம் உள்ளது. 6 அவன்சு தேநீரில் 10 தொடக்கம் 50 மில்லிகிராம் வரையிலான கவ்வீன் இருக்கிறதாம். அளவுக்கு அதிகமான கவ்வீன் நரம்புத் தொகுதியைப் பாதிக்கும்.

வாசகர்களே! நினைவாற்றல் வலுவை வளம்படுத்தும் பல உணவுப்பொருட்கள் பற்றி ஆராய்ந்து கொண்டோம். மேலும் பல தகவல்களுடன் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். தொடரும்…..


TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses,
Day care & Transportation அனைத்தும் இலவசம்

Buy One Get One Free
Windows,Word,Excel,Power Point
Quick Books,Simply Accounting,Accpac
Week Ends

416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.tbcollege.com info@tbcollege.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)



YARL WINDOW BLINDS & DRAPERY
WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
VENETIAN/VERTICAL/ROLLER
WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
CALL: N.SELVAM



YOGA - MEDITATION CLASSESS
யோகா, தியான வகுப்பு
Scarborough இல் யோகா தியான வகுப்பு பட்டறைகளுடன் நடைபெறுகின்றது.
ஆர்வமுடையவர்கள் தொடர்புகொள்ளவும்:
416.273.2200



# உலக முடிவு 2012இல்?

உலக முடிவைப் பிரளயம் என்று சைவம் சொல்லுகின்றது. இவ்வாறு ஐந்து வகையான பிரளயங்களைப்பற்றியும் அவற்றின் காலங்களைப்பற்றியும் சைவம் விளக்கமாகவும், துல்லியமாகவும், அச்சொட்டாகவும் சொல்லுகின்றது.

1. **நைமித்திய பிரளயம்** - இது ஒவ்வொரு மன்வந்தரத்தின் முடிவிலும் நிகழ்வது. ஒவ்வொரு மன்வந்தரமும் எழுபத்தொரு சதுர்யுகங்கள் கொண்டது. தற்போது நடப்பது வைவஸ்வத மன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகம். சதுர் என்றால் நான்கு. ஒவ்வொரு சதுர்யுகமும் கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் கொண்டது. ஒவ்வொரு சதுர் யுகத்திலும் நாற்பத்து மூன்று இலட்சத்து இருபதாயிரம் வருடங்கள் உள்ளன. வைவஸ்வத மனவந்தரத்தின் இருபத்தெட்டாவது சதுர் யுகத்தில் கிருத, திரேதா, துவாபர யுகங்கள் முடிந்து இப்போது நடப்பது நான்காவது யுகமான கலியுகம். இது நான்கு இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் வருடங்கள் கொண்டது. இந்தக் கலியுகம் மகாபாரத யுத்தம் முடிந்து கிருஷ்ண பரமாத்மா இவ்வுலக வாழ்வை நீத்த பின்னர் கி.மு 3101 பெப்ரவரி மாதம் பதினேழாம் திகதி தொடங்கியது. ஆகவே கலியுகம் முடிய இன்னமும் நான்கு இலட்சத்து இருபத்தாறாயிரத்து எண்ணூற்று எண்பெத்தெட்டு வருடங்கள் உள்ளன. இந்த கலியுகம் முடியும் தறுவாயில் விஷ்ணுவின் கல்கி அவதாரம் நிகழும். அவர் விஷ்ணுயசிரயம் (விஷ்ணுயசஸ்) என்னும்



அந்தணனுக்கு மகனாக சாம்பலம் என்ற கிராமத்தில் பிறப்பார். முடிய இருபத்தொன்பதாவது சதுரயுகத்தின் முதலாவதுயுகமான கிருத யுகம் மீண்டும் தொடங்கும். இதையே ரஷ்யப் புரட்சி பற்றிப் பாடும்போது பாரதி 'கிருத யுகம் எழுக மாதோ' என்று பாடினான்.

இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக எழுபத்தொரு சதுர்யுகங்களும் கழிந்த பின்னர் மனவந்தர முடிவில் ஒரு பிரளய அழிவு உண்டாகும். அது எமது பூலோகத்துக்கு மட்டும் நிகழ்வது, பூலோகம் என்பது பூமி மட்டும் அல்ல; எமது சூரிய குடும்பம் உள்ளிட்ட இரண்டாயிரம் மில்லியனுக்கு மேற்பட்ட சூரிய குடும்பங்கள் உடைய எமது ஆகாயகங்கை என்னும் இந்தப் பால்வீதியில் உள்ள அத்தனை அண்டத்தொகுதிகளும் இந்தப் பிரளயத்தில் அழியும். இதுவே நாம் வாழும் எமது உலகின் முடிவுக்காலமாகும். இவை யாவும் ஒரு கிருத யுக காலம் அதாவது பதினேழு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் வருடங்கள் நீருள் அமிழ்ந்திருக்கும். இந்தப் பிரளயம் எப்படி இருக்கும் என்று சிந்திப்பவர்கள் 2012 திரைப்படத்தைப் பார்த்தால் பிரளயம் என்பது எப்படி இருக்கும் என்று புரிந்துகொள்ளலாம்.

ஆனால் பிரளயம் வருகின்ற 2012 இல் நிகழாது. கி.பி நான்கு இலட்சத்து இருபத்தெண்ணாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பதாவது வருடமளவில் வரப்போகின்ற பிரளயத்தில் இந்தப் பூமி மட்டுமல்ல நமது ஆகாய கங்கை என்னும் பால்வீதியில் உள்ள அத்தனை அண்டத்தொகுதிகளும் அழியும். அப்போது பூலோகம் தவிர்ந்த ஏனைய உலகத்தொகுதிகள் யாவும் வழமைபோல இயங்கிக் கொண்டிருக்கும். பிரளய கால முடிவில் மீண்டும் இந்த உலகங்கள் பிரம்மாவினால் படைக்கப்படும். தொடரும்...

குருவடி பணிந்து
மருத்துவ கலாநிதி
இ. லம்போதரன்
www.knowingourroots.com

SEARCHING FOR
FAMILY PHYSICIAN

To staff a brand new clinic within a new medical building. Amazing opportunity to build your own practice. Competitive split.

EMR Ready
In-house ECG, PFT, Allergy test, event monitor.
Easy access to pharmacy, lab, specialists within the medical building.

Contact: DR. VUKIET TRAN
Mobile : 647.688.2907
Email : unimedicofamilypractice@hotmail.com

குடும்ப வைத்தியர் தேவை

புதிதான Medical கட்டிடத்தில் தொடங்க இருக்கும் புதிய சிகிச்சையகத்துக்கு வைத்தியர்கள் தேவை.

தங்களது சொந்தமான சேவைகளை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம். நியாயமான சலுகைகள்.



# ஒரு ஓவியரின் சினிமா கனவு

# நேர்காணல்: ஓவியர் ஜீவா

சர்வதேச திரைப்பட விருதுகளுக்கும் தமிழ் திரைப்படத் துறைக்கும் வெகு தூரம். சர்வதேச சினிமாவுக்கு ஏன் போக வேண்டும் இந்திய அரசு வழங்கும் திரைப்பட விருதுகளுக்கும் தமிழ் திரைத்துறைக்குமே வெகு தூரம்தான். ஆனால், இந்த வருடம் இந்திய அரசு விருதுகள் அறிவிக்கப்பட்ட போது ஆச்சரியம். வழக்கமாக விருதுகளை வாங்கிக் குவிக்கும் வங்காளம், மலையாளம் மொழித் திரைப்படங்களை முந்தி அதிக விருதுகளை அள்ளிக்கொண்டு வந்தது, தமிழ் சினிமா. அதைவிட அதிசயம், இந்திய அரசின் சிறந்த திரைப்பட நூலுக்கான தேசிய விருதையும் இந்த ஆண்டு, தமிழ் வாங்கியுள்ளது. அதன்பிறகுதான் இப்படியொரு விருது இருக்கிறது என்ற விபரமே தமிழகத்தில் பலருக்கு தெரியும். 1982இல் அறந்தை நாராயணன் 'தமிழ்ச் சினிமாவின் கதை' என்னும் நூலுக்காக வாங்கி, 29 ஆண்டுகளுக்குப் பிறகு, 'திரைச்சீலை' என்னும் நூலுக்காக இவ்வாண்டு தமிழ் விருது பெறுகிறது. இந்தப் புத்தகத்தை எழுதியவர், ஓவியர் ஜீவா. தற்போது கோவையில் வசிக்கும் ஜீவாவின் பூர்வீகம், நாகர்கோவில் அருகே பூதப்பாண்டி. தோழர் ஜீவா பிறந்த அதே பூதப்பாண்டிதான். அவருடைய உறவுக்காரும்கூட.



**சந்திப்பு சிவதானு**

இனி ஜீவா...

"இது எனக்கு முதல் புத்தகம். மரபின் மைந்தன் முத்தையா அவர்கள், தான் நடத்திய 'ரசனை' இலக்கிய இதழில் சினிமா ரசனை பற்றி ஒரு தொடர் எழுதுமாறு வற்புறுத்தினார். அவரால்தான் எழுத வந்தேன். உலக சினிமாக்களைப் பார்க்க அப்பா என்னைச் சிறுவயதிலேயே அழைத்துச் செல்வார். மொழிபெயர்ப்புடன் எனக்குக் காட்சிகளை விளக்குவார். அந்த அனுபவமும், அப்பா வாசிக்கத் தந்த சோவியத் இலக்கியங்களும்தான் இந்த 'திரைச்சீலை' எழுத முடிந்ததுக்கான பலம். நாஞ்சில்நாடன் போன்ற, நான் மிகவும் நேசிக்கும் படைப்பாளிகளின் உற்சாக மூட்டலும் தொடர்ந்து எழுதி முடிக்க ஒரு காரணம்."

எப்படி ஓவியத்தின் மீது ஆர்வம் ஏற்பட்டது?

"அப்பா ஒரு ஓவியர். பெயர் என்.வேலாயுதம். அவர் அதிகம் படிக்கவில்லை. ஆனால், ஓவியத்தை ஆர்வத்தோடு முறையாக ஓர் ஆசிரியரிடம் கற்றவர். அக்காலத்தில் திரையரங்குகளுக்கு வெளியே பிரமாண்டமான சினிமா விளம்பரத் தட்டிகளை கோவைக்கு அறிமுகப்படுத்தினார். இது அவருடைய முக்கியமான தொழிலாக இருந்தது. கோவையைச் சுற்றியுள்ள சில மாவட்டங்களிலுள்ள திரையரங்குகளில் எங்கே தமிழ்ப் படம் ஓடினாலும் எங்கள் சினி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் விளம்பரத் தட்டிகள் கண்டிப்பாக இடம்பெறும். சிறிய வயதில் அப்பா வரையும் பேனர்களில் இடைவெளிகளை வண்ணம் கொண்டு அடைப்பதுதான் என் வேலை. இதிலிருந்து என் ஓவிய வாழ்க்கை துவங்கியது. யாரைப் பார்த்தாலும் அந்த இடத்திலேயே அவரை அப்படியே ஐந்து பத்து நிமிடங்களுக்குள் ஓவியமாக வரைந்து விடும் திறன் சின்ன வயதிலிருந்தே எனக்கு வந்துவிட்டது. ஆனால், அப்பா எனக்கு ஓவியம் கற்றுக் கொடுக்கவில்லை. இந்தத் தொழில் விருத்தியில்லாத தொழில் என்று அப்பா நினைத்தார். எனவே, என்னை ஆங்கில வழியில் எம்.ஏ. அரசியல் விஞ்ஞானம் படிக்கச் சொன்னார். அதை முடித்துவிட்டு ஐ.ஏ.எஸ், பயிற்சிக்கு அனுப்பலாம் என்பது அவர் திட்டம். ஆனால், நானோ புனே திரைப்படக் கல்லூரிக்குப் போய் திரைப்படம் கற்க ஆசைப்பட்டேன். இந்நிலையில் என் மாணவப் பருவத்திலேயே என் தந்தை இறந்து விட்டார். எங்கள் வீட்டில் ஆறு பேரில் மூத்தவனான என் மீது குடும்ப பாரம் விழுந்தது. எனவே, வருமானத்துக்காக பேனர் ஆர்ட்டிஸ்ட்டாக மாறினேன். எனக்கும் இயல்பாகவே ஓவியத்திறமை இருந்ததால் அப்பா தொழிலை நான் என்னுடையதாக ஏற்றுத் தொடர்ந்தேன். 30 பயிற்சியில் அந்தத் துறையிலேயே பெயரும் புகழும் சம்பாதித்துவிட்டேன் என்ற அளவில் எனக்கு மகிழ்ச்சிதான். ஆறேழு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு ஸ்விஸ் நிறுவனம், கா.'ப்காவின் நாடக அரங்கேற்றத்துக்காக, அவர்கள் சொன்ன கருத்துக்களுக்கேற்ப பேனர்கள் வரைந்து தரச் சொன்னார்கள். வரைந்து கொடுத்தேன். அது அவர்களுக்கு மிகவும் பிடித்துப்போனது. வலைத்தளங்களில் இருக்கும் அப்படங்கள் சர்வதேச அளவில் எனக்கு நிறைய ரசிகர்களை உருவாக்கித் தந்துள்ளது.

என் சினிமா கனவு கலைந்து போனாலும், என் தம்பி மணிகண்டனை சினிமாத் துறைக்கு அனுப்பி ஆறுதல் தேடிக்கொண்டேன். அவன் அடையாறு திரைப்படக் கல்லூரியில் படித்து இன்று பேசப்படும் ஒளிப்பதிவாளராக இருக்கிறான். 'அந்நியன்', 'ராவணன்', 'பெண்ணின் மனதைத் தொட்டு', 'செங்கோட்டை', சாருக்கானின் 'ஓம் சாந்தி ஓம்' (இந்தி) ஆகியவை அவன் ஒளிப்பதிவு செய்த படங்கள். என் மகன் ஜே.ஆனந்த், கல்லூரிப் படிப்பை முடித்தபின், ஒளிப்பதிவு பயின்றுவிட்டு, ஒளிப்பதிவாளர் நீரவ்ஷாவிடம் உதவி ஒளிப்பதிவாளராக 'மதராசப்பட்டினம்', 'சர்வம்', 'தமிழ்ப்படம்' ஆகிய படங்களில் பணியாற்றினார். இப்போது தனியாக, 'ஓடிவா' எனும் படத்தில் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்."

டிஜிட்டல் பேனர்களின் வருகை, பேனர் ஆர்ட்டிஸ்டுகளுக்கு பெரும் போட்டியாக இருக்குமே?

"உண்மைதான். கோவையில் 400 ஓவியர்கள் கடை வைத்து பேனர் வரைந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். எல்லாம் மாயமாய் மறைந்து போனது. இப்போது 3 கடைகூட இல்லை. அவர்கள் எல்லாம் இப்போது வீடுகளுக்கு வெள்ளை அடிக்கப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அதில் நல்ல வருமானமும் கிடைக்கிறது. நாங்கள் உண்மையில் ஆடித்தான் போனோம். வீட்டை அடமானம் வைத்து, ஒரு டிஜிட்டல் பேனர் தயாரிக்கும் எந்திரத்தை நிறுவி, தொழில் பண்ணிக்கொண்டிருக்கிறோம். 100 ரூபாய்க்காக மணிக்கணக்கில் உட்கார்ந்து டிசைன் பண்ணிக் கொண்டிருக்கும் ஒன்றுதான் சோகம். இதனால், எப்போதும் ஒருவித எரிச்சலான மனநிலையே நீடிக்கும். என்னடா வாழ்க்கை இது என்கிற சலிப்பும் வரத்தான் செய்கிறது."

ஓவியம் தவிர பிற ஆர்வங்கள்?

"தொடர்ந்து வாசிப்பேன். நிறைய எழுத்தாளர்களோடும் ஓவியர்களோடும் நட்புக் கொண்டிருக்கிறேன். ஆதிமூலம் அவர்களின் ஓவியம் பற்றி கணையாழியில் விமர்சனமாக நான் எழுதி, எனக்கும் அவரும் ஒரு சண்டையே நடந்தது. அதன் தொடர்ச்சியாக நாங்கள் மிக நெருக்கமான நன்பர்களானது அடுத்தக் கதை. பின்னர் அவரே என் குருநாதரும் வழிகாட்டியாகவும் ஆனார். ஆர்.பி.பாஸ்கரன், தட்சிணாமூர்த்தி, மருது, ராஜராஜன், நெடுஞ்செழியன், மகி, அல்போன்ஸ் எனப் பல முன்னணி ஓவியர்கள் எனக்கு நல்ல நண்பர்களாக இருக்கிறார்கள்.

புத்தகங்களும் மிகச் சிறந்த நண்பர்களாக எப்போதும் இருக்கிறார்கள். கோவையில் திரைப்படக் கழகம் யார் துவக்கினாலும் அவர்களோடு நான் கட்டாயமாக இருப்பேன். திரைப்படச் சங்கத் திரையிடல்களுக்கு தவறாமல் செல்வேன். கவிஞர் புவியரசுவின் தாக்கமும் என் மீது உண்டு. இதெல்லாம் சேர்ந்துதான் திரைச்சீலை புத்தகம் உருவானதாகச் சொல்ல வேண்டும்.

திரைப்படங்களில் சின்ன வயதிலிருந்தே ஆர்வம் வந்துவிட்டதா?

"ஆமாம். திரைப்பட பேனர்கள் உருவாகிற சூழ்நிலையில் வளர்ந்ததால் வெளியாகும் திரைப்படம், யார் நடித்தார்கள், யார் இயக்குநர் என்று சினிமாவின் தொழில்நுட்ப பக்கத்தை எப்போதுமே ஆர்வத்துடன் கவனித்து வந்தேன். அக்காலத்தில் திரைப்படங்களின் பின்புலத்தில் யார் இருந்தார்கள் என்று அறிவது எனக்கு பெரும் கஷ்டமாகவிருந்தது. எனவே, திரைப்படம் சம்பந்தப்பட்ட நூல்களை தேடித் தேடிப் படித்தேன். நடிகர்கள் மற்றும் இயக்குநர்களின் வாழ்க்கை வரலாறுகளை படித்தேன். அவர்களைப் பற்றிய செய்திகளையும் படித்தேன். சினிமா பார்ப்பதென்பது, எனக்குப் புத்தகம் படிப்பது போல பொழுதுபோக்காக இல்லை. நல்லதோ, கெட்டதோ எப்படிப்பட்ட படமாகவிருந்தாலும் அது ஒரு உருவாக்கப்பட்ட கலையென்ற எண்ணத்தோடு பார்ப்பேன். சினிமாக்களின் நிறை, குறைகளைப் பற்றி நண்பர்களுடன் விவாதிப்பேன்."

கல்கி வார இதழில் நீங்கள் திரை விமர்சனங்கள் எழுதியிருக்கிறீர்களாமே?

"ஆமாம். நான் மாணவனாகவிருந்த போது 'திசைகள்' என்னும் பத்திரிகை மாணவர்களுக்காக வந்தது. மாலன் தான் அப்போது 'திசைகள்' பத்திரிகையின் ஆசிரியர். சுதாங்கன், இயக்குனர். வசந்த் ஆகியோர் அப்பத்திரிகையில் இருந்தவர்கள்தான். 'திசைகள்' பத்திரிகைக்காரர்கள் என்றாலே அப்போது ஒரு மதிப்பு இருந்தது. அதன் மூலம் எனக்கும் சந்திரகுமார் எனும் இன்னொரு மாணவனுக்கும் கிடைத்ததுதான் 'கல்கி' பத்திரிகையில் திரை விமர்சனம் எழுதும் வாய்ப்பு. 2 ஆண்டுகள் அனைத்துத் தமிழ்ப் படங்களையும் பார்த்து விமர்சனம் எழுதினோம். அதுவொரு சுவையான அனுபவமாக இருந்தது. மிகப் பிரபலமான பத்திரிகையின் திரைப்பட விமர்சகர்கள் என்ற பெருமையும் எங்களுக்கிருந்தது."

ஏன் அப்பணி தொடரவில்லை?

"எனக்கு, எனது படிப்பை மேலும் தொடர வேண்டியிருந்தது. எனது நண்பரும் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றார். அடுத்ததாக, நான் வசித்தது கோவையில் - கல்கி இருந்தது சென்னையில். உடனே தொடர்புகொள்ள, தற்போதுபோல இணைய சேவையோ, தொலைபேசி வசதியோ இல்லாத காலகட்டம். இப்படி சில சிரமங்கள் இருந்தன. அதனால் தொடர முடியாமற் போனது. நாங்கள் அடுத்த கட்டத்தைத்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880


4th Annual
Summer Festival
2011
GTA SQUARE
INDOOR MALL
FREE ADMISSION
A SPRING IN SUMMER
FUN FUN FOR EVERYONE
AUGUST 6 & 7, 2011
12.00 Noon - 9.00pm
★ Live musical Show ★ Fashion Shows ★ Talent Shows
★ Dance Programs ★ Game and Play area for Kids
SIDE WALK SALE
5215 Finch Ave. East (@Middlefield) Scarborough, ON M1S 0C2
கோடையில் ஓர் வசந்தம்


AVANI
AT METROGATE
TRIDEL®
BUILT FOR LIFE
Coming Soon
to Kennedy & 401
Register now at
tridel.com or call
416.293.5535
*Prices and specifications are subject to change without notice. Illustrations are artist's concept only. Tridel®, Tridel Built for Life®, Tridel Built Green, Built for Life.® are registered trademarks of Tridel and used under license. ©Tridel 2011. All rights reserved. E.&O.E. July 2011
TRIDEL BUILT GREEN
tridel.com

# GRAND OPENING

## HomeLife / GTA Realty Inc. Brokerage*

July 20 ஆம் திகதி Tridel நிறுவனத்தின் Winstonchaw தலைமையில் HomeLife GTA நிறுவனம் புதிய இடத்தில் கோலகலமாக திறந்து வைக்கப்பட்டது. றொரன்ரோ மாநகரத்தில் முண்ணனியில் இருக்கும் வீடு விற்பனை நிறுவனத்தின் நிறுவனர்களும், HomeLife GTA Reality யின் முகவர்கள், அடமானக்கடன் முகவர்கள் மற்றும் சட்டத்தரணிகள் என பலரும் வந்து HomeLife GTA ஐ வாழ்த்திச் சென்றார்கள்.























**"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"**

*5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969*
*145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666*

# திரைவிமர்சனம் - தெய்வத்திருமகள்

ஐந்து வயது சிறுவனின் அளவே மூளை வளர்ச்சியடைந்த தந்தைக்கும், அவருக்குப் பிறந்த ஐந்து வயது மகளுக்கும் இடையேயான பாசப் போராட்டம். இதுதான் இந்தப் படத்தின் ஒரு வரிக் கதை. இதுவே ரசிகர்களை ஈர்க்கப் போதும். இதனுடன், ஒரு பாத்திரத்துக்காக தன் உடலையே வருத்திக்கொள்ளும் நடிப்பு ராட்சசன் விக்ரமும், ‘மதராசப்பட்டிணம்’ என்ற வித்தியாசமான படத்தைத் தந்த இயக்குநர் விஜய்யும் இணையும் படம் என்பதால் கூடுதல் எதிர்பார்ப்பு.

ஊட்டி அவலாஞ்சியில் இருக்கும் சொக்லெட் பேக்டரி (chocolate Factory) யின் உரிமையாளரின் பாதுகாப்பில் இருக்கும் கிருஷ்ணாவிற்கும் பானுவுக்கும் பிறக்கும் குழந்தை, நிலா. அவள் பிறக்கும் போது பானு இறந்துவிட, மனநலம் குன்றிய கிருஷ்ணா, தன் மகளை கண்ணும் கருத்துமாய் வளர்க்கிறான். பானுவின் அப்பாவும் சித்தியும், நிலாவை தங்களுடனே வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஊட்டிக்கு வந்து கிருஷ்ணாவையும் நிலாவையும் அழைத்துக்கொண்டு செல்கிறார்கள். ஆனால், மனநலம் குன்றிய கிருஷ்ணாவை பராமரிப்பது சிரமம் என்று, வரும் வழியிலேயே கிருஷ்ணாவை மட்டும் வண்டியிலிருந்து கீழிறக்கிவிட்டு விடுகிறார்கள். சென்னைத் தெருவில் அனாதையாக விடப்படும் கிருஷ்ணாவுக்கு



**பிலிம்நியூஸ் கிருஸ்ணன்**

உதவ முன் வருகிறார் வக்கீல் அனுஷ்கா. மனவளர்ச்சி குன்றியவரிடம் குழந்தையைக் கொடுக்க முடியாதென்கிறார்கள் பானுவின் பெற்றோர். விஷயம் நீதிமன்றம் போகிறது. நீதிமன்ற தீர்ப்பு என்ன? பாசமுள்ள தந்தையும் மகளும் இணைந்தார்களா? என்பதே மீதிக் கதை.

விக்ரம், அனுஷ்கா, அமலாபோல், சந்தானம், ஓய்.ஜி.மகேந்திரா, நாசர், அமெரிக்க மாப்பிள்ளை கார்த்தி, எம்.எஸ். பாஸ்கர், அவருடைய மனைவியாக வருபவர், பாண்டி, விக்ரமின் நண்பர்கள், ஜூனியர் வக்கீல்கள், சொக்கலேட் பேக்டரி ஓனர் என்று ஏராளம் நட்சத்திர பட்டாளங்கள். எல்லோருக்கும் அருமையான பாத்திரங்கள். ஆனால், இவ்வளவு பேர் இருந்தாலும் மின்னும் நட்சத்திரம் குழந்தை சாராதான். பூசணிக்காய் சுற்றிப் போடவேண்டும். அந்தளவுக்கு, பார்த்தவுடனேயே மனதில் ஒட்டிக்கொள்கிறார். வளர, வளர அப்பாவிடம் அவள் கேட்கும் கேள்விகளாகட்டும், ஸ்கூல் போட்டியில் நண்பன் ரைம்ஸை மறந்து நிற்க உடனே ஓடிப் போய் அவனுக்கு உதவுவதாகட்டும்ளூ இறுதிக்காட்சியில் நீதிமன்றத்தில் நாசர் தீவிரமாக வாதாடிக் கொண்டிருக்க, கூண்டுக்குள் இருந்து தந்தையும் தூரத்தில் இருந்து மகளுமாக சைகை மூலம் பேசிக்கொள்வதாகட்டும் ரசிக்க வைக்கிறது. குழந்தைகளின் உணர்வுகளை துல்லியமாக வெளிக் கொணர்ந்திருக்கிறார். தங்களுக்கும் இப்படி ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று பார்ப்பவர்களுக்கு ஆசையை துளிர்க்க வைக்கும் விதமாக இருக்கிறார்.

அடுத்த குழந்தை நட்சத்திரம் விக்ரம். ஆமாம், குழந்தையாகவே இதில் வாழ்ந்திருக்கிறார் விக்ரம். மனநலம் குன்றிய வளர்ந்த மனிதர்களின் உடல்மொழியை மிக அருமையாய் அவதானித்திருக்கிறார். அவ்வளவு தத்ரூபம். முதல் காட்சியில் ஓடி வரும் விக்ரம் அடி பட்டு கீழே விழுவதும், அவரைத் தாண்டி செல்பவர்கள் அதை சட்டை செய்யாமல் செல்வதும், சிறிது நலமாகி எழும் விக்ரம் அடிபட்டு கீழே கிடக்கும் மற்றவனுக்கு உதவி செய்வதும் மன நலம் குன்றியது விக்ரமா அவரைச் சுற்றியுள்ளவர்களா என யோசிக்க

தொடர்ச்சி 40ஆம் பக்கம்


# மிருதங்க அரங்கேற்றம்



“இசை கலாபாரதி”, “மிருதங்கஜோதி”

**சுஜீந்தர் தர்மலிங்கம்**

அவர்களின் மாணவன்

**சாய் சுவஸ்தி ரஞ்சனநாதன் அவர்களின்**

மிருதங்க அரங்கேற்றம்

**காலம்:** சனிக்கிழமை **August 06, 2011,** மாலை 5:00 மணி

**இடம்:** **Chinese Cultural Centre, 5183 Sheppard Avene East**

கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கலை ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# நகைச்சுவைத் தொடர் 228
# ராசம்மா ராச்சியம்
கலகலப்பு தீசன்

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு.






ஆனால் அதைவிட மோசமானது இன்றுள்ள இன்ரநெற், ஈமெயில், பேஸ்புக் என்பன நண்பர்களுடன் அல்லது காதலர்களுடன் தொடர்புகொள்வது கோபத்தில் செய்திகளைப் பரிமாறுவதனால் பலர் வம்புகளில் மாட்டியுள்ளனர். சில நாடுகளில் மிரட்டல்களினால் கொலைகளும் தற்கொலைகளும் கூடியுள்ளன.






பகலில் அக்கம்பக்கம் பார்த்துப் பேசு, இரவில் எதுவும் பேசாதே என்பார்கள். ஆனால் இன்ரநெற் ஈமெயில் பேஸ்புக்கில் எதுவும் பேசாதீர்கள்.

உலகண்ணை அலெக்சாண்டர் கிரகாம் பெல் கஸ்டப்பட்டு ரெலிபோனைக்கண்டு பிடித்தார். கண்டுபிடித்தார் அது பிறகு செல்போன் இன்ரநெற் இமெயில் ஸ்கைப் என தொலைத்தொடர்பு எவ்வளவோ முன்னேறியுள்ளது. ஆனால் இன்று பலர் அதனைத் தவறாகப் பாவிக்கின்றனர்.





உலகண்ணை சந்திரிகாவின் பிள்ளையள் தாங்கள் சிங்களவ-ரெண்டு சொல்ல வெக்கப்படுதுகளென்று சந்திரிகா சொல்லியிருக்கிறார். உந்தப் பிள்ளையள் உதை எப்பவோ சொல்லியிருந்தால் சண்டை எப்பவோ முடிஞ்சிருக்கும். எத்தனையோ சனம் உயிர் வாழ்ந்திருக்குமெண்டு சொல்லிப் பெருமூச்சுவிட்டா ஆட்டிலறி அன்னம்மா.

தந்தை சிவனுக்கு மகன் முருகன் (ஓம் பிரணவ மந்திரத்தை) உபதேசம் செய்தார்.



அதுதான் இந்தியாவிலை சுவாமிமலை. நான் பாத்தனான். முருகன் சிவனுக்கு உபதேசம்.

சந்திரிகாவின்ரை பிள்ளைகள் தாய்க்கு உபதேசம் செய்யுதுகள். காலம் கடந்த உபதேசம் எனச் சொல்லிச் சிரிச்சா செக்கண்டபுளோர் செல்லம்மா.

இந்த அமளி துமளிக்குள்ளும் அடுத்த பனி விழுவதற்குள் போகவேண்டிய கூட்டங்கள், விழாக்கள், திருவிழாக்கள், ஒன்றுகூடல்களில் கலந்து கொள்ளத்தவறவில்லை. இருந்தாலும் பல பழைய முகங்களைக் காணவில்லை.

சுற்றுலா சென்றவர் சிலர், முதிர்ச்சியால் வீட்டில் முடங்கிக்கிடப்பவர் சிலர், வயது பார்க்காமல் இறைவனால் அழைக்கப்பட்டவர் பலர், வாராவாரம் துக்கச் செய்திகளே கூடுதலாக இருக்கிறது. இன்றிருப்போர் நாளையிங்கே இருப்பதென்ன உண்மை..




ஞாபகம் வருகிறதா



ஒகஸ்ற் : 02. அலெக்சான்டர் கிரகாம் பெல் (தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்)
13. கதிர்காம கந்தன் தீர்த்தம்



## இணுவில் திருவூர் ஒன்றியம் வருடாந்த ஒன்றுகூடல்

**காலம்:** 06.08.2011 (சனிக்கிழமை)
**இடம்:** மிலிக்கன் பூங்கா - E பிரிவு, (STEELES& MCCOWAN) Scarborough
**நேரம்:** காலை 11:00 மணி

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.
416.496.9071 / 416.430.0422 / 647.928.7407


# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஜோதிடம்
# பண்டித் மகேந்திரன் சுவாமிகள்





ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்

மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித் அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள் அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும் பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்





100% உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.
மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

**Tel: 647-919-5846 / 647-718-9555**
**5210 Finch Ave. East, Unit # 1, Scarborough**
**(Inside of Golden Bakery)**
**Beside the Meenadchi temple ON, M1S 4S4**

# BASEMENT RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.995.2319

**MORNINGSIDE & SHEPPARD ROUGH RIVER & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.220.5967

**VICTORIAPARK & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, hwy 401, DVP, mall, bank. Avail. immediately. No pets & No smoking
தொடர்புகளுக்கு: 416.816.3114

**MARKHAM & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, mall. Avail. immediately.
905.201.6619 / 647.709.2316

**BELLAMY & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.509.0937

**KINGSTON & GUILWOOD / LAWRENCE**
2 Bedroom + den bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, high school, university. Avail. immediately. No smoking & No pets. Working couples & Family or 3 students preferred.
தொடர்புகளுக்கு: 416.816.5293

**WARDEN & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. October 01, 2011.
416.494.0850 / 416.315.5648

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
416.439.1507 / 647.774.5667

**MARKHAM & STEELES**
Newly renovated 2 bedroom bsmt for rent. Close to TTC, YRT, school, shopping, bank includes all facilities. Avail. immediately.
905.201.8525 / 647.866.3920

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 905.201.6572

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, big washroom, kitchen, big living room. Close to TTC, mall. No smoking & No pets. Working Female or Female Students only Avail. August 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.321.5036

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school. Avail. August 01, 2011.
416.538.6768 / 647.234.1316

**NIGHTSTAR & FINCH**
2 Bedroom brand new fully renovated bsmt for rent. Close to TTC, school. Rent $750 with bills. Avail. immediately.
416.901.0674 / 647.831.3242.
(Call after 5pm)

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, cable. Close to RT, scarborough town center.
Rent negotiable. $750
தொடர்புகளுக்கு: 416.431.5172

**McCOWAN & STEELES**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Couple or ladies preferred. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. immediately.
416.903.2437 / 647.986.1437

**MORNINGSIDE & MORNING VIEW TRAIL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, walmart, bank, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.706.7832

**MIDLAND & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bakery. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.947.8698

**TAPSCOTT & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, utilities. Close to TTC, Malvern mall, school. Avail. September 01, 10. தொடர்புகளுக்கு: 647.214.1085
Monday - Friday - 4:30pm - 9:30pm
Weekends: 10:00 - 9:30 pm

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
416.473.2988 / 647.990.4584

**NEILSON & FINCH**
Newly renovated 2 bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive. Avail. immediately. No smoking.
தொடர்புகளுக்கு: 416.843.5982

**JANE & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.850.9401

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to YRT, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.937.0220

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. August 01, 2011.
Ladies or couple only.
தொடர்புகளுக்கு: 416.997.6575

**MCCOWAN & ELESMERE**
1 Bed room basement apt. with sep. entrance. உடனடியாக வாடகைக் உண்டு. Close to TTC, Subway, Stores and Scarborough town center.
416 .265.9138 / 416.271.8467

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime. Ladies or Family preferred.
தொடர்புகளுக்கு: 416.299.8947

**MCNICOLL & MIDDLEFIELD**
1 Bedroom bsmt for rent. Laundry, parking, cable. Close to bus, stores, etc. Avail. August 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.298.2656

**ISLINGTON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep entrance, laundry. Close to all facilities. Avail. August 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.638.4475

**MARKHAM & LAWRENCE**
2 Spacious bedroom for rent. 1 Bathroom, laundry. Close to schools, shopping, TTC. No smoking. The unit will be rented for $750 permonth.
தொடர்புகளுக்கு: 647.624.1364

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to ttc, subway, school, church, bank, shopping, etc. Avail. immediately. No Pets & No Smoking
416.755.1334 / 416.903.9053 / 647.920.9466

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to walmart, spiceland. Avail. August 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.505.7951

**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. Small family preferred.
416.873.0549 / 416.297.0549

**VICTORIA PARK & FINCH**
2 Bedroom walk - out bsmt for rent. Parking. Close to TTC (2 min. Walk), 5 min. walk to Finch. All amenities close-by. Avail. September 03, 2011.
சிறுகுடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.492.9816

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC. Avail. Anytime.
416.297.6108 / 647.200.6108

**9TH LINE & STEELES**
புதிதாக அமைக்கப்பட்ட bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Cable & Internet.
தனி நபர் விரும்பத்தக்கது.
416.875.3611 / 905.554.9353

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
1 Large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, fullwashroom, laundry, sep. entrance. Avail. immediately. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**BIRCHMOUNT & ST.CLAIR**
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, kitchen, one full washroom & living room. Close to TTC and other facilities. No smoking & No pets
Please Call: 416. 882.4532

**STEELES & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.0010

**NEILSON & FINCH MARKHAM & MCNICOLL**
1 Bedroom huge walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, school, mall. Avail. August 01, 2011.
416.298.7081/416.417.9541
647.241.0944

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, Stores, etc. Avail. August 01, 2011.
416.686.8345 / 416.388.6603

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking,. Close to mall, school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.302.6930

**MCCOWAN & STEELES**
4 அறைகள் கொண்ட bsmt ஐ இரண்டு இரண்டு அறைகளாக தனித்தனியாக் கொடுக்கப்படும் Sep. entrance, parking, laundry. Close to plaza, school, TTC. Avail. immediatly.
தொடர்புகளுக்கு: 416.836.3279

**WARDEN & HWY 401**
2 Bedroom bsmt apt. for rent. Close to school, mall, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.889.2254

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. 647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TT, mall. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

**FINCH & BIRCHMOUNT**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Utilities included. Close to all facilities. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Each room $325. No Smoking & No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

**MORNINGSIDE & 401/MCLEVIN**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, wal-mart, nofrillslibrary, 4elementary school, University. Small family or seniors preferred.
தொடர்புகளுக்கு: 416.834.1081

மேலும் பக்கங்கள் 25, 26

## ROOM RENT

**KENNEDY & ELLESMERE**
1 Bedroom apt for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.605.5475

**MIDDLEFIELD & DENISON**
மேல்தளத்தில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Daily meals avail. Close to TTC, YRT, cable, internet, parking including. Avail. August 01, 2011.
905.201.9901 / 416.648.1987

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**BELLAMY & LAWRENCE**
1 Room for rent. Parking, kitchen, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.292.0675

**PHARMACY & LAWRENCE**
1 Room with sep. entrance, kitchen, living room, parking, cable. Close to parkway mall, TTC. Rent $300. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.660.8367

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

**BURNHAMTHORPE & Q.E.W.**
சந்திப்புக்கு அருகாமையில் Condo. இல் 2 அறைகளில் 1 அறை வாடகைக்கு உண்டு.

**MARKHAM & LAWRENCE**
சந்திப்புக்கு அருகாமையில் Condo. இல் 2 அறைகளில் 1 அறை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.875.4051

**KENNEDY & FINCH**
1 Bedroom bacnlor apt. for rent with all facilities. Sep. entrance. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.779.3411

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT RENT

**BIRCHMOUNT & SHEPPARD**
Newly renovated 3 அறைகள் கொண்ட Bungalow வீட்டில் உள்ள bsmt இல் அறைகள் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப்படும். Sep. entrance, parking, laundry, cable, laundry. Utilities included. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.804.8435

## CONDO. FOR RENT

**WARDEN & FINCH**
**2050 Bridletown Cir.**
3 Bedroom condo. for rent. 1½ washroom, cable, parking, security, water, gas, washer, dryer included. Current bill extra. Close to TTC, malls, banks.
தொடர்புகளுக்கு: 416.274.9726

## CONDO. FOR LEASE

**KENNEDY & HWY 401**
Brand new 2 Bedroom condo. for lease. 2 Washroom. Avail. immediately. Close to all facilities. Asking price $1450.
தொடர்புகளுக்கு: 416.315.9397

## CONDO. RENT /SALE

**KENNEDY & HWY 401**
Brand new never lived 1+ den condo. for lease or sale. $1100 for lease. Close to s ubway, shopping, etc..
தொடர்புகளுக்கு: 416.315.9397

## மணமகள் தேவை

42 வயது 5' 10" உயரமுடைய அழகிய கனேடிய குடியுரிமையுடைய நிரந்தர தொழில் செய்யும் குடிப்பழக்கமற்ற மணமகனுக்கு நற்குணங்களையுடைய 30 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட வயதுடைய மணமகள் வேண்டும். விவாகரத்துடையோரும் ஏற்கப்படுவர். சோதிடத்தில் ஆர்வம் இல்லை.
தொடர்புகளுக்கு: 416.514.1661

## மணமகன் தேவை

கனடாவில் Accountant ஆக பணியாற்றும் 1980 ஆம் ஆண்டு பிறந்த இந்து மதத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். கனடாவில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.823.2319

## மணமகன் தேவை

இலங்கையை வசிப்பிடமாகவும் 1981 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றமுடைய மணமகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மணமகனை பெற்றோர் தேடுகிறார்கள்.
403.966.7278 / 416.710.2686

## காணி விற்பனைக்கு

உடுவில் Dutch (டச்சு) வீதிக்கு மிக அருகாமையில் பனைகள், தென்னைகள், மாமரங்கள் நிறைந்த, நல்ல மாத வருமானம் உள்ள 10+ பரப்பு, கிணறுடன் கூடிய காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 647.859.1057

## காணி விற்பனைக்கு

வத்தளை அல்விஸ் டவுனில் லைசியம் International School க்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட 8.4 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 94.71.982.3310

## HOUSE FOR RENT

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom house with bsmt for rent. Ladies or small family preferred. Avail. September 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.418.5479

**KENNEDY & EGLINTON**
Three bedroom house with all facilities.

Very good for small family with children.

Very convenient location with schools, banks, shopping, doctors.. also parking and garden.

Avail. immediately.

Please call: 416.285.4695

## APARTMENT FOR RENT

**MCCOWAN & EGLINTON**
2 படுக்கை அறைகளை கொண்ட Apt. ஒன்று வாடகைக்கு உள்ளது.
Avail. September 01, 2011.
416.792.2545 / 647.857.9773

**TUTORING (WEB DEVELOPMENT)**
***By Experienced Graduate Tutor***
Math 6 - 11, Physics - 11
Data Management - 12
MS Word, MS Excel, MS Access programming with C, Java & Visual Basic. HTMA, ASP, PHP & Mysql. Create web sites cheaply.
தொடர்புகளுக்கு: 416.706.1654

## TUTORING

**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS. ***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: **416.669.3101**

## TUITION

***FINCH & MIDDLEFIELD***
***GTA Squre Unit #230***
***Chemistry, Physics, Math, English, French, Biology***
***Homework Help Kindergarten to Grade 12.***
***Yoga*** வகுப்புக்களும் நடைபெறுகின்றது
***416.497.7660 / 647.771.6237***
***647.348.3423 / 647.780.7699***

## WANTED

We buy used Toyota Camry, Corolla Civic cars wanted. 1994 - 2000
Only. Any condition.
Steeve - 416.832.1359

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

## JOB JOB JOB

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.430.8238

**JAPANESE FOOD**
**QUEEN & WOODBINE**
Looking for kitchen helper & delivery driver.
தொடர்புகளுக்கு: ***416.918.9936***

Kitchen, cabinet, bsmt renovation, deck, car port, painting, city approval plan for car port, carpentry works, flooring.
தொடர்புகளுக்கு: 416.802.6067

Hardwood $3.99, Laminate $1.49 pluse installation.
தொடர்புகளுக்கு: 416.830.3932

**அம்மன் மூவிங் & டெலிவெறிஸ்**
Best Price in town.
குப்பை அகற்றுதல்
தொடர்புகளுக்கு: 416.999.9409

## MINI VAN SERVICE

Toronto Airport சேவை, கோயில்கள் மற்றும் உங்கள் வாகனத் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்
Rja: 416.858.4310 / 416.724.9427

**COMMERCIAL UNIT FOR SALE IN GTA SQUARE**
Window exposure, 2nd floor finished unit. Available for multiple salon, retails, rental office. Optical office. Asking price $139,900.
தொடர்புகளுக்கு: 416.315.9397

**COMPUTER REPAIR**
+ கணனி திருத்தவேலைகள்
+ கணனி தேவைகள்
+ அடிப்படை கணனி பயிற்சி
+ இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

**RULAW LEGAL SERVICES**
***Indrajith Ratnalingam***
***(Indran Ratnam)*** Licensed Paralegal
***Member of Law Society of Upper Canada***
***Tel: 416.754.4LAW (4529)***
***Fax: 416.754.4519***
Email: rulawlegal@gmail.com
5200 Finch Ave. East Suite 300
Scarborough, ON M1S 4Z5

மேலும் பக்கங்கள் 24, 26

## ROOM FOR RENT

## WARDEN & FINCH

சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Condo. வில் சகல வசதிகளுடனும் கூடிய இரு அறைகள் தளபாடங்களுடன் (Fully furnished) வாடகைக்கு உண்டு. மாணவர் அல்லது தனி நபர் விரும்பத்தக்கது. மாலை 4.00 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்: 416.509.6780



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 283

1) Let the teams be A, B, C, D, E and F. Any team plays four games with each of the other 5 teams. Hence each team plays 4 x 5 = 20 games. Total number of games is 6 x 20/2 = 60 (We must divide by 2 since team A playing team B is the same as team B playing team A)

(2) The first couple a1 a2 can be seated on the right or the left end of the bench giving 2 choices. In each position there are 2 ways each couple can arrange themselves, a1 a2 or a2, a1 and b1, b2, or b2, b1. Thus these their are 8 arrangement.

(3) (a) $f(-33) = \sqrt{3} - (-33) = \sqrt{36} = 6$ (b) $f(0) = \sqrt{3} + 0 = \sqrt{3}$
(c) $f(78) = \sqrt{3} + 78 = \sqrt{81} = 9$ (d) $f(3) = \sqrt{3} + 3 = \sqrt{6}$

(4) Given the line 16x + 4y - 101 = 0 and a point (3, -4). Normal to the line is h = (5, 2) which is a direction for a line perpendicular to 10x + 4y - 101 = 0. A vector perpendicular to n is (2, -5). The equation of the line perpendicular to 10x + 4y - 101 = 0 and passing thru (3, -4) is (2, -5) (x - 3, y + 4) = 0
2x - 5y - 26 = 0 ——(2) 10x + 4y = 101——(1)
Solving these equations x = (2½) y = -1

(5) Let the foot of the perpendicular to be
A (-6 + 5t, -7 + 3t, -3 + 4t)
QA = (-9 + 5t, -9 + 3t, -7 + 4t)
Since QA is perpendicular to the line QA. d = 0
-45 + 25t - 27 + 9t -28 + 16t = 0




50t = 100 t = 2
The co - ordinates of the foot of prependitucular are (4, -1, 5)

## Tutorial 284 Questions

(1) Determine the vector equation of a plane
(a) Parallel to the yz plane containing the point (6, 4, 2)
(b) the plane containing the x - axis and the point (-1, -4, -7). (For Gr. 11& 12).

(2) Find the scalar equation of the plane that contains the intersecting lines
x - 2/1 = y/2 = z + Z+3/3 and x - 2/-3 = y/4 = z + 3/2 (For Gr. 11 & 12)

(3) The integer 64800 can be factored as $2^5 \times 3^4 \times 5^2$
(a) How many divisors does 64800 have?
(b) What fraction of these divisors is even? (For Gr. 11& 12)

(4) Find the area of the largest rectangle that can be inscribed inside a semicircle with radius of 10 units. Place the length of the rectangle along the diameter?
(For Gr 12)

(5) A river is stocked with 5000 salmans. The population of salman increases by 7% per year. What will the population in 3 years? (For Gr. 12)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at *Scarborough & Stouffville*
**Contact: 647.340.9490 / 647.831.0363**

**26வது வருட யாவேஸ் விளையாட்டு கழகத்தின் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றிப்போட்டிகள்**

ரொறன்ரோ மாநகரில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த யாவேஸ் விளையாட்டுக் கழகம் 26வது வருட நிறைவை முன்னிட்டு நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் **August** 6ஆம் தகதி (சனிக்கிழமை) **BIRCHMOUNT & FINCH** இல் உள்ள **Silver Springs** மைதானத்தில் காலை 9:00 மணியில் இருந்து சகல வயதுக்குட்பட்டோர் பிரிவிலும் நடைபெறவுள்ளது. தாயக ருசியுடன் உணவும் அனைவருக்கும் பரிமாறப்படவுள்ளது. அனைத்து உதைப்பந்தாட்ட ரசிகர்கள் அவர்கள் தம் குடும்பங்கள் அனைவரும் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: 416.450.5473 / 416.846.4403 / 416.897.5318

# குடிசார் தினம்

27ஆம் பக்கத்தொடர்ச்சி

குடிசார் தினம் கியூபெக்கில் கொண்டாடப்படுவதில்லை. அங்கு St. Jean Baptise Day என்று ஒரு விடுமுறை தினம் உண்டு. அது ஜுன் 24ஆம் திகதி கொண்டாடப்படும். Yukon இல் இது

இந்நாள் Yukon இல் 1896ஆம் ஆண்டில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதை கொண்டாடும் நாள் ஆகும்.

குடிசார் தினத்திற்கு அடையாளம் ஒன்றும் இல்லை. இத்தினத்தை ஒவ்வொரு மாகாணமும், பிரதேசமும் தமது கொடியையும் மற்ற மாகாணத்திற்குரிய




Discovery Day. இத்தினம் ஆகஸ்ட் மாதத்தில் வரும் மூன்றாவது திங்கட்கிழமையில் கொண்டாடப்படும்.

அடையாளங்களையும் உபயோகித்து சோடிப்பதன் மூலம் கொண்டாடி வருகிறது.

அடுத்த வருடம் குடிசார் தினம் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

## ஒன்ராறியோ

பூ - White Trillium
பறவை - Common Loon
மரம் - Easter White Pine
கனிப்பொருள் - Amethyst
குறிக்கோள் - 'Layal she began and loyal she remains'



ஞா. ஆரணி
அகவை 12

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.


## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259


மேலும் பக்கங்கள் 24, 25

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# குடிசார் தினம்
# Civic Day

இவ்வருடம் ஆகஸ்ட் முதலாம் திகதி, திங்கள் கிழமை ஒன்ராறியோவில் குடிசார் தினம் கொண்டாடப்படுகிறது.

ஆகஸ்ட் இல் வரும் முதலாவது திங்கட்கிழமையில் கனடாவில் பல இடங்களில் கொண்டாட்டங்கள் நடைபெறும். சில இடங்களில் இது ஒரு அரச விடுமுறை நாள் (Statutory holiday). சில இடங்களில் இதற்கு சட்ட அந்தஸ்து உண்டு. ஆனால் அரச விடுமுறை நாள் இல்லை. இந்த நாள் August Holiday, Civic Holiday, Provincial Day என்ற பெயர்களால் கனடாவில் அழைக்கப்படும். ஒவ்வொரு இடத்திலும் (மாகாணம், பிரதேசம்) இதற்கு வெவ்வேறு பெயர்கள் உண்டு.

கனேடியர்கள் இந்த குடிசார் தினத்தில் தங்களது கலாசாரம், வரலாறு, சாதனைகள் ஆகியவற்றை நினைத்துக் கொண்டாடுவார்கள். விளையாட்டு நிகழ்ச்சிகள், Barbecues, வாணவேடிக்கைகள் ஆகியவை நடைபெறும்.




குடிசார் தினம் British Columbia, New Brunswick, Saskatchewan, Nunavut, Northwest Territories ஆகிய மாகாணங்களில், பிரதேசங்களில் அரசாங்க விடுமுறை நாள் ஆகும். Alberta, Manitoba, Newfoundland and Labrador, Nova Scotia , Ontario, Prince Edward Island ஆகிய மாகாணங்களில் இது சட்ட அந்தஸ்து பெற்ற தினம், ஆனால் அரசவிடுமுறை நாள் இல்லை. Quebec, Yukon ஆகிய இரு இடங்களிலும் குடிசார் தினம் ஒரு கொண்டாடப்படும் நாள் அல்ல.

குடிசார் தினம் British Columbia Day (BC), New Brunswick Day (NB), Saskatchewan Day (SK), Heritage Day (AB), Natal Day (NS, PEI), Simcoe Day (ON), Colonel By Day (ON) என்று பல பெயர்களால் இடத்திற்கு ஏற்ப அழைக்கப்படும். இத்தினத்தில் பாட-சாலைகள், தபால் அலுவலகங்கள், வியாபார நிலையங்கள், அரச அலுவலகங்கள் பல மூடப்பட்டிருக்கும். வேலையாட்களுக்கும் இது விடுமுறை நாளாகும்.

குடிசார் தினம் முதலில் ரொறொன்ரோவில் ஒரு பொழுது போக்குக்கும், கொண்டாட்டங்களுக்கும் ஆன நாளாக தொடங்கியது. ஒன்ராறியோ குடிசார் தினம் இரண்டு வித்தியாசமான பெயர்களால் அழைக்கப்படும். ரொறொன்ரோவில் அது Simcoe Day எனப்படும். John Groves Simcoe என்றவர் York என்ற இடத்தை ஆரம்பித்தார். அதுதான் இப்போதைய ரொறொன்ரோ ஆகும். ஒட்டாவாவில் அது Colonel By Day எனப்படும். John By என்றவர் Rideau Canal ஐ கட்டத் தொடங்கினார். Bytown என்ற இடத்தை ஆரம்பித்தார். Bytown இன் இப்போதைய பெயர் ஒட்டாவா ஆகும்.


## JOB JOB JOB

Are you looking for honest work. Do you want to earn $2,500 to $6,000 per month Second language is an asset.

Call for an appointment. **Tel: 416-646-8860**

## OFFICE PLACE AVAILABLE FOR RENT IN A MEDICAL BUILDING

**BELLAMY & EGLINTON (Ground Floor)**

***Facilities Avail:*** Can be used as Legal Office, Accountant's Office Book Keeping, Medical Office, etc.
Lots of car parking. Close to TTC, Go station & other amenties.
***Location: 2950 Eglinton Avenue East, Scarborough, M1J 2E7***
***Contact: 647.885.7178***

## COTTAGE FOR RENT

**HWY 400 & HWY 12**

**2** படுக்கை அறைகள், சமையலறை, Living room சகல வசதிகளுடனும் உள்ள Cottage ஒன்று வாடகைக்கு உள்ளது. ***Close to beach, Midland church. More attractions. Weekdays or Weekends.***
தொடர்புகளுக்கு: **416.818.5493**

## RESTAURANT FOR SALE

**MARKHAM & STOUVILLE**

நல்லநிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் கனேடிய Breakfast உணவகம் ஒன்று விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: **416.737.9167**

## TROUT WATER FAMILY CAMPING



Cottage & Tent, Ponds for fishing and boating, Golf Car rentals, Bike rentals, Clean Showers, Flush Toilets, Cabins for rental, Day or Weekends, Storage Facilities, Playground for Volleyball, Soccer, Football.
***Contact : 416.727.6525 / 705.357.1754***

# விருதுநகர் - 4 பாண்டியன் கோயில்கள்

பழங்கால தமிழகத்தில் அரண்மனைகளுக்கு அடுத்து கோயில்களுக்கே பிரதான முக்கியத்துவம் இருந்தன. ஆனால் இன்று, அக்கால அரண்மனைகள் பல இடிந்து சிதிலமடைந்து காணாமல் போய்விட, கோயில்கள் நின்று நிலைத்திருக்கின்றன. கோயில்கள்தான் எதிர்காலத்தில் தங்கள் சிறப்புகளைச் சொல்லப் போகின்றன என உணர்ந்ததாலோ என்னவோ, கோயில்களை நின்று நிலைத்திருக்கும்படி மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து எழுப்பியிருக்கிறார்கள் அக்கால மன்னர்கள். அப்படியொரு கோயில்தான், விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம் அருகே தேவதானம் என்னும் ஊரில் அமைந்துள்ள அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி திருக்கோயில். 1000 வருடங்களுக்கு முந்தைய பழமையான கோயில் இது. பாண்டிய மன்னனால் கட்டப்பட்டது.

இக்கோயிலின் மூலவர்: நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி அம்மன்: தவமிருந்த நாயகி. தல விருட்சம்: நாகலிங்க மரம். பிரகாரத்தில் பிரம்மா, தவக்கோல பிரம்மா, தட்சிணாமூர்த்தி, சப்தகன்னியர், நந்தி, நடராஜர், நவக்கிரகம், பெருமாள், சனீஸ்வரர், சூரியன், வள்ளி தெய்வானையுடன் முருகன் ஆகியோரது சன்னதிகள் உள்ளன. கோயில் அருகிலேயே சிவகங்கை தீர்த்தக் குளம் அமைந்துள்ளது.

**- வழிப்போக்கன் -**

சிவ பக்தனான வீரபாகு பாண்டிய மன்னனுக்கும், விக்கிரம சோழனுக்கும் இடையே நீண்ட காலமாக பகை இருந்தது என்பது வரலாறு. விக்கிரம சோழனால், பாண்டிய மன்னன் மீது பலமுறை போர் தொடுத்தும், அவனை வெல்ல முடியவில்லை. எனவே, வஞ்சகத்தால் அவனைக் கொல்ல முடிவெடுத்தான். அவனுடன் நட்புகொள்வதாகக் கூறி, நச்சு கலந்த ஆடையை பரிசாக கொடுத்து அனுப்பினான். அந்த ஆடையை அணிந்தவர் எரிந்து சாம்பலாகி விடுவர். இறைவன் அருளால் சோழனின் சதித் திட்டத்தை, பாண்டிய மன்னன் அறிந்தான். தனக்கு பரிசாக கொடுத்தனுப்பிய நச்சு ஆடையை, அதைக் கொண்டு வந்த சேவகனுக்கே போர்த்தி விட்டான். சேவகன் எரிந்து சாம்பலானான். நச்சு ஆடையை அணிய விடாமல் பாண்டியனைக் காப்பாற்றிய சிவனுக்கு, பாண்டியன் எழுப்பிய கோயில்தான் இது என்கிறது தல வரலாறு. எனவேதான், நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி என்று பெயர்.




தமிழ்நாடு சுற்றுலா இடங்கள் - 94

இன்னும் கதை முடியவில்லை. அதன் பிறகு, சோழன் பார்வை இழந்தான். தன் தவறை உணர்ந்து, தனக்கு மீண்டும் பார்வை கிடைக்க, தேவதானம் வந்து பாண்டியனிடம் மன்னிப்பு கேட்டு, சிவனை வழிபட்டான். அதன் காரணமாக விக்கிரம சோழனுக்கு தேவதானம் தலத்தில் ஒரு கண்ணுக்கு மட்டும் பார்வையை சிவன் அருளினார். மற்றொரு கண்ணுக்கும் பார்வை வேண்டும் என்று அவன் உருக்கத்துடன் வேண்டினான். அப்போது அசரீரி ஒலித்தது. இன்னும் ஒரு கோயிலை இவ்வூர் அருகில் எழுப்பினால் பார்வை கிடைக்கும் என்றது. அதன்படி சேத்தூர் என்ற இடத்தில் கோயில் கட்டினான். பார்வையும் கிடைத்தது. கண் கெடுத்தவர், கண் கொடுத்தவர், கொழுந்தீஸ்வரர் என மூன்று சிவன் சன்னதிகள் இங்குள்ள குன்றின் மேல் உள்ளன. பிரம்மா இத்தலத்தில் தவக் கோலத்தில் இருப்பது தனி சிறப்பு. ஆண்டுதோறும் வைகாசி மாதம் நடைபெறும் பத்து நாள் பிரம்மோற்ஸவம் இப்பகுதியில் வெகு பிரசித்தம். விசாகத்திற்கு முதல் நாள் தேரோட்டம், மாசி மகத்தன்று தபசு, தெப்ப உற்சவம், சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி ஆகிய நாட்களிலும் கோயில் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 7.15 மணி வரையும் கோயில் நடை திறந்திருக்கும்.

கண் பார்வை குறை உள்ளவர்கள், குழந்தை பேறு இல்லாதவர்கள், ஆறாத தழும்புகளுடன் புண் உள்ளவர்கள் இங்கு பிரார்த்தனை செய்தால் பூரண குணமடையலாம் என்பது நம்பிக்கை. குறிப்பாக, குழந்தை பேறு இல்லாத பெண்கள், இக்கோயிலில் பிரசாதமாக வழங்கப்படும் நாகலிங்க பூவை பசும்பால் அல்லது மோரில் கலந்து பருகினால், குழந்தை பேறு உண்டாவதாக சொல்கிறார்கள். குழந்தை பேறு இல்லாத பெண்கள், தலைக்கு குளித்த ஐந்தாவது நாள் தம்பதி சமேதராக கோயிலுக்கு வரவேண்டும். கோயில் வளாகத்திலுள்ள நாகலிங்க மரத்திலுள்ள மூன்று பூக்களை பறித்து சுவாமிக்கு அர்ச்சனை செய்து வழிபட வேண்டும். பின்னர் அந்தப் பூக்களை பிரசாதமாக பெற்று சென்று பசும்பால் அல்லது மோரில் கலந்து மூன்று நாட்கள் இரவில் பருக வேண்டும். இப்படி செய்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்கிறார்கள்.

பாண்டியன் கட்டிய இன்னொரு கோயில், அருள்மிகு திருமேனிநாதஸ்வாமி கோயில். ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து பார்த்திபனூர் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. தமிழகத்தில் பாண்டியர்கள் கட்டிய பதினான்கு கோயில்களில் இது பத்தாவது கோயில். இக்கோயிலில் எட்டு வகை லிங்கங்களும் 9 வகை தீர்த்தங்களும் உள்ளன. மிகப் பழமையான திருமேனிநாதனை வழிபடுவது அற்புத அனுபவம் என்கிறார்கள்.

விருதுநகர் புரோட்டாவுக்கும், ஸ்ரீவல்லிப் புத்தூர் பால்கோவாவுக்கும் புகழ்பெற்றது போல், விருதுநகர் மாவட்டத்திலேயே அமைந்துள்ள அருப்புக்கோட்டை, மட்டன் கொழம்புக்கு வெகு சிறப்புடையது. சென்னையிலேயே அருப்புக்கோட்டை மட்டன் குழம்பு கிடைக்கும் எனப் பலகை தொங்கும் பல ஹோட்டல்களைப் பார்த்திருக்கலாம். திருநெல்வேலி அல்வாவை திருநெல்வேலியில் சாப்பிடுவதற்கும் சென்னையில் சாப்பிடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது தானே. எனவே, மட்டன் குழம்பு சுவையை ருசிக்க விரும்புகிறவர்கள், போகிற வழியிலாவது ஒருமுறை அருப்புக்கோட்டை போய் சாப்பிட்டுப் பார்க்கலாம்.

விருதுநகர் மாவட்டம் தொழிற்துறையில் முன்னணியில் இருப்பதற்கு காரணம், இம்மாவட்டத்திலேயேதான் சிவகாசியும் இருக்கிறது என்பதும்தான். உலகமெங்கும் கொண்டாடப்படும் திருவிழா கொண்டாட்டங்களில் மின்மினுக்கும் மத்தாப்புகளையும் வெடிக்கும் பட்டாசுகளையும் செய்து அனுப்பும் ஊர். குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படும் தொழில் நகரம். நவீன அச்சுத் தொழிலில் சிவகாசி பிரசித்தமானது. சிவகாசி ஒரு சுற்றுலா நகரம் இல்லையென்றாலும் பார்க்க வேண்டிய ஊர்.

வெயிலை குடித்து மனிதர்கள் வாழும் மாவட்டத்தில் சுற்றி வந்து கொண்டிருக்கிறோம். நிச்சயம் களைத்திருப்பீர்கள். கண்களுக்கு விருந்தளிக்கும் பசுமையான நிலப்பரப்பு, ஈரப்பதமான காற்று, ஒரு குளியலுக்கும் வழியிருந்தால் சிறப்பாக இருக்கும் என நினைப்பீர்கள்தானே. உங்களுக்காகவே காத்திருக்கிறது, வேம்பக் கோட்டை. மேற்குத் தொடர்ச்சி மலையில் அடிவாரத்தில் அமைந்துள்ளது. தோட்டங்கள், படகு சவாரி ஆகியவற்றுக்கு சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்குவது. வைப்பாறு ஆற்றின் ஏழு நீர்ப்பாசனப் பிரிவுகளிலிருந்து இந்த நீர்த் தேக்கத்துக்கு தண்ணீர் வருகிறது. பார்த்தாலே ஒரு தியான மன நிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும் நீர்ப்பரப்பில் மிதந்தபடி பயணிக்கும் அனுபவமே தனிதான். விருதுநகர் மாவட்டப் பயணத்தை முடித்துக்கொண்டு, அடுத்த மாவட்டத்துக்குள் நுழைவோமா? ஒரு இதழ் பொறுத்திருங்கள்.

# காலத்தால் அழியாத ஆங்கிலக் கவிதைகள் -4

## இரங்கற் பா - தோமஸ் கிறே

**இவர் 1716 முதல் 1771 வரை வாழ்ந்த ஆங்கிலக் கவிஞர். இவரது கவிதைகளில் இயற்கை வர்ணனையும் பாட்டாளி மக்களின் அவல வாழ்வும், மிகவும் அழகாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.**

- தமிழ் வடிவம் **துறையூரான்**

சென்ற இதழ் தொடர்ச்சி

கல்லறை வாசகம்
பூமியின் மடியில் உறங்கும் இளைஞன்
புகழும் பணமும் அறியா மனிதன்
என்றுங் கவலையும் ஏழ்மைப் பிறப்பும்
ஒன்றாய்த் தவழ்ந்தன வாழ்வு முழுவதும்

நேர்மை வாழ்வே நிறைவாய்க் கிடைத்தது
பரலோகம் கொடுத்த கொடையெனக் கொள்வோம்
இருந்த யாவையும் துன்பத்துக் களித்தான்
கிடைத்த நண்பன் ஒரு துளி கண்ணீர்

அவர்தம் வாழ்வின் வறுமை நிலையில்
மேலும் கூற எதுவுமில்லை - நடுங்கும்
நம்பிக்கை யில்லா வாழ்வின் முடிவில்
கடவுளின் மடியில் உறங்கிறான் நிம்மதியாக. (முற்றும்)

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 3 பகுதி 22**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

கதவைத் திறந்து கொண்டு வேகமாகச் சிலர், இல்லையில்லை பலர் வீட்டினுள்ளே ஓடிவந்தார்கள். எத்தனை பேர் என்ற எண்ணிக்கை தெரியவில்லை. வீட்டின் நிலவறைகள், மேற்தளம், வரவேற்பறையென எல்லா இடங்களுக்கும் சொல்லி வைத்தது போல் குழுக் குழுக்களாக ஓடிச் சென்றார்கள், எதுவித உத்தரவுகளும் இல்லாமல், நன்கு திட்டமிட்டது போல இருந்தது, அவர்களது நடவடிக்கைகள்.

எல்லோரது உடல்களும் வெள்ளை அங்கிக-ளால் முற்றாகவே மூடப்பட்டிருந்தன. உடம்பின் ஒரு பகுதி கூடத் தெரியவில்லை. முகப்பகுதி மட்டும் கண்ணாடி போன்ற ஒன்றினால், அங்கிகளுடன் இணைத்து தைக்கப்பட்டிருந்தபடியால், முகங்கள் தெரிந்தன. சிலரது கையில் வெள்ளையாய், நீண்ட தடி போன்ற ஒன்று. அதன் ஒரு முனையில் கருநிறக் குமிழ். குமிழ் சிறியதாய் ஒரு சென்னிற வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தது. ஏதோ டிக்டெக்டர் போல இருக்க வேண்டும்.

**◊ சி.வி. நாதன் ◊**

தடி போன்றதன் மறுமுனையில் சிறிய மொனி ட்டர் போன்ற ஒன்று. அதில் கிடையாகக் சில பச்சைக் கோடுகள் ஓடிக் கொண்டிருந்தன. வீட்டின் எல்லாப் பகுதிகளும் அந்த வெண்தடியினால் தடவிப் பார்ப்பது போன்று ஆராயப்பட்டுக் கொண்டிருந்தன.

இனியன் திக்குப் பிரமை பிடித்தவன் போல் நின்றான். வந்தவர்களின் தோரணைகளைப் பார்த்தவனுக்குப் பேச்சுக் கூட வரவில்லை. பெரும் அரசியல் செல்வாக்குள்ளவர்கள் போலக் காணப்பட்டார்கள்.

இன்று நடப்பவையெல்லாம் பெரும் புதிராகவே அவனுக்கு இருந்தன.

50 வருடத்துக்கு முன் தொலைந்து போனவன் தான்தான் என்று கூறிக் கொண்டு 25 வயதுக்காரன் வந்து நிற்கிறான். பின்னராகப் பெருங் கும்பல் ஒன்று வெள்ளை உடுப்புகளுடன் வந்து வீடு முழுவதையும் சல்லடை போட்டுத் தடவது போல. எதையோ தேடுகின்றது. அதுவும் வீட்டுக்காரன் என்னைக் கேட்காமலே.

திலகத்திற்கும் ஒன்றும் புரியவில்லை, ஒன்றும் தெரியவில்லை. வீட்டுக்குள் பலர் ஓடியாடித் திரிவது தெரிகின்றது. ஆனால் ஏனென்று அவளால் புரிந்து கொள்ளமுடிய வில்லை. வித்தியாசமாக ஏதோ நடக்கிறது என்பதை மட்டும் அவளால் ஊகிக்க முடிந்தது. ரேவதி திலகத்துடன் ஒரு இருக்கையில் இருந்து கொண்டாள். திலகத்திற்கு ஆறுதலாக ரேவதியோ அல்லது ரேவதிக்குத் துணையாக திலகமோ என்று தெரியவில்லை.

அந்த இருவரும் ஒன்றுமே பேசாமல் நடப்பவற்றை மௌனமாகப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவர்கள் இவற்றைப் பார்த்து அதிசயப்படவோ, அல்லது பயப்படவோ இல்லை. 'இவையெல்லாம் நாங்கள் எதிர்பார்த்ததுதான்' என்பது போல இருந்தது, அவர்களது தோரணை.

இந்நேரத்தில் வெண்ணங்கியும், தலைக் கவசமும் அணிந்த இருவர் நேராக இனியனி டம் வந்தார்கள். வந்த கும்பலுக்குள் வித்தியாசமாகக் காணப்பட்டார்கள். அவர்களுக்கு இனியனைத் தெரிந்திருக்க வேண்டும். நேரடியாகவே ஆங்கிலத்தில் இனியனுடன் உரையாடினார்கள்.

"மிஸ்டர் இனியன்" என்றார் அவர்களில் ஒருவர்.

இனியனுக்கு பதில் கூறமுடியாது இருந்தது, பிரமிப்பால்.

"தொந்தரவுக்கு மன்னியுங்கள். நான் அன்ரனி றோபேட்சன். கனடாவின் விண்வெளி ஆய்வு மையத்தின் பொது சனத் தொடர்புத் தலை-வராக இருக்கின்றேன்." என்றவர் தனது சட்டையில் இருந்த அடையாள அட்டையைக் காட்டினார். வெண்ணங்கியினுள் இருந்த தனது கையை நீட்ட, இனியன் என்ன செய்வதென்று தெரியாமலேயே தனது கையை நீட்டினான். ஆன்ரனி றோபேட்சன் தடித்த பாதுபாப்பு உறைக்குள் இருந்த தனது கையால் இனியனின் கையைப் பற்றிக் கைகுலுக்கினார்.

"இவர் வில்லியம் சான் நாசாவின் உயர் அதிகாரிகளில் ஒருவர்." அருகில் நின்றவரைச் சுட்டிக் காட்டினார். சிநேகமாகச் சிரப்பது கண்ணாடியின் ஊடாகத் தெரிந்தது. அவரது சட்டையிலும் அடையாள அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. அங்கு நின்ற எல்லோரது சட்டைகளிலும் அடையாள அட்டைகள் இருப்பதைக் கண்டான் இனியன்.

"எங்களுடன் கனடியத் தேசியப் போலிசாரும், நாசாவின் உத்தியோகத்தவர் களும் இருக்கின்றார்கள்."

இனியனுக்குச் சற்றுத் தென்பு வந்தது. றோபேட்சனைப் பார்த்து, "இதெல்லாம் என்ன? நாங்கள் என்ன செய்தனாங்கள்? நீங்கள்தான் இந்த இருவரையும் அனுப்பியதோ? என்றவன் இன்பனையும், நாகராசனையும் சுட்டிக் காட்டினான்.

இன்பனையும் நாகராசனையும் திரும்பிப் பார்த்தார்கள், இருவரும். "இல்லை நாங்கள் தேடி வந்தவர்கள் இவர்களாகத்தான் இருக்க வேண்டும். உண்மையில் எங்களால் வந்த தொந்தரவு இவர்களால் வந்ததுதான்" என்றார் வில்லியம் சான். "அப்படியென்றால் இருவரையும் பிடித்துக் கொள்ளுங்கள் எங்களை விட்டுவிடுங்கள்." அவர்களை இன்பனும் நாகராசனும் என்று இன்னமும் அவனது மனம் நம்பவில்லை. திலகமும் ஒன்றும் பேசவில்லை. - இன்னமும் வரும்...


# Tutoring

(Grade 1-12, College, & University)

* English * French *Math * Science * Engineering *

❖ Systematic Plan for Each Student to Help Build Strong Base in Core Subject Areas

❖ Strictly Follows Ontario Curriculum

GTA Academy

Ph: (647) 705 0725

New center now in operation in GTA Square (Finch & Middlefield)

We Provide

Yoga & Weight Loss Classes

647.780.7699

# பழங்களின் பலாபலன்கள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

### திராட்சைப்பழம்



இதனில் பலவகை உண்டு. நாம் பெரும்பாலும் கறுப்புநிறம் கொண்ட திராட்சை, பச்சைநிறம் கொண்ட திராட்சைப்பழங்களை தேர்ந்தெடுப்பதில் சிறந்த பயனைப் பெறுகின்றோம். பழத்தில், இரும்பு, செம்பு, பொஸ்பரஸ், கல்சியம் போன்ற சத்துக்களைத் தன்னகத்தே கொண்டது. இதன் சுவை இனிப்பு, புளிப்புடன் இனிப்புக் கொண்ட வலுவூட்டக்கூடிய உயிர்ச்சத்துக்களான A, B, C என்பவற்றை உருத்துடையதாகும். இப்பழச்சாற்றால் இருதயம் வலுப்பெற்று அதனிடையே ஏற்படும் படபடப்புநிலையை அகற்றக்கூடியது. வெப்புநிலையை இலகுவாக அகற்றக்கூடியது. ஹோர்மோகுளோபின் சத்தைக் குறையாமல் பாதுகாத்து எமக்கு சோகை நிலை ஏற்படாது பாதுகாக்கும் திறன் உடையது. சிறுநீர் கடுப்பு, தேகவெப்பு, கண்ணெரிவு, நாவரட்சி யாவும் தணிந்து சுகம் பெறவழியமைக்கும். சுரம், சளி நிகழும்போது நன்கு சாறு எடுத்து நல்ல தேனும் கூட்டிப் பாவித்து வந்தால் யாவும் தணியத் தொடங்கும். விந்து வருவது குறைந்து தாமதமான நிலையுள்ளோர் நல்ல பழங்களைத் தேர்ந்தெடுத்து உண்பதுடன் பாலுடன் தேன் துளியிட்டுப் பாவித்து வந்தால் பயன்கிட்டும். ஞாபகசக்தி குன்றல், நரம்புப் பெலவீனம், பதறல் நிலை இருப்பின் இரவு வேளை உறங்குவதற்கு முன் பழத்தின் சாற்றைப் பிழிந்து எடுத்து, பேரீச்சம்பழத்தில் ஊறவிட்டுப் புசித்துவர நன்கு உரம்பெற்று சகல குறைபாடும் தணிந்து விடும். மாதவிடாய் கோளாறு உள்ளோர் நாளாந்தம் இப்பழத்தைப் பாவித்து வந்தால் தக்கபயன் பெறமுடியும்.

குழந்தைகளுக்கும் இப்பழச்சாறு மிகவும் முக்கியமாகும். பாலுடன் கலந்து கொடுத்து வரலாம். மலச்சிக்கல், சளித்தன்மை அற்றுப்போகும். நாள்தோறும் காலை மாலை இப்பழத்தின் சாற்றை பாவித்து வந்தால் இரத்தசுத்தி, அதி வெப்பு, பித்தத்தன்மை யாவும் அகன்றுவிடும். மூலவியாதி, பாண்டு, காமாளை, சோகை யாவற்றையும் தணிக்கும். பச்சைநிறம் கொண்ட திராட்சைபழத்தை காலைமாலை பாவித்து வந்தால் நாவில் ஏற்படும் புண், நாசிப்பகுதி எரிவு, வாய்ப்புண் என்பன அகன்று விடும். குடல்வருத்தம் உடையவர்களும் காலை, மாலை உடல்நிலைக்கு அமைய எடுத்து வந்தால் நற்பயன் உண்டு. தங்கள் குழந்தைகள் வளர்ந்து வருவதில் குறைபாடு காணும் இடத்து உலர்ந்த திராட்சைப் பழத்தை தவறாது கொடுத்துவரின் தசைப்பற்று உருவாகி மாற்றம் காணுவதை அவதானிக்க முடியும். முதுமைநிலை மாறி இளமைத்தோற்றம் கொடுக்கும் பழங்களில் இதுவும் ஒன்றாகும்.


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909




# ஒரு ஓவியரின்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடர வேண்டியிருந்ததால், அது எங்களுக்குப் பெரிய தாக்கமாகவும் இருக்கவில்லை.”

திரைச்சீலை என்றால் என்ன?

“திரைச்சீலை என்ற தலைப்பு ‘யவனிகா’ எனும் மலையாளத் திரைப்படம் மூலம் வந்தது, என்னை மிகவும் கவர்ந்த இயக்குனர் கே.ஜீ.ஜோர்ஜ் இயக்கிய திரைப்படம். ‘யவனிகா’ என்றால் திரைச்சீலை என அர்த்தம். புத்தகத்தில் ‘யவனிகா’ பற்றியும் ஒரு கட்டுரை இடம்பெற்றுள்ளது, அதன் தலைப்பும் ‘திரைச்சீலை’. அதுவே முழுத் தொடருக்கும் தலைப்பாக வந்ததால், புத்தகத்துக்கும் அதையே நான் தலைப்பாக வைத்துவிட்டேன்.”



இப்புத்தகம் பற்றி சுருக்கமாகச் சொல்ல முடியுமா?

“திரைச்சீலையில் எனக்குப் பிடித்த திரைப்படங்கள் மற்றும் திரைப்படக் கலைஞர்கள் பற்றிச் சொல்லியிருப்பேன். கால வரிசைப் படியோ அல்லது ஆண்டு வரிசைப் படியோ ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு விடயத்தைத் தொடும். குறிப்பாக, மேற்குலகத் திரைப்படத்தை மையமாக வைத்து வந்த திரைப்படங்கள் அவற்றைத் தழுவி வந்த படங்கள் என அப்புத்தகம் ஓர் அரட்டையாகச் செல்லும். எனக்குத் தெரிந்த விஷயங்களையும் தகவல்களையும் எழுதியுள்ளேன். நடிப்பு என்னும் பகுதியில் சிவாஜிகணேசனை மையமாக வைத்து எழுதியிருப்பேன். அவர் ஏன் அளவுக்கு மீறிய நடிப்பு எனும் குற்றச்சாட்டுக்காளானார்? அவர் ஏன் மிகைப்படுத்தி நடிக்கவேண்டியிருந்தது? அவர் வாழ்ந்த காலமென்ன?, அவருடைய சக நடிகர்களின் நடிப்பு எப்படியிருந்தது? மற்றும் அப்போது திரைப்பட உலகம் எப்படியிருந்தது? எனச் சொல்லியிருப்பேன். அவையனைத்தும் என்னுடைய கண்ணோட்டத்திலிருந்து சொல்லியிருப்பதுதான் இந்தப் புத்தகத்தின் அடக்கம்.

இது நூலாக வருமென்று நான் நினைத்தே பார்க்கவில்லை. ‘ரசனை’ இதழில் ஐந்து ஆண்டுகளாக மாதாந்தம் எழுதிக் கொண்டிருந்தேன். எழுதிய போதே கட்டுரைகளைப் படித்து பிரபல எழுத்தாளர்கள் கலாப்பிரியா, வண்ணதாசன் மற்றும் வைரமுத்து போன்றோர் படித்து விட்டு எனக்கு விமர்சனம் சொல்வார்கள். அது எனக்கு ஊக்கம் கொடுத்தது. பிரபலங்கள் என் கட்டுரைகளைப் படிக்கிறார்கள் என்ற பொறுப்புணர்விலும் பயத்திலும் அக்கறையிலும் ரொம்பக் கவனமாக எழுதினேன். திரிசக்தி வெளியீட்டகத்தினர் சிறந்த கட்டுரைகளைப் புத்தகமாகப் போட்டார்கள். அதிலொன்று தான் என்னுடைய ‘திரைச்சீலை’.”

விருது செய்தி அறிந்ததும், உங்கள் மன நிலை எவ்வாறு இருந்தது?

“எப்போதுமே நான் எந்த ஒரு விருதுக்கும் புகழுக்கும் சந்தோஷப்பட்டதேயில்லை. நான் எப்போதுமே இயல்பாக இருக்கும் நபர். விருது செய்தி கிடைத்ததும், ஒரு மனிதனுக்கு இருக்கக் கூடிய மகிழ்ச்சி சில கணங்கள் எனக்கு இருந்தது. அன்றாடம் உழைத்து வாழ வேண்டிய பொருளாதார சூழ்நிலையில் இருக்கும் என்னை ஒரு வாரமாக பேட்டி, புகைப்படமென சூழ்ந்துவிட்டார்கள். பின் அதிலிருந்து மீண்டுவிட்டேன். இந்த விருதை சாதாரணமாக எடுத்துக்கொண்டு எனது அன்றாட வாழ்க்கைக்கு திரும்பிவிட்டேன்.”


Ontario Vegetarian Food Bank

Employment Training & Skills Resource Centre

**Certified Food Handlers**

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



**Food Handler Training available for:**
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify

**CALL TO REGISTER:**
**(416) 744 (HELP) 4357**

**Winter Food and Fund Drive** Started from Nov.15, 2010 Mar.15, 2011
“No One Should Go Hungry”

**HELP US TO HELP THE HELPLESS!**
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# மணி தரளம் வீசி அணி அருவி சூழ மருவு கதிர்காமம்

கதிர்காமம் என்றால் தினை நிறைந்த கிராமமாகும். அத்துடன் ஒளி மிகுந்த கிராமம் என்றும் பொருள் கொள்ளலாம். முருகப் பெருமானின் திருக்கரவேலின் ஒளி அங்கு பிரகாசிக்கின்றது. கதிர் என்ற சொல்லை முதலாகக் கொண்ட கந்தன் ஆலயம் இலங்கையின் தென்பகுதியிலுள்ள கதிர்காமமாகும். மயூரன் மனம் மகிழ்ந்து உறையும் இடம் மலைப்பகுதியாகும். அது குறிஞ்சி நிலம் எனப்படும். குறிஞ்சிநிலத் தலைவன் குமரன் 'சேயோன் மேய மைவரை உலகு' என அவனது இருப்பிடம் சிறப்பிக்கப்படுகின்றது. இயற்கையில் இறைவனைக் கண்டு இன்புற்ற தமிழர் வாழ்விற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தெய்வம் அவன். அவன் தமிழ்கடவுள். தமிழர் கடவுளுமாவான்.

முருகு என்றால் அழகு எனப்பொருள். அழகினை ஆராதனை செய்யாதவர் அகிலத்தில் எவருமிலர். அழகையே கடவுளாக் கொண்டு பண்டைத் தமிழர் போற்றிய தெய்வம் முருகன். அழகு அனைவரையும் ஆட்கொள்ளும் தன்மையது. எனவே அடியவர் அவன்பால் ஈர்க்கப்படுவதில் வியப்பில்லையன்றோ! நீலமயில் ஏறிவரும் கோலக் குமரனது எழிற் தோற்றத்தையும் ஞாலம் வியக்கும் அவனது அருளாற்றலையும் சாலவும் போற்றுவர். திருமுருகாற்றுப்படைப்பாடல் இது.

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு ஓ
வற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்

கதிர் காமத்தின் கந்தன் காவடிக் கந்தனாக காட்சி தருகின்றான். காவடி சுமந்து அவனை நாடிச் சென்று பாவடி பாடி அவனது சேவடி பணிவர் பக்தர்கள்.

ஆறு முகனின் படைவீடுகள் ஆறும் உடம்பின் ஆறு ஆதாரங்களை குறிப்பனவாகும். அவையாவன
சிரம் - மூலஸ்தானம் - பழமுதிர்சோலை
புருவம் - அர்த்தமண்டபம் - திருத்தணிகை



கண்டம் - மகாமண்டபம் - திருவேரகம்
மார்பு - ஸ்நபனமண்டபம் - திருவாவினன் குடி
வயிறு - அலங்கார மண்டபம் - திருச்செந்தூர்
ஆசனம் - சபா மண்டபம் - திருப்பரங்குன்றம்

தமிழ்நாட்டில் ஆறுபடை வீடுகள் இருப்பதைப் போன்று இளங்குமரனுக்கு இலங்கையிலும் படைவீடுகள் ஆறுண்டு. அவையாவன; செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், நல்லூர், மண்டூர், சித்தாண்டி, கதிர்காமம் ஆகும். மயூரம் ஏறி விளையாடும் முகம் ஒன்று. ஈசனுக்கு ஞான உபதேசம் செய்த முகம் ஒன்று. அடியவர் வினை தீர்த்த முகம் ஒன்று. வேல் வாங்கி நின்றமுகம் ஒன்று. சூரனை வதைத்த முகம் ஒன்று. வள்ளியை மணம் புரிந்த முகம் ஒன்று. இவை ஆறு முகங்களின் அருட் செயல்களாகும்.

ஆன்மா இறைவனுடன் லயப்படுதற்கு ஆலயம் அமைதியான இயற்கை எழில் கொஞ்சும் காடும், சுனையும், களனியும், சலசலத்து ஓடும் அருவியும் சூழும் இடத்தில் அமைந்திருப்பது அவசியமாகும். குறிஞ்சி நிலமும், கதிரை மலையும், செல்லக் கதிர்காமமும், மாணிக்க கங்கையும், இணைந்து கதிர்காமத்தை தெய்வீகம் மணக்கும் திருத்தலமாக்கியுள்ளது. கதிர்காமத்தில் பூசை செய்வோர் கப்புறாளைமார் எனப்படுவர். இவர்கள் வாய்கட்டிப் பூசை செய்கின்றார்கள்.

கந்தவேள் வள்ளியம்மையை மணம் புரிந்து வாழ்ந்த கிராமம் கார்த்திகேய கிராமம் ஆயிற்று. காலப் போக்கில் அது கதிர்காமம் எனத் திரிபு பெற்றது என்பர். இங்கு கந்தவேள் மானிட உருத்தாங்கி அடியவருடன் அடியவராகி அருள் பாலிப்பார் என்பது ஐதீகம். எனவே அடியவரின் பக்திப் பரவசம் பொங்கிப் பிரவாகிக்கும் தெய்வீக பூமி அது. மற்றொரு சிறப்பு பாதயாத்திரை மூலம் அடியவர் செல்வதாகும். பண்டைக்காலத்தில் போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாததினால் யாத்திரிகர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பகுதிகளிலிருந்து கால்நடையாகவே கதிர்காமம் சென்றனர். போகும் வழியில் காணமல் போவதுமுண்டு. வனவிலங்குகளுக்கு இரையாவதுமுண்டு. இதனை மோட்சப் பேறு என்றும் கருதினர். காடுகளையும் களனிகளையும், வனாந்தரங்களையும், மலைகளையும் கடந்து மான்-மரைகளையும், யானைகளையும் பறவை இனங்களையும் கண்டு களித்து செல்வது மனதிற்கு இதந்தருவதாகும். இது ஒரு பக்தி யாத்திரை எனலாம். ஆனால் இன்று அதிகமானோர் வாகனங்களிலேயே செல்கின்றர். பிறநாட்டவரும் கதிர்காம விழாவில் பங்கேற்பது அதன் மகத்துவத்தை உணர்த்துவதாகும்.

திருவிழாவின் போது மந்திரப் பெட்டி யானை மீது ஊர்வலமாக எடுத்து வரப்படுகின்றது. இதற்குள் என்ன இருக்கின்றது என்பது எவருக்குமே தெரியாது. இதுதான் கதிர்காம இரகசியமாகும். இறைவன் மந்திரமும், தந்திரமும் மருந்துமாக உள்ளான் என்பதையே இது உணர்த்துகின்றது.

இன்று கதிர்காமத்தில் அமைதி இல்லை. ஆன்மீகம் குறைந்து விட்டது. இந்துக்களின் வாடை விலகிக் கொண்டே இருக்கின்றது. அது ஒரு உல்லாச புரியாகவும் வியாபார நிலையமாகவும் மாறிக் கொண்டு வருவது துரதிஷ்டமானது. இருந்தும் கந்தனருள் கட்டி இழுக்கும் தன்மையது.

கதிரமலையில் களிநடம் புரியும் கந்தா
உனக்கிணையேது சொல், கந்தா
மதுர இசையொலி மாண்புறு சோலையும்
மாணிக்க கங்கையும் மருவிடும் ஊரவர்
கோல மயிலூர்ந்து அண்டம் அதிர்ந்திட
ஞாலம் வலம் வரும் ஞானபண்டிதா
வேளை தொறும் நினைத்தொழும் அடியவர்
வினை களைந்திடும் வெற்றி வேலவனே.



நா. க. சிவராமலிங்கம்




ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்

பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# தற்கொலை: நிரந்தரமான பிரிவு

மனிதர்களையும், விலங்குகளையும் கொலை செய்து வந்த மனித இனம் தன்னைத்தானே, கொலை செய்யமுடியும் என்பது பரிணாமவளர்ச்சியின் ஒரு கட்டம். ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் ஒவ்வொருநாளும் 1000 பேர் தற்கொலை செய்ய முயல்வதாகவும் அதில் 18 பேர் இறந்து விடுவதாகவும் ஒரு தகவல். உலகினை எடுத்தால் ஒவ்வொரு நிமிடமும் இத்தற்கொலை எங்கோ ஒரு இடத்தில் நடந்து முடிகின்றது. இக்கட்டுரை எழுதுவதற்குள் எத்தனைபேர் தற்கொலை செய்தார்களோ தெரியவில்லை.

தற்காலிகமான பிரச்சினைகளிலிருந்து நிரந்தரமாக இவ்வுலகினை விட்டுப் பிரிய எடுக்கின்ற இம்முயற்சியில் சில கண்டுபிடிப்புக்கள் - இளம் வயதினர்களே கூடுதலாக தற்கொலையில் ஈடுபட்டுள்ளனர். பெண்களை விட ஆண்களே கூடுதலாக தற்கொலை செய்கின்றனர். கறுப்பு இனத்தவரை விட வெள்ளை இனத்தவர்களே கூடுதலாக தற்கொலை செய்கின்றனர். பெருமளவு தற்கொலைகள் துப்பாக்கிகளால் செய்யப்படுகின்றன. சில குறிப்பிட்ட மாதங்களில் கூடுதலான தற்கொலை நிகழ்கின்றன. எந்தக் காரணத்திற்காகவும் தற்கொலை நிகழலாம். மரபுரீதியாக பாரம்பரியம் தற்கொலையினை தூண்டுகின்றது. இப்படிப் பல காரணிகள்.

இன்று உளவியலாளர்கள், சமூகவியலாளர்கள், சட்டவல்லுனர்கள், அரசியல் தலைவர்கள் அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ள இத்தற்கொலை (Suicide) என்பது 1650 முதல் பாவனைக்கு வந்த சொல். முன்பு சுய அழிப்பு (Self Destruction) அல்லது சுயகொலை (Self Murder) என்பது மாற்றமடைந்து 'Suicide' ஆனது. ஜப்பானில் இதனை 'Harakiri' என்றே அழைப்பர்.

ஆய்வுரீதியாக Morselli என்ற இத்தாலியரே முதலில் 1979 இல் இத்தற்கொலை பற்றி ஆய்வு செய்தவராவர். ஆனால் சிறந்த ஆய்வினை வெளியிட்டவர் Durkheim என்பர். தற்போது அமெரிக்காவில் தற்கொலையியல் (Suicidology) என்ற பாடம் தனியான துறையாகியுள்ளது.

முதலில் 'கடவுள் தந்த உயிரை எடுப்பது பாவம்' என்று நம்பப்பட்டது. இப்போது அந்த நிலையில்லை. வர்த்தகர்கள், அரசியல்வாதிகள், நடிக-நடிகையர்கள் போன்ற பிரபலங்கள்தொட்டு வறுமையில் வாடும் தெருவோர பிச்சைக்காரர் வரையில்



இறுதிமுடிவு எடுப்பது தற்கொலையில் தான். பழைய காலம் முதல் இன்று வரை தற்கொலை பலருக்கு ஒரு விளையாட்டு போன்று உதவியும் உள்ளது. தற்கொலை செய்வது கோழைத்தனமானது என்று கூறுவது கூட இன்று பிழையோ என்று சிந்திக்க தூண்டுகின்றது. காரணம் 'தற்கொலை' பற்றி மதிப்பீடு செய்தவர்களே இறுதியில் தற்கொலை செய்து கொண்டது தான்!

தற்கொலை செய்வதற்குரிய காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதி தீவிரமான தாழ்வுச் சிக்கல், மறைந்துள்ள ஆவேச உணர்வுகள், விரக்தி, வெட்க உணர்வு, குற்ற உணர்வு, உதவியின்மை, மனச்சோர்வு, மன அழுத்தம், பாலியல் குறைபாடு, குடும்ப வன்முறை, பாலியல் வல்லுறவு, உறவினர் மரணம், நிதிநெருக்கடி, பலதோல்விகள், இப்படிப்பல. தற்போது மிகவும் சிறிய சிறிய காரணங்களுக்காக தற்கொலை செய்கின்றனர். தற்கொலை செய்பவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதும் கண்டறியப்பட்டது. இதனை 'எச்சரிக்கை அடையாளம்' என கொள்ளலாம். அடிக்கடி இதுபற்றி கூறுவார்கள், தனிமையில் வாழ்வார்கள், நித்திரையின்றி தவிப்பார்கள், உளவியல் வேறுபாடுகள் ஏற்படல், சுயகணிப்பு குறைபாடு, அடிக்கடி விபத்துக்களில் ஈடுபடுதல், தொடர்புகளை குறைத்துக்கொள்ளல் போன்ற பல.

மருத்துவப் பிரச்சினை, சமூகவியல் பிரச்சினை, தத்துவப்பிரச்சினை, ஒழுக்கப்பிரச்சினை போன்ற பலவற்றின் கூட்டு இணைப்பு இத்தற்கொலை. வறுமை மட்டுமல்ல வளமுள்ளவர்களும் தெரிந்தெடுக்கும் இத்தற்கொலை உணர்வாளர்களில் 75 சதவீதத்தின் முன்கூட்டியே சொல்லிவிடுவதாகவும் ஆய்வுகள் உண்டு. சிலர் தற்கொலையை ஒரு மிரட்டுதலாகவும் செய்கின்றனர். எனவே ஒருவரது தன்னிலைச் சீர்குலைப்பு (Self Destruction) ஏற்படும்போது சிகிச்சையளிக்க வேண்டும்.

தற்கொலைக்கு தெரிந்தெடுக்கும் இடங்கள், நேரங்கள் மிகவும் வியப்பூட்டுபவை. பலநாட்கள் மனதிற்குள் திட்டமிட்டு செய்வது இவர்களுடைய வேலை. இது ஒரு நுட்பமான முறையில் அமைந்திருக்கும். நண்பர்கள், உறவினர்களை பாதிக்கும் இச்சீர்குலைவு நாட்டில் மிகப்பெரிய அறிஞர்களையே சிந்திக்க தூண்டுகின்றது. 'இவருமா இப்படி செய்தார்? இவர் ஏன் இப்படி தற்கொலை செய்து கொண்டார்? ஏற்கெனவே சொல்லியிருந்தால் நாம் உதவியிருப்போமே! கோழைத்தனமாக செய்துவிட்டாரே! இப்படியெல்லாம் நாம் அங்கலாய்ப்போம்'. ஆனால் அவர்கள் அதுபற்றி கவலைப்படமாட்டார்கள்.

கூடுதலான மக்கள் உளச்சோர்வு என்னும் நோயினால் பீடிக்கப்பட்ட பின்பு தற்கொலை செய்கின்றார்கள். இவர்கள் வாழ்வினை இழந்தவர்கள் போல் தவிப்பவர்கள். தற்கொலை உணர்வு தூண்டப்பட்டவர்களிடம் 'Serotonin' என்ற இராசாயன மாற்றம் அதிகரிக்கிறது என்பது கண்டறியப்பட்டுள்ளது. மூளையுடன் சம்பந்தப்பட்டுள்ள இம்மனநிலைத்தாக்கம் ஒருவரது ஆளுமையில் மாறுதல்களை ஏற்படுத்தவல்லது. இதனால் தற்கொலை செய்யும் ஒரு பெண் தனது கைகளை வெட்டுவார், தூக்கமருந்துகளை போடுவார். இவை அவர்களை தப்பிக்க வைத்துவிடும். ஆனால் ஆண்கள் தங்களை சுட்டுக் கொள்வர் அல்லது கூரைகளிலிருந்து குதித்துக்கொள்வர். இதனால் மரணமடைகின்றனர். எனவே தற்கொலை முயற்சியில் இறப்பவர்கள் கூடுதலாக ஆண்களே. அத்துடன் குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களும், மூளைக்கோளாறு உடையவர்களும் இலகுவில் தற்கொலை செய்கின்றனர்.

தற்போது புதிய திருப்பம் இளைய வயதினர்களிடையில் ஏற்பட்டுள்ளது. மூன்றுமடங்கு தற்கொலை செய்பவர்களாக இவர்கள் உள்ளனர். பக்குவமின்மை, வேலையின்மை, வெறுமை உணர்வு, காதல் தோல்வி, சமூகவிரக்தி என்பனவே இதனை தூண்டுவன.

இவ்வாறான தற்கொலைகளைத் தடுப்பதற்கான வழிகள் இன்று கூறப்படுகின்றன. முக்கியமான எச்சரிக்கை அடையாளமுள்ளவர்களைக் கண்டறிந்து சிகிச்சை செய்தல், புதிய வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்குதல், வகுப்பறைகளில் இதனை ஒரு பாடமாக கற்பித்தல், பல்கலைக்கழகத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளல் மிகவும் முக்கியமாகும்.

வாழ்கின்ற குறுகிய காலத்தை சுவையாக மாற்றுகின்ற முயற்சியில் இன்று அரசுகள் முயல்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தின் பெரும்பகுதி இத்தற்கொலை பிரச்சினைகளாக செலவிடப்படுகின்றது. எனவே தடுத்து நிறுத்துவது அல்லது குறைப்பது இன்றுள்ள தேவையாக வரப்போகும் ஆபத்தினை உலகம் என்று உணருமோ தெரியவில்லை.!



**எஸ். பத்மநாதன்**
**சிந்தனைப் பூக்கள்**


## YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

## வெளிவந்துவிட்டது!



பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**
**மருத்துவ கைநூல்.**
கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**
*5215 Finch Ave. E, #201*

# தனித்துவத் தமிழறிஞர்



சீரார் பெருமை தமிழுக்குச்
சேர்த்த தனித்துவத் தமிழறிஞர்
பேரா சிரியர் சிவத்தம்பி
பிறவிக் கடலைத் தாண்டினரோ?

அறிவின் ஊற்று வற்றியதோ
ஆய்வுக் கண்ணும் மூடியதோ
திறமை சான்ற செந்நாவும்
செயலிழந் தந்தோ அடங்கியதோ?

முத்தமிழ் ஆழம் அறிந்தவரே
முத்துக் குளிப்பதிற் சிறந்தவரே
கத்தரித் தழகுறக் கருத்துக்களைக்
கட்டுரை செய்யும் கலைமகனே!

நாடகம் உன்னிடம் கற்றேனே
நாநலத் திறமையுங் கண்டேனே
பீடுறு நடையினை நயந்தேனே
பெரியவன் நீயென உணர்ந்தேனே!

மரபின் பெருமை நான்நாட்ட
வளரும் புதுமைநீகாட்ட
விரியும் வாதம் தனைக்கேட்டு
விரையும் நேரமும் வியக்குமன்றே!

ஆன்மி கத்தைப் புறக்கணிப்பார்
அரைகுறை அறிஞர் என்றொருநாள்
நான்சொலக் கேட்டு நாவசையா
நாகரி கத்தை மறப்பேனோ?

சமயத்தில் மூட நம்பிக்கையைச்
சாடிய போதும் தத்துவத்துள்
அமையும் உண்மைகள் வழிநின்ற
ஆன்மிக வாதி நீயன்றோ?

அறிவை உரசிப் பார்க்கையிலும்
ஆதா ரத்துடன் எதிர்க்கையிலும்
பொறுமை காட்டிச் செவிமடுக்கும்
புன்னகைக் கெங்கே போவதையா?

ஒருகால் ஆசிரி யனைப்போல்வாய்
ஒருகால் தோழனைப் போல்நிற்பாய்
ஒருகால் உற்ற உறவாவாய்
ஒப்பில் நடிகன் நீயாவாய்!

நீயுன் கொள்கை சார்ந்தவரை
நிமிர்த்தி வைக்கும் நெஞ்சமுள்ளாய்
ஆயின் பிறரைத் தூற்றாத
அருமைக் குணத்தைப் போற்றுகின்றேன்.

வரட்சி மனங்கள் தமையெல்லாம்
வல்லமை கொண்டு வளப்படுத்திப்
புரட்சி விதைகள் விதைத்துரிய
புதுமை அறுவடை செய்தாயே!

முனைவர்க் கெல்லாம் முனைவன்நீ
முற்போக்காளர் முதல்வன்நீ
இனியா ரவர்க்குச் சிவத்தம்பி
இலக்கியத் தமிழே என்செய்வாய்?



கவிஞர் வி. கந்தவனம்

# ஒன்ராறியோ...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

கட்சியுடன் நெருங்கிய கொள்கை வாரியான பிணைப்பு இருப்பதைக் காணலாம். அதே மாதிரியான பிணைப்பு மற்றைய இரு கட்சிகளுக்குமிடையே இருப்பதில்லை. மாகாண தேர்தல் வந்தால் கூட மத்திய அரசின் கட்சித்தலைவர்கள் இந்தப் பக்கம் திரும்பிப் பார்ப்பதும் இல்லை. நீயாச்சு உனது தேர்தலாச்சு என தம்பாட்டிலே இருந்து விடுவார்கள். NDP அப்படி அல்ல. மாகாணத் தேர்தலிலும் தமது கட்சி வேட்பாளர்களுக்காக மத்திய அரசின் NDP தலைவர்கள் பிரசாரம் செய்வார்கள். NDP தலைவர் ஜாக் லேய்ரன் நோய் வாய்ப்பட்டு தற்காலிகமாகக் கட்சியின் தலைமை பீடத்தில் இருந்து ஒதுங்கியிருப்பது மாகாணத் தேர்தலின் போது NDPயினைப் பாதிக்கவே செய்யும் ஜாக் லேய்ரன் மக்கள் அபிமானத்தினைப் பெற்ற NDP தலைவர். அவரது இடத்தினை நிரப்ப இன்னொரு தலைவர் இல்லை என்றே கூற வேண்டும். அவர் நோய் வாய்ப்படாமல் இருந்திருந்தால் நிச்சயமாக இங்கு பிரசாரத்திற்கு வந்திருப்பார். இந்த மாகாணத்தில் கூடுதலாக NDPயினர் தெரிவாவதால் அது தேசிய அளவில் தேர்தல் இன்னும் நான்கு வருடங்களில் வரும்போது அனுகூலமாயிருக்கவே செய்யும்.




REAL TEAM
வீடு,வியாபார நிலையம் வாங்க,விற்க
வாடகைக்கு பெற அல்லது கொடுக்க
REAL TEAM
Thinking of selling? Think SOLD!
" Put our experience to work for you, and see the difference! "
Toronto
$ 144,900
Nice Condominium
2 Bedrooms
Close To Subway
Scarborough
$ 514,900
Detached
4 Bedrooms
Finished Basement
Scarborough
$ 749,900
Custom Built
4 Bedrooms
Updated
Ajax
$360,000
Detached
4 Bedrooms
4 Washrooms
Scarborough
$239,000
Beautiful Condo,
2 Bedrooms
2 Washrooms
Sasi Chelvaratnam
Sales Representative
416.725.1125
Scarborough
$ 156,000
Spacious Condo
2 Bedrooms
Corner Unit
Ajax
$264,600
Detached
3 Bedrooms
Power Of Sale
Oshawa
$389,900
Great Investment
Good Return.
Anchored Tenants
Markham
$ 1.98 Million
Custom Built Home
5 Bedrooms
Upgraded Home
Brampton
$ 329,900
Semi Detached
3 Bedrooms
3 Washrooms
Ravi Raveendran
Real Estate Broker
416.817.8479
Markham
$ 399,000
Freehold Town House
3 Bedrooms
2 Washrooms
Scarborough
$ 189,900
Condominium
2 Bedrooms
Well kept Unit
Markham
$619,900
Detached
4 Bedrooms
5 Washrooms
Brampton
$379,900
Detached
4 Bedrooms
Few years Old
North York
$ 429,900
New Luxury Condo
Walk To Subway
Close to all Amenities
Kethees Seevaratnam
Sales Representative
416.275.5788
Vaughan
$ 629,900
Detached
4 Bedrooms
Finished Basement
Scarborough
$279,900
Condo Town House
4 Bedrooms
Prime Location
Scarborough
$269,900
Condo Town House
3 Bedrooms
End Unit.
Scarborough
$ 214,900
Luxury Condominium
2 Bedrooms
1 Washroom
Markham
$494,900
4+2 Bedrooms
4 Washrooms
Finished Basement
Justin William
Real Estate Broker
416.803.7344
Scarborough
$129,900
Condominium
1 Bedroom
1 Washroom
Woodbridge7
$389,900
Condo T/House
3 Bedrooms
3 Washrooms
Scarborough
$425,000
Detached Bungalow
3+2 Bedrooms
Basement Apartment
Markham
$509,000
Detached House
4 Bedrooms
3 Washrooms
Scarborough
$218,800
Condominium
2 Bedroom
Luxury Building
Wilton Gnanapragasam
Sales Representative
416.554.4747
Scarborough
$299,900
Semi Detached
4+2 Bedrooms
4 Washrooms
Mississauga
$549,900
Detached
4 Bedrooms
3 Washrooms
Markham
$418,000
Freehold Town House
3+1 Bedrooms
4 Washrooms
Scarborough
$154,900
Family Business
Good Sales
Lotto Commission
Scarborough
$269,900
Condo Town House
3 Bedrooms
End Unit
Balan Kanesapillai
Sales Representative
416.844.5401
HOMELIFE
HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave, East, Toronto, ON. Tel: 416-321-6969 & 145 Traders Blvd. E, Mississauga,ON Tel: 905-712-2666
*Each office Independently owned and operated

# நயவுரை - அமரர் பேராசிரியர் சிவத்தம்பி



பேராசிரியர் புலமைக்கு எடுத்துக்காட்ட வேறு எவரும் இல்லையென்றே கூறலாம் அவரிடம் ஒருநாள் பாடம் கேட்காதவர்கள் கூட பயன் பெறாதவர் என்றும் சொல்லலாம். அமரருடனான எமது அனுபவத் தொடர்பிமட்டுமே எம்மால் தரமுடியும். நாடகப்பயிற்சி டிப்ளோமா காலத்தில் தொடங்கியது நேரடி அனுபவம். அதன் முன்னர் அவரை பரஸ்பரம் அறிந்திருந்தும் நேரடித்தொடர்பு இருக்கவில்லை. அறிவைத்தரும் போது கூட உள்ளே இருப்பதை வாரி வழங்கும் முகபாவம் போல் இரு கரங்களாலும் முன்னே கொட்டுவது போல அங்க அசைவுகளோடும் தருவார். எமது பெண்ணியம் பற்றிய சிந்தனை ஆண்களை ஒதுக்காத அந்தக் கொள்கை அவருக்குப் பிடித்திருந்தது.

கனடா வந்தபின் ஒரு ஆய்வுக்கட்டுரை எழுதும் ஆவலில் உள்ளடக்கம் ஒன்று எழுதி அனுப்பியிருந்தேன். அவருக்கு நல்ல மகிழ்ச்சி. அது பற்றி உரையாடி நெறியாள்கை செய்தார். எழுதுவதையெல்லாம் பெறாமக்களுக்கு அனுப்பி அவர்கள் மூலமாக அவரிடம் சேர்ப்பித்து பின் தொலைபேசியில் தொடர்புகொள்வேன். "சில விடயங்கள் அற்புதமாய் இருந்தனவென்றும் தான் முன்பு அறிந்திருக்கவில்லை என்றும் கட்டாயம் சாகித்திய மண்டலப்பரிசு கிடைக்கும் என்றும் உற்சாகம் ஊட்டுவார். அதுமாத்திரமல்ல அதற்கு ஒரு முகவுரை 33 பக்கங்களில் எழுதித்தந்தார். கொழும்பில் வெளியீடு வைத்தபோது பல அறிஞர்கள் அம்முகவுரையை வியந்து போற்றினார்கள். இந்நூலை இங்கிலீசில் மொழிமாற்றம் செய்விக்கப்போவதாகவும் செலவை தான் ஏற்றுக்கொள்ளப்போவதாகவும் சொன்னார். இன்னொருதடவை தனது முகவுரைகளைத் தொகுத்து ஒரு நூல் வெளியிட அமெரிக்காவில் முயற்சி நடக்கிறது எனவும் இதைவும் கொடுக்க விரும்புகிறேன் ஆட்சேபம் உண்டா எனவும் கேட்டிருந்தார். ஒரு தடவை கனடாவுக்கு வந்த போது நானும் பார்வதி கந்தசாமியுமாக அவரை தமிழர் கூட்டுறவு இல்லத்துக்கு அழைத்திருந்தோம். அதற்கு நாமே தலைமை தாங்கினோம். கனடாவிலும் செல்வாக்குத்தான் எனப் பகிடி விட்டார்.

என்னிலும் ஒரு வயது கூடியவராக இருந்தும் அறிவின் திறத்தால் அவரை எனது ஆசானாக மதித்து தலைவணங்கி நிற்கின்றேன்.



**வள்ளிநாயகி இராமலிங்கம்**

# குவாண்ரம் பிறந்த கதை

# நுண்ணுலகியல் 15

சென்ற தடவையில் டால்ரன், சுமாராக 2000 ஆண்டுக்கு முற்பட்ட தானடிமோக்கிரசின் அணு என்ற கருத்தினைத் தூசு தட்டிப் புதுப்பித்தார் என்பதனையும், அதனூடாக பொருட்களின் இரசாயன இயல்புகளை விளக்கலாம் எனக் கூறியதையும் பார்த்தோம். பொருட்கள் அணுக்களினாலா அல்லது அணுக்கள் இணைந்து தோன்றிய மூலக்கூறுகளினாலேயோதான் ஆனவையாக இருக்க வேண்டும் என அவர் கருதியிருந்ததையும் பார்த்தோம். குவாண்ரம் பிறந்த கதையில் முக்கிய திருப்பத்தினை ஏற்படுத்தியிருந்தது இதுதான். தொடர்ந்து கதையினூடு செல்வோம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 93

டால்ரன் அணுக்களின் அடிப்படையில் வெவ்வேறு தனிமங்களின் வெவ்வேறான இயல்புகளுக்கும் விளக்கம் கொடுத்தார். ஒவ்வொரு தனிமமும் குறிப்பிட்ட ஒரேவகையான அணுக்களின் சேர்க்கையினால் ஆனவை என்றார். அத்துடன் அணுக்கள் மூலக்கூறுகளை ஆக்கும்போது முழுஅணுக்களாகவே சேர்கின்றன எனவும் கூறிய டால்ரன், அணுக்களின் அணுத்திணிவு போன்ற வெவ்வேறான இயல்புகள் காரணமாகவே பதார்த்தங்கள் வெவ்வேறு இயல்புகளையும் காட்டுகின்றன என்றார்.

இங்கு உங்களுக்கு அணுத்திணிவு என்றால் என்னவென்றொரு கேள்வி எழலாம். அக்காலத்தில் பல தனிமங்கள் இனம் காணப்பட்டிருந்தன. அத்தனிமங்களின் அணுக்களும் கண்டுகொள்ளப்பட்டன. அவற்றில் மிகவும் சிறியதான அணு ஐதரசன் அணு. அந்த ஐதரசன் அணுவின் திணிவினை 1 அலகாக எடுத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் மற்றைய தனிமங்களின் திணிவுகளைக் கூறிக் கொண்டார்கள். எடுத்துக்காட்டாக,



ஆக, பதார்த்தங்கள், ஒன்றில் மூலக்கூறுகளினால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். அன்றேல் அணுக்களினால் ஆக்கப்பட்டிருக்கவேண்டும். மூலக்கூறுகள் கூட அணுக்களின் சேர்க்கையினால் ஆனவை என்பதனால், அணுக்களே பதார்த்தங்களின் (அதாவது சடங்களின்) மிகவும் சிறிய கூறுகள் என 19ம் நூற்றாண்டின் விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டனர். இந்த முடிவானது விஞ்ஞான உலகினை மாத்திரமல்லாது, உலகின் சகலருக்கும் மிகவும் பரபரப்புடன் போய்ச்சேர, அணு என்ற பதம் சர்வ சாதாரணமான ஒன்றாகிவிட்டது. அத்துடன் தொடர்ந்து வந்த ஆய்வுகளைக் கூடச் சரியான வழியில் நடத்துவதற்கு பெரிய அளவில் உதவிட, விஞ்ஞானம் துரித கதியில் வளரத் தொடங்கியது.

1810ம் ஆண்டில் டால்ரன் அணுக்களைப் பற்றிக் கூறியிருந்தாலும், பலர் அணுக்களே பொருட்களின் சிறிய கூறுகள் என ஏற்றுக் கொண்டாலும் அதனை 1905ம் ஆண்டில் திரவங்களில் காணப்படும் 'பிரணியனின் அசைவு' (Brownian Motion) என்பது அதிர்வுறும் அணுக்களின் மோதுகையினால் ஏற்படுகின்றது என அயன்ஸ்ரைன் தமது 5 ஆய்வுக் கட்டுரைகளில் ஒன்றில் எடுத்துக் காட்டியதும்தான் அணுக்கள் உள்ளன என்பது ஐயம் திரிபட நிருபணமாகியது. இக் கண்டுபிடிப்புக்கும் சேர்த்தே அயன்ஸ்ரை னுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. (பிரபல்யமான சார்புத் தத்துவத்திற்கு அல்ல) ஆனாலும் 1905ம் ஆண்டுக்கு முன்பதாகவே அணுக்கள் பற்றிய பல விபரங்களை விஞ்ஞானிகள் வெளிவிடத் தொடங்கினார்கள்.

சடுதியாக 20ம் நூற்றாண்டுக்குள் நுழைந்து விட்டேன் என எண்ணிவிடாதீர்கள். அணு உறுதிப்படுத்தப்பட்டதைக் கூறத்தான் இப்படியாக கொஞ்சம் முன்னே வந்தேன். 19ம் நூற்றாண்டின் விடயங்கள் பலவுண்டு. டால்ரன் அணுவைப் பற்றிக் குறிப்பிட்ட சிறிது காலத்தின் பின்னராக அவரது கருத்தை வலுப்படுத்தக் கூடியதான முடிவினை மாக்ஸ்வெலும் போற்ஸ்மானும் வாயுக்கள் பற்றிய விளக்கம் ஒன்றினைக் கொடுத்தார்கள். வாயுக்களின் இயல்புகளை டால்ரனின் அணுக் கொள்கையால் சுலபமாக விளக்கினார்கள். வாயுக்களின் கனவளவு, வெப்பநிலை, அமுக்கம் பாகுநிலை என்பவற்றிக்கு அணுக் கொள்கை சிறப்பாக விளக்கம் தருவதைக் காட்டினார்கள்.

வாயுக்கள் என்பவை ஏராளமாக அணுக்களைக் கொண்டுள்ளன. அதனால் தான் அவை தொடர்ச்சியானவை போல இருக்கின்றன. அவ்வணுக்கள் அங்கும் இங்குமாக ஓடித் திரிகையில் அவற்றிக்கிடையேயான மோதுகைகளின் போது, நியூட்டனின் இயக்கவிதிகளுக்கு இணங்க இவ்வணுக்கள் நடப்பதால் வாயுக்களின் இயல்புகளை காணக் கூடியதாக உள்ளது என்றார்கள். இவ்விதமாக டால்ரனின் அணுக் கொள்கைக்கு வலுப்படுத்தும் வண்ணமாக விளக்கத்தினை மாக்ஸ்வெலும் போற்ஸ்மானும் கொடுத்தார்கள். இங்கு இன்னொரு விளக்கத்தினையும் விஞ்ஞானிகள் கண்டு கொண்டார்கள். வெப்ப இயக்கவியலும் நியூட்டனின் பொறிமுறையால் தெளிவுபடுத்தப்படக் கூடியதாக இருப்பதே அது. ஆக, செம்மைப் பௌதிகமானது வளர்ந்து கொண்டு வருகின்ற விஞ்ஞான விளக்கங்களுக்கும் விளக்கம் கொடுக்கும் வல்லமையைப் பெற்றிருந்தது.

ஆக, 19ம் நூற்றாண்டில் இரண்டு பெரிய திருப்பங்கள் ஏற்பட்டிருந்தன. ஒன்று 2300 ஆண்டுகளாக இருந்து வந்த, பொருட்கள் தொடர்ச்சியான தன்மை கொண்ட நான்கு மூலகங்களினால் ஆனவை என்பது மாற்றப்பட்டு. பிரிக்கப்பட முடியாத தனிக் கூறுகள் போன்ற அணுக்களினால் ஆனவை. மற்றயது மறுதலையாக, ஒளியானது தனித்தனிக் கூறுகள் போன்ற துணிக்கைகளினால் ஆனது என்ற, 200 வருடங்களாக இருந்த நியூட்டனின் கருத்து மாறி, ஒளியானது தொடர்ச்சித் தன்மை கொண்ட அலை வடிவிலானது என்பதாகும்.

இவ்விரண்டு முரண்பாடுகளும் குவாண்ரம் பிறந்த கதையில் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பவை. அதுவா? இல்லை இதுவா? தனித்தனித் துணிக்கை கூறுகளா? அல்லது தொடர்ச்சியானவையா? என்ற கேள்விகளுக்கான தேடலின் பாதையில் வெளிப்பட்டதுதான் குவாண்ரம். தேடல்களின் தொடர்ச்சியை இன்னமும் தொடர்வோம். குவாண்ரம் பிறந்த கதையில் அணு பற்றிய அறிவியல் வளர்ச்சியானது முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. அவற்றினைப் பின்னர் பார்ப்போம். அதற்கு முன்னதாக தேவை கருதி, அலைகளைப் பற்றிப் போதுமான அளவிற்குத் தெரிந்து கொள்வோம்.



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

# கற்பனையின் சக்தி

எனது வாழ்வு நான் விரும்பும் வியக்கத்தகு சிறப்பான விடயங்கள் அனைத்தும் நிறைந்ததாக பரிணமிக்க வேண்டுமெனக் கற்பனை செய்யும் உன்னத கற்பனாசக்தி எனக்கு இருக்கிறபடியால் நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் பிரச்சனையே இல்லாது வாழ்கிறேன்.

நீ விரும்பி, யாசித்துத் தேடிய மாதிரியே சகல விதத்திலும் உன் வாழ்வு அமைந்துவிட்டது என ஒரு நிமிடத்திற்கு உருவகப்படுத்தி கற்பனை செய்தால் என்ன நடக்கும் தெரியுமா? உனது உண்மையான சாராம்சம், தலைமுடி, கால் கைவிரல்கள், உன் ஒவ்வொரு அங்கபூர்வமாக நீ விரும்பிய யாவும் உடனடியாக உனக்கு இப்போது கிடைத்தால்? உனது மூளை, மத்தியநரம்பு மண்டலத்துக்கூடாக நீ கற்பனையில் உருவகித்த இன்ப வாழ்வினை உடனடியாக அனுபவித்தால்? உனது கைகள், கால்களை இந்த வாழ்வில் உனக்கு வேண்டுமென்று நீ பொறுக்கியெடுக்கும் சகல நன்மைகளையும் பற்றி சிந்திக்க



அனுமதி அளித்து விடு. இந்தச் சிந்தனை உனது முதுகெலும்புக்கூடாக மேலெழுந்து உனது கழுத்து தோள்களுக்குப் பரவவிடு. இப்போ இன்பமும் அமைதியும் நிறைந்த வாழ்வைப் பற்றிய சிந்தனையை வயிற்றுக்குள் விழ விடு. பின்பு அதை உனது இதயத்திற்குள் நுழையவிடு. ஒரு நிமிடத்திற்கு இவ்வாறு உனது வாழ்வை மனதில் உருவகப்படுத்துவாயானால் என்ன நடக்கும் என்று நினைக்கிறாய்? எல்லையில்லாத சுபீட்சமும் நலமும் நிறைந்ததோர் அனுபவமாக உனது வாழ்வு நிச்சயம் மலரும்.

அமைதியான வாழ்வு, நலமும் வளமும் நிறைந்த ஜீவியம் எனது உடலைப் போஷிப்பதாக இப்போ நான் உணர்ந்து சிந்தனை செய்கிறேன். என் உடலுக்குள்ளிருக்கும் சகல அங்கங்கள், தொகுதிகள் யாவும் உஷ்ணமடைந்து அச்சக்தி உயர எழும்பி அதிதீவிர உந்துசக்தியாக என் உடலை நிரப்ப நான் தலையைப் பின்னால் சாய்த்து உரக்கக் கத்துகிறேன். ஆம்! ஆம்! முதலில் சிந்தனை செய்! உன்னால் இவ்வாறு கற்பனை செய்யமுடியுமா?

**வாழ்வில் உனக்கு நடக்கக்கூடிய நன்மைகளைப்பற்றிய உனது எண்ணங்களை இன்றுவரை நீ குறைத்தே ஒழுங்குபடுத்தி மாற்றி யமைத்துக் கொண்டிருந்திருக்க லாம். ஒரேயொரு நற்சிந்தனையில் ஈடுபட நீயே இப்போ உனக்கு அனுமதி கொடு. முற்றுமுழுதாய் இச்சிந்தனையில் ஈடுபடுவதற்கு உன் சுயத்திற்கு அனுமதி கொடு. இப்போ என்ன நடக்கப்போகிறது என்பதைச் சற்று பொறுத்திருந்து பார்!**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 193

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# Climates படத்தினூடாக...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

கடற்கரையில் பொழுதைப் போக்கி கொண்டிருந்த பொழுது 'நாங்கள் பிரிந்து போவது நல்லது' என்கின்றார். இவர்கள் திரும்பி வரும் பொழுது Bhar, Isa வை மோட்டார் சைக்கிளில் வரும் திடீரென Isa வின் கண்களைப் பொத்தும் பொழுது மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளா கின்றது. Bhar பிரிந்து சென்ற பின் Isa தனது முன்னாள் காதலியை தேடிச் செல்கின்றான். முன்னாள் காதலி இவனது நண்பனின் மனைவி. நண்பன் இல்லாத நேரம் பார்த்து காதலியின் வீட்டிற்கு சென்று அவளுடன் வன்புணர்வு செய்கின்றான். இது பின்னர் தொடர்கின்றது. முன்னாள் காதலி மூலம் Bharன் இருப்பிடமறிந்து அங்கு செல்கின்றான். Bhar முதலில் ஏற்க மறுக்கின்றாள். பின்னர் இவனைத் தேடிச் செல்கின்றாள். Isa, Bharஐ வசியப் படுத்த பல பொய்களைக் கூறுகின்றான்.

Isa, Bhar பிரிவதற்கான காரணங்கள் படத்தில் கூறப்படவில்லை. இன்றைய புத்திஜீவிகள் உலகத்தில் பல குடும்பங்கள் பிரிவதற்கு தெளிவான காரணங்கள் எதுவுமில்லை. தங்களுக்குள் ஒத்துப் போதலும், ஒதுங்கிப் போவதும் அவர்களது சுதந்திரம். இதற்கு காரணங்கள் தேவையில்லை. தங்களது வாழ்வு பற்றி கலந்துரையாடுவதுமில்லை. தங்களது தனிமை, கோபம், ஒவ்வாமை போன்றனவற்றைப் பற்றி வெளிப்படுத்துவது மில்லை. இது தான் இன்றைய யதார்த்தம். Isa, Bhar இருவரும் ஹோட்டலில் மீண்டும் சந்தித்து, மறுநாள் இவர்கள் பிரிந்து போகும் வரையிலான நேரத்தில் உரையாடல்கள் எதுவுமேயில்லை. Bhar ஏன் சந்திக்க வந்தார், Isa ஏன் பிரிந்து போகின்றார் என்பதை பார்வையாளர்கள் இலகுவாக உணரக் கூடியதாகவுள்ளது.

இப்படத்திலும் ஆணே பிரிதலை பிரேரிக்கின்றான். முஸ்லீம் உலகில் பிரி-வதற்கான முதலுரிமை ஆண்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. Bhar பிரிவதை ஏற்றுக் கொள்ளவில்லை. அது அவளது நடவடிக்கைகளில் வெளிப்படுகின்றது. Bharன் சுதந்திர உலகில் மீண்டும் Isa



தலையிடுகின்றான். பொய்யான சத்தியங்கள், வாக்குறுதிகள். இருவரும் இணையும் போது மீண்டும் Isa பிரிந்து செல்கின்றான். இயக்குனர் இது ஆண்களின் உலகம் ஆண்கள் தான் ஏமாற்றுப் பேர்வழிகள் என விமர்சிக்கின்றார். 'ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழத் தீர்மானிக்கும் போது சேர்ந்து வாழலாம். பிரிய நினைக்கும் பொழுது பிரியலாம். இது பெண்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துகின்றது. ஆனால் சமூக அமைப்பு பெண்களை ஏமாற்றி விடுகின்றது. அதன் வெளிப்பாட்டை இயக்குனர் இப்படத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். Bharன் சுதந்திர உலகம் அபகரிக்கப்பட்டு மீண்டும் ஒரு மன உழைச்சலுக்கு அவர் உட்படுகின்றார். சுதந்திரமாக இயங்கியவளை தனது பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்திவிட்டு தூக்கி எறிவது போல் தூக்கி எறிந்து விட்டுச் செல்கின்றார் Isa. இதனை அரசும் சமூகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

Isaவின் சுதந்திர உலகம் திறந்துள்ளது. அவரால் என்னவும் செய்ய முடிகின்றது. Bharன் பாத்திரம் ஏனைய முஸ்லீம் நாடுகளை விட துருக்கியில் பெண் வேலை செய்யவும் சுதந்திரமாக வாழ்வதற்கும் உடையணிவதற்கும் வழிவகுத்துள்ளதை பதிவு செய்கின்றது. Isaவின் முன்னாள் காதலியின் பாத்திரமும் பெண்களின் சுதந்திரத்தை வெளிப்படுத்துகின்றது. அதற்கு மேல் பெண்ணின் நடவடிக்கைகளை வாழ்வியலை ஆணின் சமூகமே தீர்மானிக்கின்றது. முஸ்லீம் கலாச் சாரக் கூறுகளை இன்றைய துருக்கி யர் உடைத்துள்ள னர் என்பதை அண்மைக் கால துருக்கிய படங்கள் பதிவு செய்துள் ளன.

90 நிமிடங்கள் கொண்ட இப்படத்தில் பல காட்சிகள் நல்ல தொரு கவிதை போல் உள்ளது. இத்தாலிய நவ யதார்த்தவாதிக-ளின் உத்திகளை இப்படம் கையாண்டாலும் இது ஒரு பின் நவீனத்துவப் படம். காதல், வாழ்வு, சமூகம் ஆகிய கூறுகளை உடைக்கின்றது. அப்படி எதுவும் இருக்க முடியாது என நிறுவுகின்றார் இயக்குனர். இப்படத்தில் Bhar-Isa ஆக இயக்குனரின் மனைவியும் இயக்குனரும் நடித்துள்ளனர். மிகக் குறைந்த வசனங்களுடன் அற்புதமான திரைப்பட மொழியைக் கொண்டுள்ளது இப்படம்.

பிறிதொரு கட்டுரையில் மேலும் இப்படத்தைப் பற்றியும் இயக்குனர் பற்றியும் விரிவாக பார்ப்போம். இப்படத்தை அல்லது இவரது படங்களை வோன், ரொரண்ரோ நூலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிற்குறிப்பு ஒன்று: Ceyalan எந்த ஒரு இயக்குனரிடமும் உதவியாளராக கூட கடமையாற்றவில்லை. தானே அனைத்தையும் தெரிந்து கொண்டார். புதிதாக திரைப்படம் இயக்குபவர்களுக்கு இவர் கூறும் விடயங்கள் முக்கியமானவை. Ceylan, Guardian பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் I never worked on other films, as assistant director or anything, so I never learned how other directors worked. I learned everything from books myself, and I learned every aspect of film-making, including sales and marketing. Even in Cannes, I was selling the film myself, and they said that there was only one other director who sold his films himself – [Abderrehmane] Sissako from Africa. It's unusual, and distributors were a bit surprised. I learned how to do it but I don't do that any more. Now I have a producer and a cinematographer, everything. It is unnecessary, but at that time, I wanted to know it. I think a director should know many things, especially the technical aspects; otherwise you are a slave of the technical people. If yor know the technical aspects, you can communicate with them and direct them much better.

பிற்குறிப்பு இரண்டு: கணவன் மனைவிகள் திரைப்படத்திலும் கணவன் மனைவியாக இணைந்து பல படங்களில் நடித்துள்ளனர். தமிழில் சாவித்திரி- ஜெமினி, ஹிந்தியில் ஐஸ்வர்யா-அபிசேக் போன்று ஹொலிவூட்டிலும் பலர் நடித்துள்ளனர். அவர்களில் சிலர்

# Climates படத்தினூடாக Nuri Bilge Ceylan இன் படைப்பிலகை மீள் ஆய்வு செய்தல்



**வானரன்**

துருக்கிய சினிமா இன்று உலகில் மிக முக்கிய படங்களை வெளிக்கொணர்கின்றது. முஸ்லீம் மக்கள் அதிகம் வாழும் நாடாக துருக்கி இருந்த போதும், தன்னை மத்திய கிழக்கு முஸ்லீம் நாடுகளுடன் அடையாளம் காட்டுவதில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் துருக்கி, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் அதிகளவு தேசிய உற்பத்தியைக் கொண்ட நாடு. பெண்கள் மீதான ஒடுக்கு முறையின் உச்சக் கட்டத்தில் உள்ள முஸ்லீம் நாடுகள் போல் துருக்கியில்லை. பெண்கள் ஓரளவிற்கு சுதந்திரமாக உள்ளார்கள். முஸ்லீம் உலகே சல்மான் ருஸ்டியை எதிர்க்க ஒரு சில துருக்கிய படைப்பாளிகள் ருஸ்டியை ஆதரித்துள்ளார்கள். துருக்கியின் மற்றைய முகம் கொடுமையானது. ஆமேனியரை படு கொலை செய்தது. Kurds உரிமைகளை மறுதலிப்பதுடன் அவர்களை மிக மோசமாக நடத்துவது போன்றவை சரித்திர பதிவுகள். ஒரு நாடு, ஒரு தேசம் என்ற கொள்கையுடனான அரசியல் கோசம் சிறுபான்மையினரின் உரிமைக் குரலை முற்றாக அழித்துள்ளது.

1990களில் ஆரம்பிக்கப்பட்ட புதிய திரைப்பட யுகம் துருக்கியரின் அடையாளத் தேடல்களை கலாச்சார, தொழில்நுட்ப மாற்றங்களினூடாக முன்வைக்கின்றது. இவ்வாறான தேடல்களை முன்வைக்கும் இயக்குனர்களுள் முக்கியமானவர் Nuri Bilge Ceylan. 1959 தை 26ல் பிறந்த இவர் முதலில் பொறியியலாளராகவே பட்டப் படிப்பை முடித்தார். படிக்கும் காலங்களில் கடவுச் சீட்டளவு படங்களை எடுத்து பணம் சம்பாதித்தார். படித்து முடித்த பின்னர்



லண்டன், காத்மண்ட் போன்ற நாடுகளில் சில காலங்களை செலவிட்டார். பின்னர் இராணுவத்திலும் கடமையாற்றினார். தனது 30வது வயதில் திரைப்படக் கல்லூரியில் (Mimar Sinan University) கல்வி கற்றார். இவரது முதலாவது திரைப்படம் ஒரு குறுந்திரைப்படமாகும். 20 நிமிடங்களைக் கொண்ட இப்படம் கறுப்பு வெள்ளைப் படம். (Koza/Cocoon) இது கான்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. வயது முதிர்ந்த தம்பதிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் பிரிந்து வாழ்கின்றனர். இவர்கள் மீண்டும் சந்தித்த பொழுது இவர்கள் எதிர்பார்த்த மாதிரி இச்சந்திப்பு இடம்பெறவில்லை. இயக்குனரின் பெற்றோரே இதில் தம்பதிகளாக நடித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து முதலாவது முழு நீளத்திரைப்படம் Kasaba/The small town (1997)ஐ யும் கறுப்பு வெள்ளை படமாகவே எடுத்தார். பணப் பற்றாக் குறை காரணமாக ஊமைப் படம் போன்று வாயசைத்து படத்தை முதலில் எடுத்தனர். பின்னர் டப்பண்ணினர். இப்படம் ஒரு குடும்பத்தைப் பற்றியது. நான்கு பகுதிகளாக நான்கு காலநிலைப் பருவங்கள் போல் காட்டப்பட்டுள்ளது. இது இரு சிறுவர்களைப் பற்றியது. இயக்குனரின் சகோதரி Emine Ceylan எழுதிய Corn Fields என்ற சிறுகதையை மையமாகக் கொண்டது. இது இவர்களது வாழ்வை மையமாகக் கொண்டது. இவர் பின்னாட்களில் மேற்கு நாடுகளில் வாழ்ந்ததையும் இப்படத்தில் பதிவு செய்துள்ளார். காத்மண்ட்டில் ஒரு புத்தர் கோயிலில் இருந்த பொழுது தனது கிராமத்து நினைவு இவருக்கு வந்தது. லண்டனைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார் 'The west would not show its true face to us'. அதேசமயம் தனது கிராமத்தை பற்றி மிகவும் நேசத்துடன் பதிவு செய்கின்றார். ஒரே மரம், ஒரே மேகம், வானம் என்கின்றார். மாற்றங்களற்றது கிராமம். நாள்தோறும் மாறுவது நகரம் என்ற கருத்திற்கு படத்தில் வலு சேர்த்துள்ளார். இப் படம் இவரது சொந்தக் கிராமத்திலேயே படமாக்கப்பட்டது. இவரது உறவினர்களே இதில் நடித்துள்ளனர். இப்படம் பல விமர்சகர்களால் பாராட்டுப் பெற்றது. இப்படத்தில் வரும் பாத்திரங்கள் இத்தாலிய நவ யதார்த்தவாத வகையைக் கொண்டுள்ளன. செக்கோவின் பாதிப்பை இப்படத்தில் காணலாம். Antonioni இன் பாதிப்பையும் இப்படத்தில் காணலாம்.

இவரது அடுத்த படம் Clouds of May. ஒரு திரைப்படமெடுப்பதற்கு கிராமத்துக்கு வருகின்றார் Muzaffer. இவர் ஒரு திரைப் படத்தயாரிப்பாளர். இவரது உறவினர் பட்டப்படிப்பை முடிக்கமுடியாமல் திண்டாடு கின்றார். இவரை இப்படத்தில் நடிப்பதற்காக பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றார். நகரத்தில் வேலை கிடைக்க வழி செய்வார் என உறவினரும் நம்புகின்றார். இவரது தந்தை தனது நிலத்தை காப்பாற்ற திண்டாடுகின்றார். சிறுவன் அலி இசைக் கனவுகளுடன் வாழ்கின்றார். மீண்டும் இயக்குனர் கிராமத்தின் இயல்புத் தன்மையையும், நகர வாசிகளால் அது அசுத்தப்படுவதையும் சுட்டிக் காட்டுகின்றார். இப்படம் சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை விமர்சிக்கின்றது. வர்த்தகப் போட்டிகள் மக்களை சூழ்ச்சியுடையவர் களாக மாற்றுகின்றது என்கின்றார். சிறுவன் அலியின் பாத்திரம் அவ்வாறனதே. இசை நிகழ்ச்சி ஒன்றைப் பார்ப்பதற்கு ஒரு முட்டையை உடைக்காமல் சட்டைப் பைக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற சவால் முன் வைக்கப்படுகின்றது. Muzaffer முட்டையை அவித்து வைத்திருந்தால் உடையாது என கூறுகின்றார். சிறுவன் அலி அது மோசடி எனக் கூறுகின்றான். ஆனால் முட்டை உடைந்தவுடன் வேறு முட்டையை சட்டைப் பைக்குள் வைக்கின்றான். இவ்வுலகில் வாழ்வதற்கு ஏமாற்றவும் தெரிந்திருக்க வேண்டும் என்கின்றார் இயக்குனர்.

Abbas Kiarostami ன் Where is the friends home ல் வரும் அகமட் பாத்திரத்தை நினைவூட்டுகின்றது. அமெரிக்க விமர்சகர் A.O.Scott இவரது படங்களில் Abbas Kiarostami ன் பாதிப்பு அதிகம் உள்ளது என்கின்றார். The wind will carry us என்ற படத்தின் பாதிப்பை இவரது முதல் இரு படங்களிலும் காணலாம். பிரெஞ்ச் பத்திரிகைகள் இவரது படங்களின் திரைக்கதையில் செக்கோவின் பாதிப்பு அதிகம் என பாராட்டியுள்ளன. இப்படத்திலும் இவரது தாய் தந்தை நடித்துள்ளனர். Ceylan, Guardian பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். GA: And there are elements of Chekhov in there, as well? NBC: Yes, actually in all my films I believe there is an element of Chekhov, because Chekhov wrote so many stories. He had stories about almost every situation, and I love them very much. So maybe he's influenced the way I look at life. Life follows Chekhov for me, in a way. After reading Chekhov, you begin to see the same kind of situations in life. And in the scriptwriting stage, I remember the stories somehow, so yes, Chekhov is here.

இவரது மற்றைய மூன்று படங்களில் Three Monkeys ஏற்கெனவே இப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது. Distant வரும் இதழ்களில் விரிவாக இடம் பெறும். Climates என்ற படம் பற்றி சற்று விரிவாக பார்ப்போம். ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் Isa தனது கலாநிதிப் படிப்பிற்கான ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டும். இவரது பெண் சிநேகிதி Bhar ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தில் கலை இயக்குனர். Bhar, Isa இன் மனைவி போன்று தான் வாழ்ந்து வருகின்றார். திடீரென ஒரு நாள் இவர்கள்

தொடர்ச்சி 36ஆம் பக்கம்


**Sitham Sam Shanmugam** (Sales Rep.)

**HomeLife/GTA Realty Inc.**

Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.

•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $299,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.

8 beds senior or retired home. Monthly income $16,000.

Metal scrap yard for recycling and car sales with house office.

detached brand new home Ontario in London. Near university of Weston.

For students 2 + 1 **Condo.** in Toronto. Near University of York. $130,000

# குருச்சோவ் பால் கறந்தார்




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம்பெறப் பிரார்த்திக்கிறேன். நரேந்திரனின் நண்பர்கள் அவருக்குக் குருச்சோவைக் காட்டவேண்டும் என்று எண்ணினார்கள். உன்னை குருச்சோவ் இருக்கும் இடத்திற்கு கூட்டிக்கொண்டு போகிறோம் என்றான் ஒரு நண்பன். அதற்கு முதல் நீ நான்கு வகுப்புகளில் சேர்ந்து படித்துத் தேறவேண்டும் என்றான். இன்னொருவன் மாக்சின் தாஸ்கப்பிட்டலை (பொருள் முதல்வாதம்) நான்கு நாட்களுக்குள் நரேன் விளங்கிக் கொள்வானா? என்று கேட்டான் வேறு ஒருவன். நரேந்திரனுக்குச் சிதம்பர சக்கரத்தைப் பேய்பார்த்த பேதலிப்பு. குருச்சோவைப் பார்ப்பதற்கு படிக்க வேண்டுமா? இது வேடிக்கையாய் இருக்கிறது. நீங்கள் சொல்லும் கால்மாக்சை நான் இலங்கையிலே படித்திருக்கிறேன்.

விக்கிரமசிங்க பீற்றர்கெனமன், கொல்வினாடி சில்வா, என்.எம் பெரேரா, மு. கார்த்திகேசன். வ. பொன்னம்பலம். க. வைத்திலிங்கம் முதலியவர்களின் சொற்பொழிவுகளில் கொம்யூனிஸ் விளக்கம் பெற்றவன் நான். எனக்கு நீங்கள் எதிர் பார்க்கும் தத்துவத் தேர்ச்சி உண்டு. நண்பர்களே! தோழர்களே! குருச்சோவைக் காட்டுங்கள் என்றார் நரேந்திரன்.

உங்கள் கண்டத்தில் கடவுள் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தாராம். தொழிலாளியாய் போய் ஆற்றங்கரையில் மண் அள்ளிப் போட்டாராம். தொழிலைச் சரியாகச் செய்யவில்லையென்று அரசனின் பிரம்பால் அடிவாங்கினாராம். இன்னொருவர் உங்கள் கடவுளின் கண்களால் இரத்தம் கசிகிறதென்று தனது கண்ணைத் தோண்டி கடவுளின் கண்ணோடு பொருத்தினாராம். கடவுளுக்கு மற்றக் கண்ணிலும் இரத்தம் கசிந்ததாம். பரமபக்தர் தனது அடுத்த கண்ணையும் தோண்டி எடுக்க முனைந்தாராம். கடவுள் அவர் கையைப் பிடித்து அக்காரியத்தைத் தடுத்தாராம். கண்ணைப் பிடுங்கிக் கடவுளுக்குக் கொடுத்தவருக்கு கண் அப்பன் என்று பெயராம் என்று ஒரு மாணவன் கண்ணப்பர் கதையைச் சரியாகச் சொல்லி முடித்தான்.

நன்றி! இந்த இடத்தில் உனக்கொருசந்தேகம் வரும் என்று எனக்குத் தெரியும். கண்ணப்பன் வரலாறு ருஷ்சியக் கண்டத்து மாணவனுக்கு எப்படித்தெரியும் என்று யோசிப்பாய். கொம்யூனிஸ்ட் என்பவன் உலகத்தில் உள்ள எல்லா விடயங்களையும் படித்திருக்க வேண்டும். அப்பொழுது தான் இயக்க இயல் பொருள் முதல்வாதத்தை புரிந்து கொள்ள முடியும் என்பது கார்ல் மாக்சின் கட்டளை. நிற்க! கண்ணால் இரத்தமோடும் கடவுளுக்கு ஒரு மனிதன் தனது கண்ணைப் பிடுங்கி ஒட்டுப்போட்டான் என்றால் அது எவ்வளவு தியாகம். நரேன் இந்தச் செய்தி எங்களைத் திகைக்க வைத்தது. நாங்கள் கடவுள் நம்பிக்கை அற்றவர்கள். எங்களையே கலங்கவைத்தது கண்ணப்பன் கதை என்று ஒரு மாணவன் சொன்னான்.

எனக்கு இப்பவிளங்குது குருச்சோவின் கண்களைப்பிடுங்கி விட்டார்கள். அவர் இப்பொழுது கண்ணற்றவராய் வாழ்கிறார். ருஷ்சியாவின் கொடுமை ஏற்கெனவே தெரிந்தது தான்' என்று நரேந்திரன் கவலையோடு சொன்னார். 'நரேன்! வீணாக அலட்டிக்கொள்வதும், வீணாக நேரத்தை விரையம் செய்வதும், எதற்கும் சந்தேகப்படுவதும், எதையும் ஆராய்ந்து பார்க்காமல் முடிவு எடுப்பதும் ஆசியாக் கண்டத்தாரின் இயல்பு என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அது உண்மை என்பது உம்முடைய பேச்சில் தெரிகிறது, என்றான் ஒருவன். நாங்கள் கேள்விப்பட்டது முழுதும் சரியல்ல. நான் இன்று உங்களிடம் கேள்விப்பட்டதும் முழுதும் உண்மையில்லை என்று தத்துவ வீச்சொன்றை வீசினான் நரேன்.

மச்சான் வா! எதையும் கண்ணால் கண்டு தெளியவேண்டும். உனக்கு குருச்சோவைக் காட்டுகிறோம் என்றான் ஒரு மாணவன். 'கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய் தீர விசாரித்து அறிதலே மெய்' என்று எங்கள் ஊரிலே சொல்லுவார்கள் என்றபடி நடந்தான் நரேன். உண்மை. 'of course' நீ குருச்சோவை உன் கண்ணாலேயே பார். உன் காதாலேயே அவர் சொல்லுவதைக் கேள். அவரிடமே தீரவிசாரி. உனக்கு எல்லாம் தெளிவாகும் என்று கூறிக்கொண்டு ஒரு காரை வாடகைக்குப் பிடித்தார்கள். குருச்சோவ் இருக்கும் இடத்துக்குப் போனார்கள். ஒருமணிநேர ஓட்டத்தில் பெரியதொரு தொழிற்சாலையை வாகனம் சென்றடைந்தது.

அந்தத் தொழிற்சாலை ஒருமைல் நீளமுடையது. பலவிதமான வேலைகள் நடந்து கொண்டிருந்தன. தொழிலாளர்கள் அனைவரும் அக்கறையோடும் அர்ப்பணிப் போடும் உற்சாகத்தோடும் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் மகிழ்ச்சிக்களை. அவர்களைப்பார்த்தால் மனதில் இரக்கமோ, கவலையோ வராது. பெருமையும் பீடும் மனதை நிமிர்த்தும். ஒரு தியான மண்டபத்துக்குள் நிற்பது போன்ற நினைப்பு வரும். உலகத்தை மறந்து ஒருமையாகும் உணர்வு தோன்றும். ஆலைகளை ஆலயமாக்க லாம் என்பதற்கு அத்தொழிற்கூடம் உதாரணமாய் விளங்கியது. நண்பா! இது அந்தக்காலத்து ருஷ்சியாவைப் பற்றிய படப்பிடிப்பு என்பதை மறந்து விடாதே.

வாகனம் மெல்ல... மெல்ல... நகர்ந்தது. எல்லாத்தொழில் கூடங்களையும் நரேனுக்குக் காட்டி விளங்க வைத்தனர் மாணவர்கள். மெல்ல நகர்ந்த வாகனம் ஒரு கட்டிடத்துக்கருகில் நின்றது. மாணவர்கள் நரேந்திரனோடு இறங்கி நடந்தார்கள். அந்தக்கட்டித்துக்குள்ளே நிறையப் பசுமாடுகள் நின்றன. அவற்றிற்குச் சாப்பாடு போடுவதும், குளிப்பாட்டுவதுமாகத் தொழிலாளர்கள் தமது கடமையில் கண்ணாயிருந்தார்கள். ஒரு பசு மாட்டுக் கூடத்துக்குள் போனதும் மாணவர்கள் நின்றார்கள். அப்பொழுது ஒருவர் பசுமாடுகளின் பால்முலைக் காம்புகளில் பால் கறப்பதற்கான மின்சார வயரை பொருத்திக் கொண்டிருந்தார். நரேந்திரன் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தார். பசு முலையில் வயர் பொருத்தியவர் தனது வேலை முடிந்ததும் திரும்பி நிமிர்ந்தார்.

நரேன்! 'அவன் குருச்சோவ்' என்றான் ஒரு மாணவன். ஆ! என்று அங்கலாயத்தார் நரேன். பார்த்தீரா ஆசியாக் கண்டம் வாய்பிளக்கிறது. இதனால் தான் நாங்கள் முன்பு சொன்னோம் 'நான்கு நாட்கள் பாடம் படிக்க வேண்டும் என்று' சொல்லிச் சிரித்த மாணவன் குருச்சோவுக்கு நரேனை அறிமுகப்படுத்தினான். நரேன் குருச்சோவைப் பார்க்க விரும்பியதையும், அவருடைய சந்தேகங்களையும் ஆசியாக் கண்டத்தின் மனோபாவங்களையும் அவர்கள் சொல்லிச் சிரித்திருக்க வேண்டும்.

குருச்சோவ் நரேனைத் தோழரே! என்று கூறிக்கட்டி அணைத்தார். குருச்சோவின் ஆனந்த எழுச்சிக்குள் நரேனின் அதிர்ச்சி சிறிது நேரம் திணறியது. குருச்சோவ் தனது இருப்பிடத்துக்கு அனைவரையும் அழைத்துச் சென்றார். குருச்சோவின் அறையுள் மார்க்ஸ், ஏஞ்சல்ஸ், லெனின், மாஸ்கிம் கார்க்கி முதலியோரின் படங்களும், சில புத்தகங்களும் காணப்பட்டன. ஒருவட்ட மேசையை சுற்றி எல்லோரும் இருந்தனர். குருச்சோவ் வேறு ஒரு அறைக்குள் சென்று தனது உடுப்புகளை மாற்றி முகங்கழுவிக் கொண்டு முகமலர்ச்சியோடு வந்தார். சிறிது நேரத்தில் எல்லோருக்கும் 'பிளேன் ரீ' வந்தது. சூடான ரீயைப் பருகிக் கொண்டு நரேனைப்பார்த்த குருச்சோவ் உரையாடத் தொடங்கினார். உரையாடல் சில ஆங்கிலச் சொற்கள் கலந்த ருஷ்ய மொழியாகவேயிருந்தது. மாணவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நரேந்திரனுக்கு உதவினார்கள்.

நாங்கள் இந்த தேசத்தின் மைந்தர்கள். இந்த தேசத்தைக்கட்டி நிமிர்த்துவதற்கும், இந்ததேசத்து மக்களைத் திருப்தியாக வாழவைப்பதற்கும் உறுதிபூண்டு பாடுபடுவர்கள். கார்ல்மாக்சின் தத்துவமே எங்கள் தேசிய தத்துவம். இத்தத்துவ தரிசனத்தில் எங்கள் பார்வை கருத்து முரண்கொள்வதுண்டு. இதற்காக நாங்கள் சிலவேளைகளில் சினப்பதும் உண்டு. ஆனால் தேசத்தை நினைத்து, மக்களை நினைத்து கோபத்தை அடக்கிக் கொள்வோம். எங்கள் கோபங்கள் பதவிக்கானது அல்ல. பாட்டாளி மக்களின், உழைக்கும் மக்களின் வாழ்வுக்கானது. மக்களுக்காகவே பதவி. மக்களுக்காகவே பணிகள் என்பதில் நாங்கள் தெளிவாகவே இருக்கிறோம். இதனால் பதவி பற்றி நாங்கள் அதிகம் சிரத்தை கொள்ள மாட்டோம். மக்களுக்கான பணிகள் தடங்கல் இல்லாமல் தொடரவேண்டும் என்பதுவே எங்கள் இலட்சியம். நேற்று தலைவராக இருந்தவர் இன்று தொண்டராகலாம். இன்றைய தொண்டர் நாளை தலைவராகலாம். இது பணிமாற்றமே தவிர்ப்பதவி மாற்றமில்லை. இதனாலேதான் ருஷ்யா வளரும், வாழவைக்கும் என்ற சிந்தனையில் நாங்கள் அனைவரும் அக்கறையோடு இயங்குகிறோம் என்று குருச்சோவ் சொல்லி முடித்தார். நரேனுக்கு மாக்சிசய தத்துவம் வெளிச்சமானது. இது 1955ஆம் ஆண்டு நிகழ்ந்த நிகழ்வு. இப்போதுள்ள நிலைமை மாற்றங்களும் செயல் மாற்றங்களும் அன்றைய ருஷியாவில் அரும்புகட்டாத ஆரோக்கியமான அரசு நடந்தகாலம்.

நண்பா! நமது சைவசித்தாந்தமும் 'தொண்டலாது உயிர்க்கு ஊதியம் இல்லை' என்கிறது. மார்க்சிய தத்துவத்துக்கும், சைவ சித்தாந்தத்திற்கும் வேறுபாடு அதிகம் இல்லை. மார்க்ஸ் கடவுள் இல்லை என்கிறார். நாம் கடவுள் இருக்கிறார் என்கிறோம். இந்த ஒரே ஒரு வித்தியாசம் தான் நமது சைவசித்தாந்தம் மார்க்சுக்கு முற்பட்ட சித்தாந்தமாகும். நமது இறைவன் கைலாசத்து உச்சியிலும் இருப்பான். மண்ணிலே காளத்தியிலும் இருப்பான். நமது கண்களிலேயும் இருப்பான். அவனுடைய அடியார்கள், விரதகாரர்கள், யாத்திரிகர்கள் என்று சொல்லப்படுபவர்கள், தமது பதவிகளையும் தொண்டு பணிகளையும் சமமாய் நினைத்தால் நமக்குள் பிணக்குகள் வராது. பிரிவினைகள் தோன்றாது. எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியாத ஆன்மீகம் ஆளுமை கொள்ளுமல்லவா?

**கடையவனுக்கும் கடைத்தேற்றம் கிடைக்குமல்லவா? சிந்திப்போமாக!**



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)



**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# 'எனக்கு ஒரு கனவு உள்ளது'

## உங்கள் பணமும் நிதிச்சந்தையும்

'எனக்கு ஒரு கனவு உள்ளது' என்றார் மார்டின் லூதர் கிங் ஜுனியர். அந்தப் பிரபல்யமான பேச்சு 1963 இல் ஆகஸ்ட் 28 இல் நிகழ்ந்தது. பெருந்திரளாக, அமெரிக்காவின் பல பகுதிகளிலிருந்தும் அவருடைய பேச்சை கேட்க என்று வந்திருந்த கறுப்பு இன மக்களிடையே அவர் நிகழ்த்திய உரையிலிருந்து சில பகுதிகள் இதோ:

'சரித்திரத்தில் இந்த நாள் பதியும்.... நாம் நம் நாட்டின் தலைநகருக்கு காசோலை (cheque) ஒன்றை மாற்ற வந்துள்ளோம். நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தையும், சுதந்திரத்தையும் வகுத்தவர்கள், அமெரிக்கர்களின் சந்ததிகளுக்கு ஒரு கடன் பத்திரத்தை (Promissory note) கையொப்பம் இட்டுக் கொடுத்தார்கள். அந்தப் பத்திரத்தின்படி அவர்கள் எல்லா அமெரிக்கர்களுக்கும், ஆம், கறுப்பு மற்றும் வெள்ளை இன மனிதர்களுக்கு மாற்றம் இல்லாத உறுதி செய்யப்பட்ட உரிமைகளை வழங்கினார்கள். அந்த உரிமைகள்: வாழ்க்கை (Life) சுதந்திரம் (Liberty (and) மகிழ்வை நோக்கிய பயணம் (Pursuit of Happiness). இன்றைக்கு அமெரிக்கா அந்தக் கடன் பத்திரத்தின்படி நடந்து கொள்ளத் தவறிவிட்டது. கடனைத் திருப்பித் தராமல் காசில்லை என்கிறது. அமெரிக்க கறுப்பு இன மக்களுக்கு உபயோகம் இல்லாத காசோலையை கொடுத்துள்ளது தெரிய வந்துள்ளது. கொடுத்த காசோலை 'போதுமான பணம் இல்லை' (Insufficient funds) என்று காரணமிடப்பட்டு திருப்பப்பட்டுள்ளது. நூதனமான நமது போராட்டங்களை வன்முறையாக மாற்றி விடக்கூடாது மீண்டும் மீண்டும் நாம் உடல் பலத்தை ஆன்ம பலத்தால் வெற்றி கண்டு உயர உயரப் போக வேண்டும்......"



இப்படி மார்டின் லூதர் கிங் ஜுயர் களவு விரிகின்றது. அந்தக் களவு நனவானது பற்றி இன்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. வலிமை வாய்ந்த உலகின் தலைவிதியை கணிசமான அளவில் நிர்ணயிக்கும் வல்லமை வாய்ந்த பொறுப்பில் இன்று அமெரிக்க ஜனாதிபதி யாக இருப்பவர் ஓபாமா. கனவு காணுங்கள். அமைதியான மனம் ஆன்ம பலத்தைத் தரும். அலைகடல் நடு மையத்தில் ஆழமானது. ஆனால் அமைதியானது. தியானம், யோகம் போன்றவை நம் முன்னோர் நமக்குத் தந்த பெரும் செல்வங்கள்.

**பேணுங்கள், பயன் அடையுங்கள்.**

அன்றாட வாழ்வில், நித்தம் நித்தம் சந்திக்கும் பிரச்சினைகளுக்கும் அமைதியான மனம் உங்களுக்கு வழி கூறி உங்களை வழிநடத்தும். செய்து பாருங்கள். தோற்றவர் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பொறுமைதான் தேவை. கடன்களைக் குறைக்க வேண்டுமா? அமைதியான மனம் உங்களுக்கு வழிகாட்டும். ஓய்வு காலத்துக்கு போதிய பணம் தேவையா? அமைதியான மனம் உங்களுக்கு வழிகாட்டும். பிள்ளைகள் படிப்புக்கு என்ன செய்வோம் என்று யோசிக்கிறீர்களா? அமைதியான மனம் உங்களுக்கு வழிகாட்டும். வீடு வாங்க வேண்டுமா? அமைதியான மனம் உங்களுக்கு வழிகாட்டும். செல்வந்தனாக வேண்டுமா? அமைதியான மனம் உங்களுக்கு வழிகாட்டும்.

மகிழ்வோடு வாழ்வை நடத்த வேண்டுமா? அமைதியான மனம் உங்களுக்கு வழிகாட்டும். குடும்பத்தில் உறவுகளில் பிரச்சினையா? அமைதியான மனம் உங்களுக்கு வழிகாட்டும். மனத்தால் நீங்கள் கற்பனை செய்யக்கூடியதெல்லாம் நடைமுறைச் சாத்தியமே! இன்று காண்பதெல்லாம் என்றோ, யாரோ செய்த கற்பனைகளே!

நல்ல எண்ணங்கள், நல்ல கற்பனைகள் நன்மையைத் தருகின்றன. தீயவை தீய பயத்தால் தீயினும் அஞ்சப்படும். தீயவை தவிருங்கள். இக்கட்டுரை ஒரு தூண்டு கோலே. உங்களிடமே உங்களுக்குத் தேவையானது எல்லாம் தரப்பட்டிருக் கின்றது. தட்டுங்கள், திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும்.

தட்ட மறுத்தால், கேட்க சோம்பித்தால், கனவுகள்....கனவு நிலையிலேயே நின்று விடும். கனவை நனவாக்குங்கள். வாழ்க வளமுடன். இக்கட்டுரை ஆசிரியரின் இணையதள முகவரிகள்:
www.dreamsandmoney.com,
www.perrii.com
ஆலோசனை பெற
தொலைபேசி எண்:
416.473.6100



**பெரி. முத்துராமன்**

# மரண அறிவித்தல்



**தோற்றம்: 17.05.1931** **மறைவு: 29.07.2011**

## திருமதி. சரோஜினிதேவி முத்தையா

கொழும்பை பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வாழ்ந்துவந்தவருமான திருமதி. சரோஜினிதேவி முத்தையா 29.07.2011 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் பரிபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கு.வை. முத்தையா (நயினாதீவு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களாகிய மங்கையக்கரசி, நீலாதாச்சி, கனகசபாபதி, மகேஸ்வரி, இரத்தினசபாபதி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களாகிய திருமதி நாகமணி ஆசைப்பிள்ளை (நயினாதீவு), கந்தையாவின் மைத்துனியும் ஆவார். காலஞ்சென்ற ராஜா, தேவி (இலங்கை), லேடி (ஜேர்மனி), பேபி (இலங்கை), சிவா, அருள், முருக்ஸ், யசோ, ஷன், வினோத், சத்தியா (கனடா), உமா (U.S.A) ஆகியோரின் அன்புத்தாயாரும், சாந்தா, காலஞ்சென்ற கணேஷலிங்கம், சிவகுமார், ராணி, சிறி, கிளி, சன்னிகா, பரன், லக்ஷ்மி, நிர்மிலி, குமரன், ரகு ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மற்றும் பேத்தியும் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ***July 31, 2011*** ஞாயிற்றுக்கிழமையும், ***August 01, 2011*** திங்கட்கிழமையும் மாலை 5:00 மணி - 9:00 மணி வரை ***4146 Sheppard Ave. E.*** இல் அமைந்துள்ள ***Ogden Funeral Home*** இல் பார்வைக்காக வைக்கப்பட்டு மறுநாள் செவ்வாய்க்கிழமை ***August 02, 2011,*** **Mount Pleasent Crematorium,** 375 Mount Pleasent Ave. Between St. Clair & Eglinton இல் காலை 9:30மணி - 11:30 மணி வரை கிரியைகள் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**தகவல்:** பிள்ளைகள், மருமக்கள் **தொடர்புகளுக்கு:** ***905.472.7834 / 416.903.8761 / 416.988.0754***

# திரைவிமர்சனம்...

22 ஆம் பக்கத்தொடர்ச்சி

வைக்கிறது. இதுபோல் இன்னும் பல சொல்லலாம். குழாயில் ஒழுகும் தண்ணீரைக் கண்டுகொள்ளாமல் எல்லோரும் கடந்து செல்ல, விக்ரம் மட்டும் அதை மூடுகிறார்.



ஒரு ஆள் கூட இல்லாத சிக்னலில் பச்சை விளக்கு எரியும் வரை நின்று செல்வதும் ஆஹா போட வைக்கிறது. இந்தப் படத்தில் இரண்டு பாடல்களை, விக்ரம் தன் சொந்த குரலில் பாடியும் இருக்கிறார். “ப பா ப பா வருதே எனக்கு பாப்பா” பாடலில் நல்ல உணர்வு.

அமலா போல் ஒரு குட்டி பாத்திரத்தில் வருகிறார். அதிகம் வேலை இல்லை. அமல-ாவின் அப்பாவாக வரும் சச்சின், இந்தி நடிகர். கொஞ்சமும் மிகை இல்லாத நடிப்பால், தமிழுக்கு ஒரு நல்வரவாக தென்படுகிறார். ஆரம்பக் காட்சியில் ஏதோ அரை குறை வக்கீலாய் காட்டப்படும் அனுஷ்கா, மெல்ல விக்ரமின் கதை கேட்டு அவருக்காக சந்தானம், பிரியா, ஜமாவோடு நீதிமன்றத்திலும் வெளியிலும் போராடும் காட்சிகள் சுவாரஸ்யம். சந்தானம், நகைச்சுவைக்காகத்தான் இருக்கிறார் என்றாலும் கதையோடு ஒன்றிய ஒரு பாத்திரமாய் வருகிறார். எம்.எஸ்.பாஸ்கருக்கு வழக்கமான பொண்டாட்டி மேல் சந்தேகப்படும் கொமெடிதான். என்றாலும் பரவாயில்லை. நிரவ்ஷாவின் ஒளிப்பதிவில் ஊட்டி இன்னும் அழகாக இருக்கிறது. ஜி.வி.பிரகாஷ்குமாரின் பாடல்களை விட பின்னணியிசை நன்றாக வந்திருக்கிறது. நா.முத்துகுமாரின் பாடல் வரிகள் காட்சிகளோடு இணைந்து பயணிக்கிறது. இயக்கம்: விஜய் விக்ரமின் பாத்திரப் படைப்பே சொல்லி விடுகிறது, எவ்வளவு மெனக்கெட்டிருப்பார் என்று. கதாநாயகன், கதாநாயகி என்றால் காதல் வந்தாக வேண்டும் என்ற கட்டாயமில்லாத தமிழ்ப்படம். இதற்காகவே விஜய்க்கு முதலில் கைகுலுக்கலாம். அனுஷ்காவையும் அமலாவையும் இவ்வளவு பாந்தமாகக் காட்டியதற்கு மீண்டும் கைகுலுக்கள்.

கொஞ்சம் மெதுவாக செல்லும் திரைக்கதை. விக்ரம், அனுஷ்காவை கட்டிப்பிடித்ததும் வரும் தேவையேயில்லாத கனவு பாட்டு வசனம் உட்பட நிறைய காட்சிகள் அப்படியே ‘ஐம் சாம்’ படத்தில் இருப்பது போல் வருவது வில்லன் வேண்டும் என்பதற்காக எம்.எஸ்.பாஸ்கர் பாத்திரத்தையும், அவரின் மனைவி பாத்திரத்தையும் சிதைத்தது. இப்படி சில குறைகள் இல்லாமல் இல்லை. ஆனால், எல்லாவற்றையும் மீறி இப்படியொரு களத்தை தேர்வு செய்ததால் நிற்கிறார்.

தெய்வத் திருமகள் - தமிழ் சினிமாவின் மகள்!














